Not for sale

ஜூலை - ஆகஸ்டு 2014

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## புறஜாதியாரின் காலம் முடிவடைந்தது - 100 வருடங்களின் நிறைவு

நேபுகாத்நேச்சார் மற்றும் புறஜாதிகளின் ஆதிக்கம் • 1914 மற்றும் 2014 - ல் மகா பாபிலோன் • நம்முடைய ஆண்டவரின் மாபெரும் தீர்க்கதரிசனம் சட்டப்படி புறஜாதிகளை அகற்றுதல் • பிதாவின் காலத்தில் இஸ்ரயேல் தரிசனம் தாமதித்தல்

1914 - 2014

# ஆதியிலே



சுவிசேஷ யுக முடிவில் இந்த உலக இராஜ்யத்திலிருந்து தேவனுடைய இராஜ்யத்திற்கு மாறக்கூடிய காலத்தில் வாழக்கூடிய நாம் பாக்கியவான்களாக இருக்கிறோம். இந்த புறஜாதி தேசங்கள் வல்லமையாக செயல்படுவதற்காக தேவன் தந்திட்ட இந்த அனுமதியானது, இந்த மனுக்குலத்திற்கு அறிவைப் புகட்ட வேண்டுமென்ற ஒரு முக்கிய நோக்கமாகும். இதன் கீழ் வாழக்கூடிய சகல ஜனங்களுக்கும் இது ஒரு வேதனையான அனுபவமாக இருந்துகொண்டுவருகிறது.

பிரமாண்டமான ஒரு மரம் வெட்டப்பட்ட ஒரு தரிசனத்தைப் பற்றி, "நேபுகாத்நேச்சார் மற்றும் புறஜாதியின் ஆதிக்கம்" என்ற தலைப்பு ஆராய்கிறது. நேபுகாத்நேச்சார் ஒரு மிருகத்தைப்போல மாறி வெளியின் மிருகங்களோடு புல்லை புசிக்க வேண்டியதாக இருந்தது. இது புறஜாதிகளின் நெருக்கப்பட்ட ஆட்சியை இந்த அனுபவம் விவரிக்கிறது. இவைகள் அனுமதிக்கப்பட்ட நோக்கம் பல்வேறு கோணங்களில் ஆராயப்படுகிறது.

பண்டையகால பாபிலோனை கிறிஸ்தவ மண்டலத்தின் நிழலாக, "1914 மற்றும் 2014-ல் மகா பாபிலோன்" என்ற தலைப்பு விவரிக்கிறது. பண்டையகால பாபிலோன் படிப்படியாக அழிக்கப்பட்டதுபோல, நிஜமான பாபிலோனின் அழிவும் படிப்படியாக நடைப்பெறும். இந்நாள் வரைக்கும் தொடர்ந்து நடைப்பெறுகிறது. இக்காரியம், குறிப்பாக கிறிஸ்தவர்கள் பாபிலோனில் பெற்ற பொறுப்புகளை விட்டுவெளியேறவும், சத்தியத்தைப் பிரசங்கிக்கவும் ஆண்டவர் செய்யக்கூடிய காரியங்களைக் கவனிக்கவும் செய்கிறது.

யூத யுகத்தின் முடிவைக்குறித்தும், சுவிசேஷ யுகத்தின் முடிவில் அவருடைய பிரசன்னத்தைக் குறித்தும் இவைகளுக்கு இடையில் நடக்கக்கூடிய சம்பவங்களைக் குறித்தும் இயேசு தம்முடைய சீஷர்களுக்குக் கொடுத்த இறுதியான கட்டளைகளைக் கொண்டிருக்கும் லூக். 21-ல், "நம்முடைய ஆண்டவரின் மாபெரும் தீர்க்கதரிசனம்" என்ற தலைப்பு ஆராய்கிறது. நாம் தீர்க்கதரிசனங்களின் அடையாளங்களைக் கவனிக்கும்போது, நம்முடைய மீட்பு சமீபித்திருப்பதால், நம்முடைய தலைகளை உயர்த்தும் படிக்கு இயேசு நம்மை ஊக்குவிக்கிறார் (லூக். 21:28).

தேவனுடைய இராஜ்யம், ஆயத்தத்திற்காக புறஜாதிகளின் அரசாங்கங்களைப் புறக்கணித்து இஸ்ரயேலை அவர்களிடமிருந்து இரட்சிக்க தேவன் நியமித்திருக்கும் செயல்முறைகளை, "புறஜாதிகளை சட்டப்படி அகற்றுதல்" என்ற தலைப்பு விவரிக்கிறது. கடந்தகாலம் மற்றும் நிகழ்காலத்தைக் குறித்த வேத மாணவர்களின் எதிர்பார்ப்புகளும் ஆராயப்படுகிறது.

தேவனால் தேர்ந்தேடுக்கப்பட்ட ஜனங்களை, சீர்பொருந்தும் செயல் முறையை, "தேவனுடைய காலத்தில் இஸ்ரயேல்" என்ற தலைப்பு விவரிக்கிறது. பால்போர் பிரகடணம், இஸ்ரயேலர்கள் கூட்டிச் சேர்த்தல், சர்வநாசம் மற்றும் பல்வேறு யுத்தங்களைப் போன்ற சம்பவங்கள் அவைகளின் வரலாற்று ஆதாரங்களோடு ஆராயப்படுகிறது. நீண்ட காலமாகக் காத்திருக்கும் சீர்பொருந்துதலின் காலத்தோடு இஸ்ரயேலின் சீர்பொருந்துதலும் வசனங்களோடு தொடர்புடையதாக இருக்கிறது. அவர்கள் தேவன் மேல் விசுவாசம் வைப்பதற்கு இந்தத் தீர்க்கதரிசனங்களை இஸ்ரயேலுக்கு சுட்டிக்காண்பிப்பதற்கு நாம் ஊக்குவிக்கப்படுகிறோம்.

இயேசு, தம்முடைய இராஜ்யத்தை முதல் வருகையிலே துவங்குவார் என்ற சீஷர்களின் எதிர்பார்ப்புகளை, "தரிசனம் தாமதித்தல்" என்ற இறுதி கட்டுரை விவரிக்கிறது. ஆனால், அது பல நூற்றாண்டுகளாக தாமதித்தது. 18 நூற்றாண்டுகளுக்குப் பின் வில்லியம் மில்லர் மற்றும் நெல்சன் பார்பர் என்பவர்கள், ஆண்டவரின் காணக்கூடிய வருகையைக்குறித்து பிரசங்கித்தப்போது, அதுபோல் எதிர்பார்ப்புகள் காணப்பட்டது. இவைகள் மேலும் வேத ஆராய்ச்சிகளுக்கு வழிநடத்தியது. அதற்குப் பின், தீர்க்கதரிசனங்களைத் தெளிவாகப் புரிந்துகொள்வதில் வளர்ச்சிக் காணப்பட்டது. ஆண்டவரின் வருகையைக் குறித்து தெளிவான புரிந்துகொள்ளுதலைப் பெற்றிருந்தாலும், இராஜ்யம் ஸ்தாபிக்கப் படுவதில் தாமதம் காணப்பட்டது. "நம்மு டைய நம்பிக்கையை அறிக்கையிடுவதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டு விடக்கூடாது" (எபி. 10:23, 25) என்று இறுதியாக எச்சரிக்கப்படுகிறோம்.

இப்படிப்பட்ட மனப்பூர்வமான எச்சரிப்பு களோடு, இந்த வருடாந்தர பிரதியை வெளியிடுகிறோம்.

**ஜுலை/ ஆகஸ்டு 2014**


**நேபுகாத்நேச்சார் மற்றும் புறஜாதிகளின் ஆதிக்கம்** 64

ஆட்சி சீர் பொருந்துதல்

**1914 மற்றும் 2014-ல் மகா பாபிலோன்** 69

பாபிலோனின் முடிவு

**நம்முடைய ஆண்டவரின் மாபெரும் தீர்க்கதரிசனம்** 74

லூக்கா 21

**சட்டப்படி புறஜாதிகளை அகற்றுதல்** 80

செயல்முறை

**பிதாவின் காலத்தில் இஸ்ரயேல்** 85

இஸ்ரயேலின் சீர்பொருந்துதல்

**தரிசனம் தாமதித்தல்** 90

விழித்திருந்து ஜெபியுங்கள்

**தீர்க்கதரினத்தில் இன்று** 94

# நேபுகாத்நேச்சார் மற்றும் புறஜாதிகளின் ஆதிக்கம்



"அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது; இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும்" (தானி. 4:16).

Tom Ruggirello

குறிப்பாக உலகளவில் எல்லா நிலைகளிலும் நேபுகாத்நேச்சார், வரலாற்றில் ஒரு சிறந்த இடத்தைப் பெற்றிருந்தார். பாபிலோன் மாநகரத்தையும், அதின் தேசத்தையும் மீண்டும் அவர் கட்டியெழுப்பினதால், அவருடைய கீர்த்தி மிகவும் பிரசித்தமானது.

இப்போது, பாபிலோனிய சரித்திர குறிப்புகள் என்று அழைக்கப்படும் அநேக களிமண் பலகைகளை 19-ம் நூற்றாண்டில் தென் ஈராக்கில் கண்டுபிடித்து, பிரிட்டீஷ் பொருட்காட்சியில் வைக்கப்பட்டது. இதன் மொழிபெயர்ப்புகள் பிரிட்டீஷ் பொருட்காட்சியின் டொனால்ட் வைஸ்மேனால் 1956-ம் ஆண்டு வெளியிடப்பட்டது. இவர்கள் பாபிலோன் வரலாற்றை கிமு. 747-னிலிருந்து கிமு. 280 வரைக்குமுள்ள அதாவது, சுமார் 467 வருடங்கள் பதிவு செய்திருக்கிறார்கள். தந்தையாகிய நெபுபோலாசாரைப் போல, இதில் நேபுகாத்நேச்சாரின் இராணுவக் காரியங்கள் முதலில் விவரிக்கப்படுகிறது. இவரது தந்தை நெபுபொலாசார் பாபிலோனின் மேல் அசீரியரின் நுகத்தை அகற்றி, அசீரியர்களின் தலைநகரமாகிய நினிவே பட்டணத்தை அழித்தார்.

நினிவே பட்டணத்தின் அழிவுக்குப்பின் நேபுகாத்நேச்சாரின் தந்தை அவரை ஆரானுக்கு எதிராக அனுப்பினார். அங்கு மீண்டும் கூடியிருந்த அசீரியர்களின் கூட்டத்தினால் பட்டணம் விழுந்தது. மீண்டும், தொடர்ந்து வந்த வருடத்தில், அசீரியர்கள் பயமுறுத்தப்பட்டதினால் பாபிலோனிய படைகளைக் கண்டு பின்வாங்கினார்கள்.

இரண்டு வருடங்களுக்குப் பின், பாபிலோனிய படை ஐபிராத்துக்குக் குறுக்கேயுள்ள மூன்று பட்டணங்களை எடுத்துக்கொண்டது. அதற்குப் பின், இரண்டு வருடங்கள் சென்றபோது, இளைஞனான நேபுகாத்நேச்சார், தன்னுடைய தந்தையின் இராணுவ தலைமையில் எகிப்திய படையையும், மீதியிருந்த அசீரிய படைகளையும் பிரபலமாகப் பேசப்படும் கார்கெமிஷ் யுத்தம் என்ற போரில் முறியடித்தார் (எரே. 46:2). அவர் எகிப்தை தென்புறமாகத் துரத்திச் சென்ற போது, தன்னிடம் சரணடைந்த எருசலேமை ஏற்றுக்கொண்டு முதன்முறையாக யூதர்களை அடிமைகளாகக் கைப்பற்றினார். அதில் காணப்பட்ட சிறந்த இஸ்ரயேலர்களை அவர் பாபிலோனுக்குக் கொண்டுவந்தார். அதில் தானியேலும், அவருடைய மூன்று சிநேகிதர்களாகிய சாத்ராக், மேஷாக், ஆபேத்நெகோ அடங்குவார்கள் (தானி. 1:1-6).

மேலும், எருசலேமை முற்றிலுமாக அழித்து, சிதேக்கியாவை சிறைப்பிடித்துச் செல்லும் வரைக்கும் இரண்டு முறைகள் நேபுகாத்நேச்சார், இஸ்ரயேலர்களின் தொடர்ச்சியான புரட்சிக்குப் பதிலளித்தார். எப்படிப்பட்ட காலத்திற்குரிய தலைமைக்குத் தண்டனையாக சிதேக்கியாவுக்கு மிக விநோதமானதும், கொடூரமானக் காரியம் நிகழ்த்தப்பட்டது. சிதேக்கியா, இறுதியாக தன்னுடைய பிள்ளைகள் மரிக்கக்கூடிய காட்சியைக் காணவேண்டும் என்பதற்காக, அவருடைய இரண்டு குமாரர்களும், அவருடைய கண்களுக்கு முன் கொல்லப்பட்டவுடன், சிதேக்கியாவின் கண்கள் பிடுங்கப்பட்டது. பாபிலோன் சிறையில், சிதேக்கியாவும் மரித்துப் போனார்.

இஸ்ரயேல் ஜாதியோடு தேவன் கொண்டிருந்த விசேஷித்த தொடர்பினிமித்தமாக, பண்டைய கால வரலாற்றில் இப்படிப்பட்ட சில முக்கியமான சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளது. இஸ்ரயேலின் சிறையிருப்பு அவர்களின் தேசத்தின் மேல் அதிகாரம் செலுத்தும்படிக்கு புறஜாதிகளின் காலம் துவங்கினதைக் குறிப்பிடுகிறது.

நேபுகாத்நேச்சாரின் இராணுவ செல்வாக்குகள் விசேஷமாக பாபிலோன் பட்டணத்தின் தலைநகரத்தில் அவர் கட்டின பல்வேறு கட்டிடங்கள், அவருக்குத் தனிப்பட்ட வகையில் பெருமை சேர்த்தது. அவருடைய சகல கிரியைகளின் பெருமைக்குரிய வார்த்தைகளை தானி. 4:30-ல் காணலாம்."இது என் வல்லமையின் பராக்கிரமத்தினாலும், என் மகிமைப்பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரமனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா என்று சொன்னான்."

நேபுகாத்நேச்சார் அடைந்த பெருமை நியாயமானது என்று சிலர் கூறலாம். ஏனெனில், அவர் ஒரு சிறந்த இராணுவ வீரனாகவும், பாபிலோனை

மீண்டும் சிறந்த முறையில் அற்புதமாகக் கட்டியெழுப்பின கட்டிட நிபுணராகவும் இருந்தார்.

அவருடைய திட்டத்தினாலும், பொறியியல் அறிவினாலும் பாபிலோனை ஒரு வளமிக்க தேசமாக மாற்றினார். "நேபுகாத்நேச்சாராகிய நான் என் வீட்டிலே சவுக்கியமுள்ளவனாயிருந்து என் அரமனையிலே வாழ்ந்துகொண்டிருந்தேன்" (தானி. 4:4) என்று அவர் கூறினார். ஆனால், இந்த வெற்றிக்கும், சுபிட்சமான வாழ்க்கைக்கும் மத்தியில் நேபுகாத்நேச்சாரின் வாழ்க்கை திடீரென்று மாற்றங்கள் ஏற்பட காத்திருந்தது. தேவன் அவருக்குக் காண்பித்த ஒரு சொப்பனம், அவரை அலைக்கழித்து பயமுறுத்தியது. அந்தச் சொப்பனத்தின் நிறைவேற்றம் அவருடைய மீதியுள்ள வாழ்க்கையில் ஆழந்த பாதிப்புகளை ஏற்படுத்தியது.

**ஒரு மரம் வெட்டப்பட்டது**

தானியேல் 4-ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்ட சொப்பனத்தின் விவரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது. அனைவருக்கும் ஆகாரத்தையும், நிழலையும் கொடுக்கக்கூடிய ஒரு பெரிய விருட்சத்தை நேபுகாத்நேச்சார் கண்டார். வானத்திலிருந்து இறங்கின ஒரு தூதன், அந்த விருட்சம் வெட்டப்பட வேண்டுமென்றும், அதன் கிளைகள் தரிக்கப்பட்டு, கனிகள் சிதறடிக்கப்பட வேண்டுமென்றும் கட்டளையிட்டார். ஆயினும், அதன் அடிமரம் இரும்பினாலும், வெண்கலத்தினாலும் விலங்கிடப்பட்டிருக்க வேண்டுமென்று கூறினார். இந்த விருட்சத்தைக் குறித்து, "அவனுடைய இருதயம் மனுஷ இருதயமாயிராமல் மாறும்படி, மிருக இருதயம் அவனுக்குக் கொடுக்கப்படக்கடவது; இப்படியிருக்கிற அவன்மேல் ஏழு காலங்கள் கடந்துபோகவேண்டும்" (தானி. 4:16) என்று அந்த தூதன் கூறினார்.

இந்த சொப்பனத்திற்கான விளக்கத்தை தானியேலிடம் கேட்டபோது, அந்த சொப்பனம் நேபுகாத்நேச்சாரைக் குறித்ததததாகவே இருக்கிறது என்று தானியேல் விவரித்தார். அவர், "அது பெரியவரும் பலத்தவருமாயிருக்கிற ராஜாவாகிய நீர்தாமே; உமது மகத்துவம் பெருகி வானபரியந்தமும், உமது கர்த்தத்துவம் பூமியின் எல்லைபரியந்தமும் எட்டியிருக்கிறது" (தானி. 4:22) என்று கூறினார்.

அந்த விருட்சம் நேபுகாத்நேச்சாரையும், அனைத்து சொத்துக்கள் மேல் கொண்டிருந்த ஆளுகையையும் சித்தரித்தது. அதன் கிளைகளில் தங்கியிருக்கும் ஒவ்வொருவருக்கும், அந்த விருட்சம் ஆகாரத்தையும், நிழலையும் கொடுத்தது. ஆனால், அந்த விருட்சத்தின் உருவம், சுபிட்சமான விருட்சத்திலிருந்து தூய்மையாக்கப்பட்ட ஒரு மனுஷனாக மாறியது. தானியேல், தொடர்ந்து இந்த சொப்பனத்தின் விளக்கத்தை விரிவாகக் கூறினார். "ராஜாவே, அதின் அர்த்தமும் ராஜாவாகிய என் ஆண்டவன்பேரில் வந்த உன்னதமானவருடைய தீர்மானமும் என்னவென்றால்: மனுஷரினின்று நீர் தள்ளிவிடப்படுவீர்; வெளியின் மிருகங்களோடே சஞ்சரிப்பீர்; மாடுகளைப்போலப் புல்லைமேய்ந்து, ஆகாயத்துப் பனியிலே நனைவீர். உன்னதமானவர் மனுஷருடைய ராஜ்யத்தில் ஆளுகைசெய்து, தமக்குச் சித்தமாயிருக்கிறவனுக்கு அதைக் கொடுக்கிறார் என்பதை நீர் அறிந்துகொள்ளுமட்டும் ஏழு காலங்கள் உம்முடையபேரில் கடந்துபோகவேண்டும். ஆனாலும் விருட்சத்தின் வேர்களாகிய அடிமரம் தரையில் இருக்கட்டும் என்று சொல்லப்பட்டது என்னவென்றால்: நீர் பரம அதிகாரத்தை அறிந்தபின், ராஜ்யம் உமக்கு நிலைநிற்கும். ஆகையால் ராஜாவே, நான் சொல்லும் ஆலோசனையை நீர் அங்கீகரித்துக்கொண்டு நீதியைச் செய்து உமது பாவங்களையும், சிறுமையானவர்களுக்கு இரங்கி உமது அக்கிரமங்களையும் அகற்றிவிடும்; அப்பொழுது உம்முடைய வாழ்வு நீடித்திருக்கலாம் என்றான்" (தானி. 4:24-27).

"காலங்கள்" (Strong's - 5732) என்ற வார்த்தைக்கு - நியமிக்கப்பட்ட அல்லது குறித்த காலளவு என்று பொருள் கருதப்படுகிறது. நேபுகாத்நேச்சாருக்கு இது சொல்லர்த்தமான ஒரு வருடம். ஒரு மிருகத்தைப் போல புல்லை உண்ணும்படிக்குக் கட்டளைக்கொடுக்கப்பட்டது. ஆயினும், தானி. 7:25-ல், 3-1/2 காலங்கள் என்ற வார்த்தைக்கு அதே எபிரெய வார்த்தை பயன்படுத்தப்பட்டாலும், அங்கு ஒரு தீர்க்கதரிசன வருடத்திற்கு 360 "காலம்" கொண்டிருக்கும் பட்சத்தில் 3-1/2 காலங்களுக்கு கிபி. 539-லிருந்து கிபி. 1799 வரைக்குமுள்ள 1260 வருடங்கள் போப் மார்க்கத்தின் ஆதிக்கத்தைக் குறிக்கிறது. 4-ம் அதிகாரத்தில் பயன்படுத்தப்பட்ட "காலங்கள்" என்ற வார்த்தையில் தெளிவான பிரயோகம் விளக்க உதவுகிறது.

**"ஏழு காலங்கள்"**

ஏழு "காலங்கள்," 2520 அடையாளமான நாட்களாகும். (360x7= 2520) ஒரு பெருமையுள்ள இராஜா, தன்னை தாழ்த்துவதைக் காட்டிலும், இன்னும் ஒரு சிறந்த காரியத்தை இந்த சொப்பனத்தின் மூலம் தேவன் வெளிப்படுத்த

விரும்பினார். அதாவது, கிமு. 607-லிருந்து கிபி. 1914-வரைக்கும் தேவனுடைய ஜனங்கள் மேல் புறஜாதிகள் ஆட்சி செய்வதற்கு தேவன் அனுமதி கொடுத்ததையும் இது சித்தரிக்கிறது. இப்படிப்பட்ட ஆளுகையை தேவன் அனுமதித்த நோக்கத்தை, நேபுகாத்நேச்சாரின் தனிப்பட்ட வாழ்க்கையில் ஏற்பட்ட பாதிப்புகளில் காணப்படுகிறது.

"அந்த நாட்கள் சென்றபின்பு, நேபுகாத்நேச்சாராகிய நான் என் கண்களை வானத்துக்கு ஏறெடுத்தேன்; என் புத்தி எனக்குத் திரும்பிவந்தது; அப்பொழுது நான் உன்னதமானவரை ஸ்தோத்திரித்து, என்றென்றைக்கும் ஜீவித்திருக்கிறவரைப் புகழ்ந்து மகிமைப்படுத்தினேன்; அவருடைய கர்த்தத்துவமே நித்திய கர்த்தத்துவம், அவருடைய ராஜ்யமே தலைமுறை தலைமுறையாக நிற்கும். பூமியின் குடிகள் எல்லாம் ஒன்றுமில்லையென்று எண்ணப்படுகிறார்கள்; அவர் தமது சித்தத்தின்படியே வானத்தின் சேனையையும் பூமியின் குடிகளையும் நடத்துகிறார்; அவருடைய கையைத் தடுத்து, அவரை நோக்கி: என்ன செய்கிறீரென்று சொல்லத்தக்கவன் ஒருவனும் இல்லை என்றேன்" (தானி. 4: 34-35).

இது, நேபுகாத்நேச்சாரின் நீதிக்கான ஒரு அறுவடை. அவருடைய இறுமாப்பும், அகங்காரமும் சென்றது. இருதயத்தில் நிரப்பப்பட்டிருந்த பெருமையும் அழிந்தது. யோகோவா தேவனுடைய சர்வ வல்லமையை உணர்ந்தார். தன்னுடைய ஆளுகை எவ்வளவு தரம் குறைவுள்ளது என்றும், தேவனுடைய அனுமதியின்றி மனுஷன் எதையும் ஆளமுடியாது என்றும் உணர்ந்தார். மாற்றப்பட்ட இந்த ஒரு குணம், தெய்வீக திட்டத்தின் இலக்குகளில் ஒன்றாகும். பெருமை, பேராசை என்ற குணங்கள் இந்த உலகத்தை ஆட்சி செய்ய தனிப்பட்ட நபர்களிடமும், தேசங்களிடமும் காணப்படுகிறது. இவர்களைத் தொடர்ந்து அனுமதிக்கும்போது, நேபுகாத்நேச்சாரைப் போல, தாழ்மையான மனப்பக்குவத்தை இந்த உலகத்தை ஆட்சி செய்வதற்கு ஏறெடுத்த முயற்சிகள் திரளான ஜனங்கள் மத்தியில் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்தினதை மனுக்குலம் கடந்தகால நிகழ்வுகளை நினைவில்கொண்டு உணர்ந்துகொள்ளும்.

### அடிமரத்தை விட்டுவிடு

நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தில் தேவன் ஒரு நம்பிக்கையான விவரத்தைக்கொடுத்திருந்தார். அந்த விருட்சம் வெட்டப்பட்டு, கிளைகள் தரிக்கப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டாலும், அதன் அடிமரம் அதே இடத்தில் அப்படியே விடப்பட வேண்டுமென்று சொல்லப்பட்டது. நேபுகாத்நேச்சாரைப் பொறுத்தவரையில், வருங்காலத்தில் அவருடைய இராஜ்யம் மீண்டும் கொடுக்கப்படும் என்றும் பொருள்பட்டது. அதுபோல, புறஜாதிகளின் உலகத்திற்கும், அவர்களின் ஆளுகை திரும்பக்கொடுக்கப்படும் என்றும் பொருள்பட்டது. இந்த முழு அனுபவமும் மனுக்குலத்தினின்று ஆளுகையை முற்றிலுமாகப் பிடுங்குவது நோக்கமல்ல என்பது தெளிவாகிறது.

இந்தப் பூமியின் மேல் மனுஷனுடைய ஆளுகை அண்டசராசரத்தை ஆட்சி செய்யும் தேவனுடைய ஆளுகைக்கு இசைந்திருக்க வேண்டுமென்பதே முக்கிய நோக்கமாகும். அன்பு, நீதி என்ற கோட்பாடுகளே தேவனுடைய ஆளுகையில் அடிப்படையான சட்டங்களாகும். இதே பிரமாணங்கள் மனுஷனுடைய ஆளுகையிலும் உட்படுத்தப்பட வேண்டும். இக்காரியம் நேபுகாத்நேச்சார் அனுபவம் பெற்ற பின் பேசின வார்த்தைகளில் காணலாம். "ஆகையால் நேபுகாத்நேச்சாராகிய நான் பரலோகத்தின் ராஜாவைப் புகழ்ந்து, உயர்த்தி, மகிமைப்படுத்துகிறேன்; அவருடைய கிரியைகளெல்லாம் சத்தியமும், அவருடைய வழிகள் நியாயமுமானவைகள்; அகந்தையாய் நடக்கிறவர்களைத் தாழ்த்த அவராலே ஆகும் என்று எழுதினான்" (தானி. 4:37).

### இரும்பு மற்றும் வெண்கல சங்கிலிகள்

நேபுகாத்நேச்சாரின் சொப்பனத்தில் ஒரு விநோதமான காரியம் காண்பிக்கப்பட்டிருந்தது. அந்த அடிமரம், இரும்பினாலும், வெண்கலத்தினாலும் விலங்கிடப்பட்டிருந்தது. துரதிர்ஷடவசமாக இந்த விவரத்தை தானியேல் கொடுக்கவில்லை. ஆனால், இந்த சொப்பனத்திற்கும் லேவியராகமம் 26-ம் அதிகாரத்தில் சொல்லப்பட்ட வார்த்தைகளுக்கும் ஒரு தெளிவான ஒற்றுமை காணப்படுகிறது.

எகிப்தின் சிறையிருப்பிலிருந்து இஸ்ரயேலர்களை தேவன் விடுவித்தப் பின், அவர்களை விக்கிரக ஆராதனைக்கும், பெருமைக்கும் விலகியிருக்க வேண்டும் என்று கடுமையாக எச்சரித்தார். "இவ்விதமாய் நான் உங்களுக்குச் செய்தும், இன்னும் நீங்கள் எனக்குச் செவிகொடாதிருந்தால், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டித்து, உங்கள் வல்லமையின் பெருமையை முறித்து, உங்கள் வானத்தை இரும்பைப்போலவும், உங்கள்

பூமியை வெண்கலத்தைப்போலவும் ஆக்குவேன். உங்களுக்குள்ளே வெளியின் துஷ்டமிருகங்களை வரவிடுவேன்; அவைகள் உங்களைப் பிள்ளையற்றவர்களாக்கி, உங்கள் மிருகஜீவன்களை அழித்து, உங்களைக் குறைந்துபோகப்பண்ணும்; உங்கள் வழிகள் பாழாய்க் கிடக்கும்" (லேவி. 26:18, 19, 22) என்று கூறினார்.

ஏழு காலங்கள் நேபுகாத்நேச்சார் ஒரு மிருகத்தைப்போல வாழ்ந்தார். அதுபோல, ஏழு காலங்கள் இஸ்ரயேலருக்குள் காட்டு மிருகங்கள் அனுப்பப்பட்டு தண்டிக்கப்பட்டார்கள். நேபுகாத் நேச்சாரின் மிருக நிலை இந்த காட்டு மிருகங்களுக்கு ஒப்பிடப்படுகிறது. மேலும், நேபுகாத்நேச்சாரின் நாட்கள் துவங்கி, இஸ்ரயேலரை அடிமைப்படுத்தின புறஜாதிகளின் வல்லமையை இது விவரிக்கிறது. (தானியேல் 7-ம் அதிகாரத்தில், தேவனுடைய பார்வையில் நான்கு வல்லரசுகளும் அழிக்கக்கூடிய காட்டு மிருகங்களாக விவரிக்கப்படுகிறது. சிறகுகளுள்ள சிங்கமும், மூன்று விலா எலும்புகளை வாயில் கவ்விக் கொண்டிருக்கும் கரடி, நான்கு தலைகள், நான்கு சிறகுகளைக் கொண்ட சிறுத்தை மற்றும் நான்காவது, இரும்பு பற்களைக்கொண்டதும், பத்துக்கொம்புகளையுடைய பயங்கரமும், கெடியுமான மிருகமுமாய் இருந்தது. இவைகள் இஸ்ரயேல் தேசத்தை ஆண்டுவந்த புறஜாதி தேசங்கள். பாபிலோன், மேதோ பெர்சியா, கிரேக்கம் மற்றும் ரோமாபுரி). இஸ்ரயேலை தண்டிப்பதற்காக தேவனால் பயன்படுத்தப்பட்ட கருவிகளாக இருந்தனர். லேவியராகமம் புறஜாதியாரின் காலத்தைக் குறித்து ஒரு வித்தியாசமான தோற்றத்தைக் காட்டுகிறது. தானியேல் 4-ம் அதிகாரத்தில், புறஜாதிகளின் 2520 வருடங்கள் ஆட்சி செய்ய அனுமதிக்கப்பட்டதை அவர்களின் கண்ணோட்டத்திலிருந்து காணலாம். ஆனால், இஸ்ரயேலர்களின் பார்வையில், அவர்கள் தேசிய அளவில் செய்த பாவத்திற்கு தண்டனைக் காலமாகக் கொடுக்கப்பட்டது.

தேசிய அளவிலான தண்டனையின் துவக்கக் காலத்தைக் குறித்து, எசேக்கியேலின் புத்தகத்தில் காணலாம். "பாகையைக் கழற்று, கிரீடத்தை எடுத்துப்போடு; அது இனி முன்போலிராது; தாழ்ந்தவனை உயர்த்தி, உயர்ந்தவனைத் தாழ்த்துவேன். அதைக் கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன், கவிழ்ப்பேன்; உரிமைக்காரனானவர் வருமட்டும் அது இல்லாதிருக்கும்; அவருக்கே அதைக் கொடுப்பேன்" (எசே. 21:26-27). ("கவிழ்ப்பேன்" என்று மூன்று முறைகள் சொல்லப்பட்ட வார்த்தைகள் - பாபிலோனுக்குப் பின் மூன்று புறஜாதி இராஜ்யங்கள் இஸ்ரயேலை ஆட்சி செய்யும் என்பதை விவரித்தது. ஒன்றன் பின் ஒன்றாக வரும் புறஜாதி இராஜ்யங்கள், முந்தின இராஜ்யத்தைக் கவிழ்த்துப் போடும் என்றும், இப்படியாக, தொடர்ந்து புறஜாதிகள் ஆட்சி செய்வார்கள் என்றும், தீர்க்கதரிசனமாக முன் விவரிக்கப்பட்டுள்ளது). இராஜாவாகிய சிதேக்கியாவிடம் பேசப்பட்ட இந்த வார்த்தைகள், இஸ்ரயேலின் மேல் புறஜாதிகளின் ஆதிக்கத்தின் துவக்கத்தை துல்லியமாகக் குறிப்பிட்டது. இது, 2520 வருடங்களாக புறஜாதிகளின் ஆட்சியோடு ஒத்துப்போகிறது.

புறஜாதியின் காலத்தில் இரண்டு நோக்கங்களை நாம் காணலாம். பெரிதான அளவில் இந்த முழு உலகமும் தேவனுடைய மேலான ஆளுகைக்கு இசைந்திராமல் ஆட்சி செய்ய இயலாது என்ற பாடத்தைக் கற்றுக்கொள்ளும். இஸ்ரயேல் ஜனங்களை அவர்களுடைய பாவத்திற்காக தண்டிப்பதற்கு தேவனால் பயன்படுத்தபட்டக் கருவிகளானார்கள்.

இந்த வேதபகுதியில், இஸ்லயேலின் வானம் இரும்பைப் போலவும், பூமி வெண்கலத்தைப் போலவும் இருக்கும் என்று ஆண்டவர் கூறுகிறார். அதாவது, எதிர்பார்க்கும் பலன்களை வானமும், பூமியும் கொடுக்காது என்று இங்குத் தெளிவாகக் குறிப்பிடுகிறது. இரும்பைப் போலிருக்கும் வானம் மழையைப் பொழியாது. ஆகவே, இது ஒரு வறட்சியான பஞ்சநிலையைக் காட்டுகிறது. வெண்கலம் போலிருக்கும் பூமி, குடியிருக்கும் உயிரினங்களைப் பராமரிக்காது என்பதை விவரிக்கிறது. இப்படியாக, இஸ்ரயேல் பாழாக்கப்படுதல் முழுமைப் பெறும். மேலும், இந்த வறட்சியான பஞ்சநிலை, இஸ்ரயேலுக்கும், தேவனுக்கும் இடையிலுள்ள ஐக்கியத்தில் ஏற்பட்ட முறிவையும் சித்தரிக்கிறது. இஸ்ரயேல், தேவனுக்குக் கீழ்ப்படிந்தால், அவர்களைப் பாதுகாத்து, பராமரிப்பதாக வாக்களித்திருந்தார். ஆனால், தேசிய அளவில் அவர்களின் துன்மார்க்கமான கிரியைகள் அவர்களுக்கு வரக்கூடிய ஆசீர்வாதங்களைத் தடுத்தது. "பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்" (லூக். 21:24) என்று தண்டனையின் காலம் இயேசுவால் அறிவிக்கப்பட்டது. பாபிலோனால் இஸ்ரயேல் தேசம் பாழாக்கப்பட்டதோடு, இந்த காலம் துவங்கி, முதலாம்

உலகப்போர் துவங்கப்பட்ட 1914-ம் வருடத்தில் நிறைவடைந்தது. அதைத் தொடர்ந்து வந்த சம்பவங்கள் இஸ்ரயேலரை மீண்டும் ஒரு ஜாதியாகக் கூட்டிச் சேர்த்தது. அதற்குப் பின் புறஜாதிகளின் ஆதிக்கம் குறைந்தது. மீண்டும், இஸ்ரயேலின் புதிய பிறப்பு, தேவனுடைய சொந்த கரத்தின் நவீன நாளின் அற்புதமாக வெளிப்பட்டுக்கொண்டு வருகிறது.

லேவியராகமத்தில், இரும்பும், வெண்கலமும் பயன்படுத்தப்பட்ட காரியங்கள் நேபுகாத்நேச்சார் என்ற அடிமரத்தில் இடப்பட்ட இரும்பு, வெண்கல விலங்கைப் பற்றிய அர்த்தங்களை நாம் புரிந்துகொள்வதற்கு ஏதுவாக இருக்கிறது. புறஜாதியாரின் காலம் ஆவிக்குரிய சுபிட்சமான காலமாக இருக்கவில்லை. இரும்பு மற்றும் வெண்கலத்தினால் விலங்குப் போடப்பட்டிருக்கும் வரையில், ஜனங்களுக்கு உண்மையான ஆசீர்வாதங்கள் வருவதற்கு வாய்ப்பில்லை. அதாவது, புறஜாதிகளின் ஆட்சிவரைக்கும் வானத்தின் ஆசீர்வாதங்களைப் பெற இயலாது. அதுபோல, வெற்றி சிறப்பதற்காக முயற்சிக்கும் இந்த உலக தலைவர்களின் ஆட்சியில், பூமி தன்னுடைய பலனைத் தருவதற்கு வாய்ப்பில்லை.

**பாடங்கள்**

நேபுகாத்நேச்சார் அனுபவங்களிலிருந்து பெற்ற பாடங்கள் நம்முடைய இருதயத்திற்கும், அடுத்து, தீர்க்கதரிசனமாகவும் உள்ளது. முதலில், பெருமைக் கொண்டிருந்த இராஜா தன்னைத் தாழ்த்தினார். அவருடைய ஆளுகை தேவனுடைய ஆளுகையைக் காட்டிலும் மிகக் குறைவானது என்று அவர் கற்றுக்கொண்டார். இதினிமித்தம் தேவனுடைய உன்னதமான அதிகாரத்தையும், மாட்சிமையையும் அவரால் உணரமுடிந்தது.

தீர்க்கதரிசனமாக நமக்கு இரண்டு வகைகளில், சாட்சியளிக்கப்படுகிறது. தெய்வீக திட்டத்தின் ஒரு முழுமையான பகுதியாக தேவன் இந்தப் பூமியின் மேல் புறஜாதிகளுக்கு அதிகாரம் கொடுத்தார். ஆனால், இந்த ஆளுகையின் அனுமதி பூமிக்குரிய கிறிஸ்தவ இராஜ்யத்தில் மட்டுமே, பலனுள்ள விளைவுகளைப் பிறப்பிக்கும். மனுக்குலம் தங்களுடைய வரலாற்றைத் திரும்பிப் பார்க்கையில், தேவனுடைய ஆளுகையோடு இசைந்திராத இந்த உலகத்தின் மதியீனமான அரசாங்கங்களைக் காண்பார்கள்.

தேவனுடைய ஒவ்வொரு தண்டனையும் கற்பிக்கக்கூடியதாக உள்ளது. புறஜாதிகளின் ஆட்சிக்குரிய அனுமதியும்கூட இஸ்ரயேலுக்குப் பாடம் கற்பிக்கும் கருவியாக இருந்தது. இந்த புறஜாதிகளின் வல்லமைகளை, மிருகங்களைப்போல இஸ்ரயேலுக்குள் தேவன் அனுமதித்தபோது, அவர் தம்முடைய ஜனங்களுக்குப் பெருமையின் விளைவுகளைப் பற்றியும், அந்நிய தெய்வங்களைப் பின் பற்றுவதினால் வரும் காரியங்களையும் கற்றுக்கொடுத்தார். இந்த அனுபவங்கள் மிக வேதனையாக இருப்பினும், கீழ்ப்படிதல் என்ற ஒரு அருமையான பலனை தரக்கூடியதாக இருக்கும். மேலும், முழு உலகத்தாலும் நீண்ட காலமாக பகைக்கப்பட்ட இவ்வளவு சிறிதான தேசத்தைப் பயன்படுத்தி, பிதாவாகிய தேவன் இந்தப் பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார்.

"உமது நீதிநியாயங்களினிமித்தம், ஒருநாளில் ஏழுதரம் உம்மைத் துதிக்கிறேன்" (சங். 119:164).

கொடுமையாய் தீ(மை)யின் ஜுவாலைகளுடே,

கொளுத்தும் போதே வேற்றெண்ணம் வேண்டாம்,

மாறுபட்ட எண்ணம் கொள்ளாமல், அவரது நாமப் புகழ்பாடு.

அவருக்காக பாடுபடும், துன்பம் தன்னில் தோள்கொடுக்கும்

உறுதிதன்னை எண்ணுகிறார், உண்மையாய் கணக்கீடு செய்கின்றார்.

சத்தியம் மறுத்து செய்திகள் எதிர்த்து, புறக்கணித்தே உம்மிடமே,

அன்பிற்குரியவர் பதிலுக்காய், முள்ளாய் திருப்பிக் குத்துகையில்,

இந்தப்பாதையில் பயணித்து, அழியாமைக்கே சென்றுவிட்ட

அவரையே நீயும் எண்ணிப்பார்த்து, நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்.

பாபிலோனின் முடிவு

# 1914 மற்றும் 2014ல் மகா பாபிலோன்



"மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது! " (வெளி. 18:2).

"மகா பாபிலோனைக்" குறித்த தேவனுடைய தீர்க்கதரிசன சித்திரங்கள் விவரமாகக் கொடுக்கப் பட்டுள்ளது. "நீரே அந்த பொன்னான தலை" (தானி. 2:38). மற்றும் "பாபிலோன் தேவனுடைய கரத்திலுள்ள பொற்பாத்திரம்" (வெளி. 17:4) என்பதிலிருந்து, "**மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்**" (தானி. 5:25). இறுதியாக, "பாபிலோன் தீடீரென்று விழுந்தது, முற்றிலுமாக அழிந்தது" (எரே. 51:8).

பாபிலோனின் பாவங்கள் எரேமியா 50 மற்றும் 51-ம் அதிகாரங்களில் விவரித்துக் கூறப்பட்டுள்ளது. இவனுடைய ஆளுநர்கள் தேவனுக்கு எதிராக தங்களையே உயர்த்திக்கொண்டு பெருமை பாராட்டினார்கள். யேகோவா தேவனுக்குப் பதிலாக, உருவங்களை வடித்துக் கொண்டார்கள். இவர்கள் தேவனைப் புறக்கணித்து, இஸ்ரயேலை மூர்க்கமாக அடிமைப்படுத்தினார்கள். இந்தப் பாவங்கள், பழங்காலத்து பாபிலோனை அழிவுக்கு வழி நடத்தியது.

**பழமையான பாபிலோன் ஒரு நிழல்**

பழமையான பாபிலோனை ஒரு நிழலாகப் பொறுத்துவதற்கு வசனத்தின் அதிகாரத்தை இயேசு அப்போஸ்தலனாகிய யோவான் வழியாக நமக்குத் தந்திருக்கிறார். ஆம், அந்தப் பட்டணம் அழிக்கப்பட்ட பின்பு, வெளிப்படுத்தலில் இனி வரக்கூடிய, "பாபிலோனைக்" குறித்து குறிப்பிடுகிறது. (வெளி. 14:8; 16:19; 17:5; 18:2, 10, 21).

பாபிலோன் சாம்ராஜ்யம் கிறிஸ்தவ மண்டலத்திற்கு ஒரு நிழலாக உள்ளது. தலைநகரமான பாபிலோன், வேசிகளின் தாயுமாகிய போப்மார்க்கத்தின் நிழலாகவும் இருக்கிறது. அவளுடைய குமாரத்திகள், புரட்டஸ்டன்ட் மதத்தினராக விவரிக்கப்படுகிறார்கள் (வெளி. 17:5). நிழலில், இஸ்ரயேலை, பாபிலோன் சிறைப்பிடித்துச் சென்றது. நிஜத்தில், உண்மையான சபை ஆவிக்குரிய அதிகாரத்தைப் பெற்றிருந்த பாபிலோனிடத்தில் சிறைப்பட்டிருந்தது. 70 வருடங்களுக்குப் பின் இஸ்ரயேலர் பாபிலோனை விட்டு வெளியேறினார்கள். "என் ஜனங்களே, நீங்கள் அவளைவிட்டு வெளியே வாருங்கள்" (வெளி. 18:4) என்ற கட்டளையை அறுவடையின் போது ஆவிக்குரிய இஸ்ரயேலர்கள் பெற்றார்கள்.

**சொல்லர்த்தமான "பாபிலோன்"**

பரலோகம் செல்வதற்காக, "தேவனுடைய வாசல்" என்று பொருள்படும் பாபில் (Babil) என்ற மகா கோபுரத்தை நிம்ரோத் கட்டினான். அந்த கோபுரத்தைக் கட்டி முடிப்பதற்கு முன், "பாபில்" என்ற கோபுரம் "பாபேல்" ஆக (குழப்பம்) மாறியது. ஏனெனில், தேவன் அவர்களை பூமியெங்கும் சிதறடிக்கும்படிக்கு அவர்களுடைய பாஷையைத் தாறுமாறாக்கினார் (ஆதி. 11:9). "பாபேலின் வீடு" என்றும் ஒரு பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. கானானில், பாகாலை வழிப்படுவதைப் போல, பாபிலோனில், "பேலை" ஆராதித்தனர்.

வரலாற்றில் பிரகாசமுள்ள வார்த்தைகளினால், பாபிலோன் விவரிக்கப்படுகிறது. "பொன்னான நகரம்," "இராஜ்யங்களின் மகிமை" மற்றும் "சிறப்பும் அழகும் வாய்ந்த பாபிலோன்" (ஏசா. 13:19; 14:4). பாபிலோனின் சட்டமைப்பு அம்சங்கள் தேசிய அரசாங்கங்கள் ஆதரிக்கும் கிறிஸ்தவ மண்டலத்தின் மத அமைப்புகளின் உலகப்பிரகாரமான மகிமைக்கு ஒத்திருக்கிறது.

**ஐபிராத்து நதி** பாபிலோன் சாம்ராஜ்யத்தை மட்டுமல்ல, பாபிலோன் பட்டணத்தையும் வடக்கிலிருந்து தெற்கு வரைக்கும் இரண்டாகப் பிரித்து விடுகிறது. அந்த நதியின் தண்ணீர் அந்தப் பட்டணத்தை அகழியாக சுற்றியுள்ளது. பாபிலோனின் பொருளாதார பலத்திற்கு ஐபிராத்து நதி ஒரு முக்கிய காரணமாக இருப்பதினால், அந்த அமைப்பை மேலோங்கி நிற்கச்செய்யும் ஜனங்களின் காணிக்கைகளும், பொருளாதார ஆதரவையும் இது அடையாளப்படுத்துகிறது (வெளி. 16:12; 17:15).

**பாபிலோனின் இரட்டை மதிற்சுவர்கள்**, 87 அடி அகலத்திலும், 350 அடி உயரத்திலும் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. நான்கு குதிரைகள் கொண்ட இரதம் ஒன்றுக்கொன்று எதிர்புறமாக வந்தபோதிலும், ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமல் பாபிலோனின் மதில் மேல் கடந்து செல்லும் என்பதை ஒரு ரோம வரலாற்று ஆசிரியர் எழுதுகிறார். இது கிறிஸ்தவ மண்டலம் முழுமையாக அரசியல் வல்லமைகளைக் கொண்டு பாதுகாக்கப்படுவதை அடையாளப்படுத்துகிறது.

கிரேக்க வரலாற்று ஆசிரியரைப் பொறுத்தவரையில் பாபிலோனின் சுற்றளவு கிட்டத்தட்ட 42 மைல்களாக ஒரு சதுரவடிவத்தில் இருந்தது. ஒரு பக்கத்திற்கு 25 கதவுகளாக மொத்தத்தில் அதற்கு 100 பித்தளைக் கதவுகள் இருந்தன. இரண்டு கதவுகளின் மத்தியில் ஒவ்வொரு கோபுரமாக மொத்தத்தில் 250 கோபுரங்கள் அமைக்கப்பட்டிருந்தது. பட்டணத்தின் உயர்வான

மதில்கள் கிறிஸ்தவ மண்டலத்தின் உலகப் பிரகாரமான ஞானத்தையும், ஜனங்கள் (தண்ணீர்கள்) மேலுள்ள கட்டுப்பாட்டையும் அடை யாளப்படுத் தக்கூடும். பாபிலோனை பாதுகாப்பாக வைப்பதற்கு கட்டப்பட்ட உயரமான பலமுள்ள மதில்கள், உறுதியான அவர்களின் ஆட்சியை அடையாளப்படுத்தலாம்.

பட்டணத்தில், **54 இராஜரீகமான அரமனைகளும்**, மிகப்பெரிய பேலின் பொற்சிலையைக் கொண்ட ஒரு கோயிலும் இருந்தது. நேபுகாத்நேச்சாரின் அரமனை சுற்றியுள்ள வெளிசுவர் மற்ற இரண்டு சுவர்களையும், ஒரு பெரிய கோபுரத்தை உள்ளே வைத்து ஆறு மைல் பரப்பளவு கொண்டிருந்தது. எகிப்து, தீரு, பாலஸ்தீனா பட்டணங்களிலுள்ள உச்சிதமானப் பொருட்களைக் கொண்டு, அந்த அரமனை அலங்கரிக்கப் பட்டிருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக, அங்குக் கட்டப்பட்ட **தொங்கும் தோட்டங்கள்** உலகத்தின் ஏழு அற்புதங்களில் ஒன்றாக இருந்தது. இதை இராஜரீகமான அரமனைகள் மிகப்பெரிய உருவச் சிலைகளைக் கொண்ட பெரிய ஆலயங்களை நமக்கு நினைப்பூட்டுகிறது.

ஆயினும், பாபிலோனின் மகிமையும், அதற்கு இருந்த சிறப்பு பாதுகாப்புகளும் ஐபிராத்து நதி திசைதிருப்பப்பட்டு, பாபிலோனை அதனுடைய எதிரிகள் கைப்பற்றினதைத் தடுக்கமுடியவில்லை. அதுபோல, கிறிஸ்தவ மண்டலத்தின் இராணுவ வல்லமை சொத்துக்கள் புறஜாதிகளின் காலம் நிறைவுபெறும் நிலையில் அதன் அழிவை தடுக்க முடியவில்லை.

**பாபிலோன் ஏன் அழிக்கப்பட்டது?**

நம்முடைய ஆண்டவர் சிறந்த ஆசிரியர் மட்டுமல்ல, அவர் எல்லா காலங்களுக்கும் உரிய சித்திரங்களை வரைவதிலும் வல்லுநர். "ஆவிக்குள் என்னை வனாந்தரத்திற்குக் கொண்டுபோனான். அப்பொழுது ஏழு தலைகளையும் பத்துக் கொம்புகளையும் உடையதும் தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்புநிறமுள்ள மிருகத்தின்மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக்கண்டேன். அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்" (வெளி. 17:3-4). இந்தப் பெயர் சபைக்கு இப்படிப்பட்ட வர்ணனையை யாரால் கொடுக்கமுடியும்?

இந்த ஸ்திரீயை அடையாளம் கண்டுபிடிப்பதில் சந்தேகமே வராது. ஏனெனில், அவளுடைய நாமம் அவளுடைய நெற்றியில் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், அதில், "பரிசுத்த கிரீடத்தின் பட்டத்தையும் பசும்பொன்னினாலே பண்ணி, கர்த்தருக்குப் பரிசுத்தம் என்னும் எழுத்துக்களை அதிலே முத்திரை வெட்டாக வெட்டி" (யாத். 39:30). பிரதான ஆசாரியனுடைய கிரீடத்திலுள்ள பெயரோ, 144000 பேர்கள் நெற்றியில் காணப்பட்ட பிதாவின் நாமமோ, ஆட்டுக் குட்டியானவரின் நாமமோ காணப்படாமல் (வெளி. 14:1), "மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் **நெற்றியில்** எழுதியிருந்தது " (வெளி. 17:5) என்று எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, "நாம் நம்முடைய கண்களை மூடினால் மட்டுமே அவளை நாம் கண்டுபிடிக்க முடியாதே தவிர, அவளைக் காணக்கூடிய யாவரும் அவள் யார் என்பதை எளிதில் அறிந்துகொள்வார்கள்."

அந்த ஸ்திரீ அவளுடைய தொழிலை வெளிப்படையாக அறிக்கையிடுவதிலும், எந்தவிதமான வெட்கமும் படுவதில்லை. ஆகவே, உண்மையான சபையை கற்புள்ள சபைக்கும், போலியான சபைகளை வேசிகளுக்கும் அடையாளப்படுத்தப்படுகிறது. இந்நாள் வரைக்கும்கூட போப்மார்க்கம் மற்ற எல்லா கிறிஸ்தவ சபைகளுக்கு தன்னை, "தாய் சபை" என்று சொல்லிக்கொள்கிறது.

ஒரு காலத்தில் பாபிலோன் தெய்வீக சத்தியத்தைக்கொடுக்கும் வேதாகமத்தை அடையாளப்படுத்தும் **பொற்பாத்திரத்தை** தன் கையில் பிடித்திருந்தது. ஆனால், பூமியின் இராஜாக்களோடு வேசித்தனம் செய்து, இந்தப் பூமியில் இராஜ்யத்தை ஸ்தாபித்து, "தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே!" (வெளி. 14:8). "இராஜாக்களின் தெய்வீக உரிமைகள்" தேவனிடத்திலிருந்து நேரடியாக போப்புக்கு கொடுக்கப்பட்டது என்று தவறாக உறுதிப்படுத் தப்பட்டது.

பாபிலோனின் பேல் அல்லது, "ஆண்டவரே" கானானியர்களின் தேவனாகவும் இருந்தது. அவனுடைய கோபத்தைத் தணிக்க, மனித பலிகள் அதாவது, முதற்பிறந்த குழந்தைகள் உயிரோடு தகனிக்கப்பட்டன (2 இரா. 16:3; 21:6; எரே. 19:5). இரகசியமான பாபிலோனும், "அந்த ஸ்திரீ பரிசுத்தவான்களின் இரத்தத்தினாலும் இயேசுவினுடைய சாட்சிகளின் இரத்தத்தினாலும் வெறிகொண்டிருக்கிறதைக் கண்டேன்; அவளைக் கண்டு நான் மிகவும் ஆச்சரியப்பட்டேன்" (வெளி. 17:6). இருண்ட யுகத்தில் மில்லியன் கணக்கானவர்கள் சித்தரவதைப் படுத்தப்பட்டு போப் அமைப்பினால் கொல்லப்பட்டார்கள். அவளுடைய

பாவங்கள் பரலோகத்தை எட்டியது. "அவளுடைய பாவம் வானபரியந்தம் எட்டினது, அவளுடைய அநியாயங்களைத் தேவன் நினைவுகூர்ந்தார்" (வெளி. 18:5).

**பாபிலோனின் அழிவைக்குறித்த எச்சரிப்பு-மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்**

பாபிலோனின் இராஜாவாகிய பெல்ஷாத்சார் தம்முடைய ஆட்சியின் இறுதி இரவில் ஒரு பெரிய விருந்தை ஏற்பாடு செய்திருந்தான். அந்த விருந்தின்போது, எருசலேம் ஆலயத்திலிருந்து பரிசுத்தமான பாத்திரங்கள் எடுத்துவரப்பட்டு, அதில் மதுபானங்கள் வழங்கப்பட்டது. அங்கிருந்து அவனுடைய மனைவிகளும், வைப்பாட்டிகளும் குடித்து மகிழ்ந்தார்கள். "அவர்கள் திராட்சரசம் குடித்து, பொன்னும் வெள்ளியும் வெண்கலமும் இரும்பும் மரமும் கல்லுமாகிய தேவர்களைப் புகழ்ந்தார்கள். அந்நேரத்திலே மனுஷ கைவிரல்கள் தோன்றி, விளக்குக்கு எதிராக ராஜ அரமனையின் சாந்து பூசப்பட்ட சுவரிலே எழுதிற்று; எழுதின அந்தக் கையுறுப்பை ராஜா கண்டான்" (தானி. 5:4-5). திடீரென்று ஒரு விசித்திரமான ஒரு விரல் தோன்றி, "**மெனே, மெனே, தெக்கேல், உப்பார்சின்**" என்று அரமனை சுவற்றில் எழுதியது (தானி. 5:25).

இந்த வார்த்தைகள் முழுமையான அர்த்தம் கொண்டவைகள். பயமும், திகிலுமடைந்த இராஜா, அதனுடைய விளக்கத்தை அறிந்துகொள்ளும்படியாக, தானியேலுக்கு ஆள் அனுப்பினான். பழமையான பாபிலோன் மற்றும் ஆவிக்குரிய பாபிலோனின் மேல் வரப்போகிற தேவனுடைய நியாயத்தீர்ப்பு மிகத் தெளிவாக வெளிப்பட்டது. "இந்த வசனத்தின் அர்த்தமாவது:

**மெனே** - தேவன் உன் ராஜ்யத்தை மட்டிட்டு, அதற்கு முடிவுண்டாக்கினார் என்றும், **தெக்கேல்** - நீ தராசிலே நிறுக்கப்பட்டு, குறையக் காணப்பட்டாய் என்றும், **பெரேஸ்** - உன் ராஜ்யம் பிரிக்கப்பட்டு, மேதியருக்கும் பெர்சியருக்கும் கொடுக்கப்பட்டது என்றும் அர்த்தமாம் என்றான்" (தானி. 5:26-28).

பெருமையினிமித்தமும், அகந்தையினிமித்தமும் பாபிலோன் அழிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இராஜாவும் மற்ற மந்திரிகளும் விருந்துண்டிருக்கையில், ஆச்சரியவிதமாக மற்றொரு பக்கத்தில் கோரேஸ் மற்றும் அவருடைய படைவீரர்கள் பாபிலோனைக் கைப்பற்றினார்கள்,

எழுதப்பட்ட அந்த எழுத்துக்களில், புறஜாதியாரின் ஆளுகை காலமும் கணக்கிடப்படுகிறது. இந்த வார்த்தைகளின் பாபிலோனிய அளவின் மதிப்புகளை நாம் கணக்கிடலாம்.

மெனே = 1000 கேரா

மெனே = 1000 கேரா

தெக்கேல் = 20 கேரா

உப்பார்சின் = 500 கேரா

இவைகளின் மொத்த எடை 2520 கேரா ஆகும். இந்த நிறுவை புறஜாதிகளின் காலங்களுக்குப் பொறுத்தமாக உள்ளது (லேவி. 26:18, 21, 24, 28; தானி. 4:25, 32). இப்படியாக, பாபிலோனின் அளவின்படியும், அவர்களின் காலம் நிர்ணயிக்கப்பட்டது.

அதுபோல, நிஜமான பாபிலோன் (கிறிஸ்தவ மண்டலம்) அதனுடைய அவிசுவாசத்தினிமித்தம் வாதை அழித்துவிடும் என்று எச்சரிக்கப்பட்டு, அந்த எச்சரிப்புகள் கவனியாமல் விடப்பட்ட போது புறக்கணிக்கப்பட்டது. "மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது ... அவளுக்கு வரும் வாதைகளாகிய சாவும் துக்கமும் பஞ்சமும் ஒரே நாளிலே வரும்; அவள் அக்கினியினாலே சுட்டெரிக்கப்படுவாள்; அவளுக்கு நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் தேவனாகிய கர்த்தர் வல்லமையுள்ளவர்" (வெளி. 18:2, 8).

பழங்காலத்து நதியாகிய ஐபிராத்து நதி திசைதிருப்பப்பட்டு, கோரேஸால் பட்டணம் பிடிக்கப்பட்டது. அதுபோல, ஆறாவது தூதன், மகா நதியான ஐபிராத்தின் மேல் கலசத்தை ஊற்றினபோது, தண்ணீர்கள் காய்ந்து கிழக்கிலிருந்துவரும் இராஜாக்களுக்கு வழியை ஆயத்தம் பண்ணும் (வெளி. 16:12). சீக்கிரத்தில் ஜனங்களும், அவர்களின் செல்வாக்கும் போப் அமைப்புக்கும், புரட்டஸ்டன்ட் மதங்களும் கொடுக்கக்கூடிய பொருளாதார ஆதாரம் நீக்கப்படும்.

**இயந்திரக்கல் எறிவதுபோல**

கிறிஸ்தவ மண்டலத்தின் அழிவு மிகத் தெளிவாக விவரிக்கப்படுகிறது. "அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒரு போதும் காணப்படாமற்போகும்" (வெளி. 18:21). "பாபிலோன், மகா நகரமே! பலமான பட்டணமே! ஒரே நாழிகையில் உனக்கு ஆக்கினை வந்ததே! என்பார்கள்" (வெளி. 18:10).

**அழிவுக்குரிய செயல்**

ஐபிராத்து நதியை திசை திருப்பி பாபிலோனை கோரேஸ் கைப்பற்றினாலும், அதை அவர் அழிக்கவில்லை. தேசங்கள் மத்தியில் அதன் பிரமாண்டமான படைப்புகளைப் பாதுகாக்க விரும்பினார்.

கோரேஸின் மரணத்திற்குப் பின் பாபிலோன் தரியுவுக்கு எதிராகப் போராடி கலகம் செய்தார்கள். அப்போது தரியு, "அவைகளை இடித்து, கதவுகளைப் பிடுங்கி, மேன்மையான ஜனங்களில் மூவாயிரம் பேரை சிலுவையில் அறைந்து கொன்றான்" (ஹெரோடாட்டஸ் 111,159). இதுபோன்ற செயல்களைக் கோரேஸ் ஒருகாலமும் செய்ய வில்லை.

அடுத்து, செர்க்கஸ் பாபிலோனின் கோயில்களை அழித்தான். பட்டணம் மூன்றாவது முறையாக மாவீரன் அலெக்சாண்டரால் பிடிப்பட்டது. அதற்குப் பின் ஆன்டிகோனஸ், டெம்மெட்ரியஸ், ஆன்டியோஹஸ் மற்றும் பார்த்தியன்சால் பிடிப்பட்டது. ஒவ்வொரு முறையும் பாபிலோன் படிப்படியாக அழிக்கப்பட்டது. பழங்கால பாபிலோன் ஒரேநாளில் விழுந்தாலும் பல நாள் அதற்கான ஆயத்த வேலைகள் நடந்தது. அதுபோல, கிறிஸ்தவ மண்டலம் கொண்டிருந்த வல்லமை 1914 வருஷம் இழந்தாலும், அது உடனடியாக அழிக்கப்படவில்லை. இந்நாள் வரைக்கும் அதன் வல்லமைகள் படிப்படியாகக் குறைந்துகொண்டு வருகிறது.

**மீதியுள்ளவைகள்**

பாபிலோன் பட்டணம் மண் மேடானது. ஒன்றும் தப்பவில்லை. அதை நாம் பார்வையிட்டால், "பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒரு போதும் காணப்படாமற்போகும்" (வெளி. 18:21) என்பதை உணரலாம். "ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டதுபோல கவிழ்க்கப்படும்" (ஏசா. 13:19). பாபிலோன் முற்றிலுமாகக் கவிழ்க்கப்பட்டு, இனி ஒருவரும் குடியேறாதபடிக்குப் பாழாக்கப்பட்டது.

**1914வருடத்தின் மோதல்களின் விளைவுகளை வரலாற்று ஆசிரியர்களின் தொகுப்பு**

முதலாம் உலகப்போரில் புறஜாதிகளின் காலம் நிறைவுபெற்று இஸ்ரயேல் மேலிருந்த புறஜாதிகளின் குத்தகை புதுப்பிக்கப்படவில்லை. 1917 நவம்பர் 2-ம் தேதி இங்கிலாந்து, பாலஸ்தீனாவின் மேல் பாதுகாப்பை மேற்கொண்டது. "யூதர்களுக்கு பாலஸ்தீனாவில் தேசிய வீடு ஸ்தாபிக்கப்படுதல்" என்ற பால்போர் பிரகடனமானது. யூதர்கள் தங்களுடைய தேசத்திற்குத் திரும்புவதற்கு ஊக்குவித்தது. இந்த முக்கியமான சம்பவங்கள் அனைத்தும், புறஜாதியாரின் காலம் முடிவடைந்ததை நமக்கு வலியுறுத்தி, நம்முடைய விசுவாசத்தைப் பலப்படுத்துகிறது. மேலும், நாம் இந்த உலகத்தின் அரசாங்கத்திற்கும், தேவனுடைய அரசாங்கத்திற்கும் இடையில் இருப்பதை நமக்கு ஊர்ஜிதப்படுத்துகிறது.

1914-ம் வருடத்திற்குப் பின் இந்த உலகத்தில் ஏற்பட்ட தீவிரமான மாற்றங்களைக் குறித்து அநேக வரலாற்று ஆசிரியர்கள் பதிவுகள் செய்திருக்கிறார்கள். மனித வரலாற்றில் 1914-ம் வருடம் ஒரு திருப்புமுனையாகக் காணப்படுகிறது. இதைக குறித்து வாசிப்பதற்கு நாம் இரண்டு இணைத்தளம் விலாசத்தைக் கொடுத்துள்ளோம். www.christsecondpresence.com/When/gentile.htm மேலும், "A Time of Trouble" என்ற புத்தகத்தில், "1914 changed the World" என்ற தலைப்பின் கீழ் காணலாம்.

முதலாம் உலகப்போரில் அடிக்கடி குறிப்பிடப்பட்ட சிறந்த வாசகம் நிச்சயமாக எட்வர்ட் கிரேசின் வார்த்தைகளாகும். எல்லா பக்கங்களிலுமுள்ள ஐரோப்பாவின் விளக்கு அணைந்துபோகிறது. நம்முடைய காலங்களில் மீண்டும் இவைகள் ஒளியேற்றுவதற்கு வாய்ப்பில்லை. .. முடிவுபெற்ற யாவும் பல வகையில் சொல்லப்படுகிறது... சமுதாயம், கிறிஸ்தவம், படைவீரர்களின் ஆலோசனைகள், பாரம்பரியம் அனைத்தும் அழிந்துகொண்டிருப்பதைக் கண்டு துக்கம் கொண்டாடப்படுகிறது. துக்கங்கொண்டாடக் கூடியவர்கள்... மிக மதிப்புள்ள காரியங்களுக்காக துக்கங்கொண்டாடி... 1914, ஆகஸ்டு 4-ம் தேதி முடிவிற்கு வந்தது" -A War Imagined, Samuel Hynes, Atheneum, New York, 1991, page xi.

இந்த நவீன காலத்தில் 1914-ம் வருடம் மிக முக்கியமானது என்று வரலாற்று ஆதாரங்கள் போதிக்கிறது. கடந்த காலத்தில் இவ்வருடம் ஒரு கருக்கான முறிவை ஏற்படுத்தியது. கிளர்ச்சிகளும், சமுதாய பிரச்சனைகளும் 1914-ம் வருடம் துவங்கி பெரிதாகவும், ஆழமாகவும் மனுக்குலம் இதுவரையில் அனுபவித்திராத ஒப்பற்றக் காரியங்களாகவும் இருந்தது.

**ஜாமக்காரனே, இரவு எவ்வளவு சென்றது? 2014-ம் வருடத்தில் நீ எதைக் காண்கிறாய்?**

பாபிலோன் அதிகமாக தொலைத்திருந்தாலும், இன்னும் சில காரியங்கள் ஒட்டிக்கொண்டிருக்கிறது. சட்டப்படியான வெளியேற்றுதலுக்கு 1914-ம் வருடம் அறிவிப்புக் கொடுக்கப்பட்டது. 25 சபையோடு இணைந்திருந்த அரசாங்கங்கள் 1914-1918 முடிவுக்கு வந்தது. மேலும், 29 தேசங்கள், 1919-2009 வருடங்களுக்கிடையில் மதம் சார்ந்த இராஜ்யங்கள் சீர்குலைக்கப்பட்டது. 2013-ல் வெறும் 9 மதம் சார்ந்த மாநில அரசாங்கங்கள் மட்டுமே காணப்பட்டது.

ஒரு காலத்தில் பாபிலோன் சகலத்தையும் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்ததுபோல, இப்போது இல்லை. ஆயினும், தாய் சபையும், குமாரத்தி சபைகளும் இந்நாள் வரைக்கும் காணப்படுகிறது. 2013-ம் வருடத்தில் போப் பிரான்ஸிஸ், "Man of the

Year" - ஆக இருந்தார். எல்லா அரசியல் மற்றும் சமுதாய காரியங்களிலும் மேலான ஒரு ஈடுபாட்டைக் கொண்டிருந்தார். 2013-ம் வருடம் மார்சு மாதத்தில் 1.2 பில்லியன் ரோம கத்தோலிக்கர்களும், 800 மில்லியனிலிருந்து 1 பில்லியன் புரட்டஸ்டன்டுகளும் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டது. இந்நாள் வரைக்கும்கூட பாபிலோன் தன்னை ஆதரிக்கும் ஆதரவாளர்களோடு காணப்படுகிறது.

தொடர்ந்து வரும் போர்கள், பொருளாதார வீக்கங்கள், வெளிநடப்புகள், தீவிரவாதங்கள், புரட்சிகள் அனைத்தும் உலகளவில் காணப்பட்டு வருகிறதை நாளிதழ்கள் தொடர்ந்து காட்டுகிறது. மில்லியன் கணக்கான ஜனங்களைக் கொன்று, கட்டுப்பாட்டிற்குள் வைக்கும் அரசாங்கங்களை இந்நாளிலும் காணலாம். 1990-1995, 70 தேசங்கள் கிட்டத்தட்ட 93 யுத்தங்களை நடத்தி 5.5 மில்லியன் ஜனங்களைக் கொன்றது. 2003-2013 வரைக்கும் 45 போர்கள் நடத்தப்பட்டது. பாபிலோன் ஜீவனோடு காணப்பட்டாலும், அது அழிந்துகொண்டேயிருக்கிறது. கிறிஸ்தவ மண்டலம் தவிடு பொடியாக்கப்பட்டாலும், இந்தப் பூமியிலுள்ள முழு குடும்பங்களை ஆசீவதிக்கும்படி இஸ்ரயேல் தேசம் பயிற்றுவிக்கப படுகிறது. புதிய தேசமாக இஸ்ரயேலர்கள் கூட்டிச் சேர்க்கப்பட்டாலும், இயற்கையினிமித்தம் வரும் பேராபத்துக்கான எதிர்நோக்கும் தேசங்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் இஸ்ரயேல் தேசமே முதலில் நிற்கக்கூடியதாக இருக்கிறது. இப்படிப்பட்ட சகோதர சிநேகம் நிச்சயமாக இராஜ்யத்தின் ஒருங்கிணைப்புகளை வெளிப்படுத்தக்கூடியதாக இருக்கிறது.

**பாபிலோனின் அழிவு, இன்றுள்ள உண்மையான சபையை எவ்வாறு பாதிக்கிறது?**

(1) நாம் பாபிலோனைவிட்டு வெளியே வரும்படி கட்டளைப் பெற்றிருக்கிறோம். அவளுடைய கிரியைகளுக்கு ஆதரவளிக்கக் கூடாது. "என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு அவளைவிட்டு வெளியே வாருங்கள்" (வெளி. 18:4).

(2) பாபிலோனை விட்டு விடுதலைப்பெற்ற நாம் ஒரே சிந்தை பெற்ற கிறிஸ்தவர்களாக இருக்க வேண்டும். "பலியினாலே என்னோடே உடன்படிக்கை பண்ணின என்னுடைய பரிசுத்தவான்களை என்னிடத்தில் கூட்டுங்கள்" (சங். 50:5). "பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" (மத். 24:28).

(3) சத்தியத்தின் நிலையை மலையுச்சிக்கு எடுத்துச் செல்லக்கூடிய பொறுப்பை நாம் பெற்றுள்ளோம். "பாபிலோன் பிடிபட்டது; பேல்வெட்கப்பட்டது; மெரொதாக் நொறுங்குண்டது; அதினுடைய சிலைகள் இலச்சையடைந்தது; அதினுடைய விக்கிரகங்கள் நொறுங்கிப்போயின என்று ஜாதிகளுக்குள்ளே அறிவித்துப் பிரசித்தம்பண்ணுங்கள்; இதை மறைக்காமல் கொடியேற்றி விளம்பரம்பண்ணுங்கள்" (எரே. 50:2).

விழித்திருந்து ஜெபித்து - நம்முடைய ஆண்டவரின் அடிச்சுவடுகளைக் கண்டுபிடிக்க வேண்டும். பக்தி வைராக்கியத்தோடு சத்தியத்தை அறிவிக்க வேண்டும் - வார்த்தைகளினாலும், அச்சடிக்கப்பட்ட இதழ்கள், இணையதளம், தொலைக்காட்சி, வானொலி, கைப்பிரதிகள் போன்ற சகல காரியங்கள் வழியாகவும் இவைகளை அறிவித்து, ஜனங்கள் மத்தியில் நம்முடைய பாதையைத் தெளிவாக வெளிப்படுத்தக்கூடியவர்களாக இருக்க வேண்டும். எல்லா இடங்களிலும், எல்லா நேரங்களிலும் எந்த செலவிலும் தேவன் நமக்குக் கொடுக்கக்கூடிய வாய்ப்புகளை எப்போதும் பயன்படுத்த ஆயத்தமாக இருக்க வேண்டும். இந்த சத்தியம் தொலை துாரத்திற்கும், வீட்டிற்கும், கடல் தாண்டிய தேசங்களுக்கும், சகல இடங்களுக்கும் செல்ல வேண்டும்.

**"ஜாமக்காரனே, நீ என்ன காண்கிறாய்?"**

"என் கண்கள் கர்த்தர் இயேசுவின் பிரசன்னம் காணுமே: தன் காலின் கீழ் ஆலைத் திராட்சை மிதித்துப் போடுவார்; மின்னலாய்ப் பட்டயம் கீழ் இறங்கக் காணுமே: என் இராஜா முன் செல்கிறார்."



# நம்முடைய ஆண்டவரின் பெரிய தீர்க்கதரிசனம்

"ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷ குமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள் என்றார்" (லூக். 21:36).

ஆண்டவரின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தில் அவருடைய தீர்க்கதரிசனம் கொடுக்கப் பட்டது (லூக். 21:37; மத். 24:3). யூத யுகம் முடிவைக் குறித்தும், சுவிசேஷ யுகத்தின் முடிவில் இயேசுவின் பிரசன்னத்தைக்குறித்தும் இவைகளுக்கு இடையில் நடக்கக்கூடிய சம்பவங்களைக்குறித்தும் தம்முடைய அன்பான சீஷர்களுக்கு சில முக்கியமான அறிவுரைகளைக் கூறும்படிக்கு அவருடைய வார்த்தைகள் உள் நோக்கமுடையதாக இருந்தது.

லூக். 21-ம் அதிகாரத்திலுள்ள செய்திகள், வெகு சீக்கிரத்தில் எருசலேமில் நடக்கக்கூடிய சம்பவங்களின் மேல் ஆழமான தாக்கங்களைக் கொண்டிருந்தது. தெய்வீக நடத்துதலினாலே ஒரு ஏழை விதவை ஒரு சிறிய காணிக்கையைக் கொடுத்தாலும் அதை முழு மனதோடு கொடுத்தாள். இயேசு, அவள் செலுத்தின காணிக்கையைக் குறித்து விமர்சித்தார். இந்த சம்பாஷணையானது, ஆலயத்தைக்குறித்த ஒழுங்குகளைக்குறித்தும், அதன் அலங்காரமான கற்களைக்குறித்தும், பேச்சுகளுக்கு வழிநடத்தியது. அப்போது, தெய்வீக வழிநடத்தலின் படி எருசலேமின் தலையெழுத்தை அறிவிப்பதற்கு இயேசுவுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. அதிர்ச்சியூட்டும் ஓர் துவக்கத்தை அவர் அறிவித்தார். "அவர்: நீங்கள் பார்க்கிற இவைகளில் ஒரு கல் மற்றொரு கல்லின்மேலிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்படும் நாட்கள் வரும் என்றார்" (லூக். 21:6).

### நியாயத்தீர்ப்புக்கு முன்சத்தியத்திற்கு ஒரு சாட்சி

"போதகரே, இவைகள் எப்பொழுது சம்பவிக்கும், இவைகள் சம்பவிக்கும் காலத்துக்கு அடையாளம் என்ன" (லூக். 21:7) என்று இயேசுவின் வார்த்தைகளுக்கேற்றப்படி சீஷர்கள் கேள்வி எழுப்பினார்கள். மேசியாவின் நாமத்தைத் தரித்துக்கொண்டு அநேகர் உங்களை வஞ்சிப்பார்கள் என்று இயேசு அவர்களை எச்சரித்தார் (அப். 5:36). மேலும், "யுத்தங்களையும் கலகங்களையுங் குறித்து நீங்கள் கேள்விப்படும்போது, பயப்படாதிருங்கள்; இவைகள் முன்னதாகச் சம்பவிக்கவேண்டியதே; ஆனாலும் முடிவு உடனே வராது. ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாய் ராஜ்யமும் எழும்பும். பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளைநோய்களும் உண்டாகும்; வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும். இவைகளெல்லாம் நடப்பதற்கு **முன்னே** என் நாமத்தினிமித்தம், அவர்கள் உங்களைப் பிடித்து, ஜெபஆலயங்களுக்கும் சிறைச்சாலைகளுக்கும் ஒப்புக்கொடுத்து, ராஜாக்கள் முன்பாகவும் அதிபதிகள் முன்பாகவும் உங்களை இழுத்துத் துன்பப்படுத்துவார்கள். ஆனாலும் அது உங்களுக்குச் சாட்சியாவதற்கு ஏதுவாயிருக்கும்" (லூக். 21:9-13).

இந்த வார்த்தைகள் ஆலயத்தின் அழிவைத் தொடர்ந்து வருங்காலத்தை விவரிக்கிறது. நியாயத்தீர்ப்புக்கும், உபத்திரவத்திற்கும் முன்னதாகவே சவாலான ஒரு காலம் வந்து சத்தியத்திற்குச் சாட்சிகொடுக்கக்கூடிய வாய்ப்பை தேவன் கொடுத்தார். இயேசுவின் மரணத்திற்குப் பின் சீஷர்கள் சிந்திக்கக்கூடிய உபத்திரவங்களைக்குறித்து இயேசு அவர்களுக்கு எச்சரித்துக்கொண்டிருந்தார். அப்படியே, இயேசுவின் மரணத்திற்குப் பின் அப்போஸ்தலனாகிய பேதுரு, பவுல் மற்றும் அநேகரும் இராஜாக்களுக்கும், ஆளுநர்களுக்கும் முன் பயமின்றி சத்தியத்திற்கு ஏற்ற சாட்சிக்கொடுத்து, உபத்திரவங்களையும், சிறையிருப்புகளையும் தைரியமாக மேற்கொண்டார்கள் (பிலி. 1:12-14; அப். 5:25-27; 12:1-4; 23:33-34; 24:1-26; 2 தீமோ. 4:16-17; வெளி. 1:9).

இந்த வார்த்தைகள், சுவிசேஷ யுகத்தின் உபத்திரவங்களையும் நிழலிட்டுக் காண்பித்தது. இதில் இருண்ட யுகத்தைப் பற்றியும், அநேகருடைய அன்பு தணிந்து விடுவதைப் பற்றியும் காண்பிக்கிறது (மத். 24:9-12; வெளி. 6:9). இவைகள் இந்த யுகத்தின் முடிவுக்கும் தொடர்புடையதாக இருக்கிறது. இறுதியான உபத்திரவத்திற்கு முன் இராஜாக்களுக்கும், ஆளுநர்களுக்கும் முன் சத்தியத்தை அறிவிக்க வாய்ப்பு கிடைக்கும் (சங். 2; அப். 4). அனைவரையும் வஞ்சித்து, தேவனுடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்தி அழிப்பதே சாத்தானின் முக்கிய நோக்கமாக இருக்கிறது. ஆயினும், தேவனுடைய அனந்த ஞானத்தில்

இப்படிப்பட்ட தீமைகளைக் கொண்டு அவருடைய ஜனத்தின் விசுவாசத்தை வளர்ச்சியடையச் செய்தது. கிறிஸ்துவினிமித்தம் சாட்சிக்கொடுப்பதற்கான சிறப்புரிமையை தேவன் தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்தார் (சங். 76:10).

**இப்படிப்பட்ட சவால்களை எவ்வாறு சமாளிப்பது**

"ஆகையால் என்ன உத்தரவு சொல்லுவோமென்று கவலைப்படாதிருக்கும்படி உங்கள் மனதிலே நிர்ணயம்பண்ணிக் கொள்ளுங்கள். உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன். பெற்றாராலும், சகோதரராலும், பந்துஜனங்களாலும், சிநேகிதராலும் காட்டிக்கொடுக்கப்படுவீர்கள் உங்களில் சிலரைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தினிமித்தம் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள். ஆனாலும் உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது. உங்கள் பொறுமையினால் உங்கள் ஆத்துமாக்களைக் காத்துக்கொள்ளுங்கள்" (லூக். 21:14-19).

இயேசுவின் வார்த்தைகளின் நிறைவேற்றத்தை அனுபவித்த நம்முடைய சகோதரர்கள் பல அற்புதமான பாடங்களைச் செயலாற்றினதை நாம் காணலாம்.

- நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும் கிறிஸ்துவின் வேலைகள் நடைப்பெறுவதை நம்ப வேண்டும். அவர் நம்மை தொடர்ந்து பரிசுத்த ஆவிக்குள் நடத்துவார் (யோவா. 14:26-27; 16:1-4, 13).

- மனித உறவுகளின் எல்லைகளை உணர்ந்து மறுதலிக்கும் உள்ளுணர்வுகளை நாம் அறிந்துகொள்ள வேண்டும் (யோவா. 2:23-25; சங். 27:10).

- தெய்வீக ஐக்கியத்தை நம்ப வேண்டும். நாம் எதிர்நோக்கும் ஒவ்வொரு சவால்களையும், அதன் விவரங்களையும் தேவன் நன்கறிந்து நம்முடைய உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்கு நமக்கு உதவி செய்வார் என்பதையும் நம்ப வேண்டும் (1 பேது. 1:3-5). "உங்கள் தலைமயிரில் ஒன்றாகிலும் அழியாது" (லூக். 21:18). நசரேய விரதம் அடையாளப்படுத்தும் உடன்படிக்கையின் பொருத்தனைப் பற்றி "அவன் நசரேய விரதங்காக்கும் நாளெல்லாம் சவரகன் கத்தி அவன் தலையின்மேல் படலாகாது" (எண். 6:5).

- நம்பிக்கையோடு உபத்திரவங்களை சகிப்பதன் மூலம் ஆவிக்குரிய வாழ்க்கையை அடையலாம் (லூக். 21:19). தேவன் மேல் நம்பிக்கையாயிருந்து அவர் நம்முடைய இருதயங்களில் அவருடைய நோக்கங்களை ஜீவனோடு வைத்திருக்கிறார் என்றும் விசுவாசிக்க வேண்டும்.

**மலைக்கு ஓடிப்போ**

"எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும்போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். அப்பொழுது யூதேயாவிலிருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகவும், எருசலேமிலிருக்கிறவர்கள் வெளியே புறப்படவும், நாட்டுப்புறங்களிலிருக்கிறவர்கள் நகரத்தில் பிரவேசியாமலிருக்கவும் கடவர்கள். எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் அவைகளே" (லூக். 21:20-22). எருசலேம் அழியும்போது, தப்பித்துக் கொள்ளக்கூடிய வழியைக்குறித்து இயேசு சீஷர்களுக்குக் கற்பித்தார்.

கிபி. 66-ம் வருடத்தில் யூதர்கள் ரோம சாம்ராஜ்யத்திற்கு எதிராகக் கலகம் எழுப்பினார்கள். இதன் விளைவாக கலகத்தை முடிக்கும்படிக்கு நீரோ மன்னன் வெஸ்பாசியனை நியமித்தான். கிபி. 67-ம் வருடத்திற்குள் எல்லா கலிலேயர்களையும் தோற்கடித்து, எருசலேமை முற்றிகைப் போடுவதற்கு ஆயத்த வேலைகள் நடந்தது. கிபி. 68-ம் வருஷம் நீரோ மன்னனின் மரணத்தின் செய்தியைக் கேட்ட பின் வெஸ்பாசியன், எருசலேமை முற்றிகைப் போடுவதை நிறுத்திவிட்டு, மேலும், கட்டளைகளுக்காகக் காத்திருந்தான். கிபி. 69-ல் வெஸ்பாசியன் பயங்கரமான ரோம படையோடு சக்கரவர்த்தியாகும் படி வந்தான்.

எருசலேமின் ரோம வல்லமைகளிலிருந்து வெளியே மலைக்கு ஓடிப்போக வேண்டும் என்ற ஆண்டவரின் கட்டளைகளைப் பின்பற்றுவதற்கு, கிறிஸ்தவர்களுக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தது. இவர்கள் பயங்கரமான முற்றிகையிலிருந்து தப்பித்துக்கொண்டார்கள். எருசலேமில் போடப்பட்ட இந்த முற்றிகை, வெஸ்பாசியனின் குமாரனாகிய தீத்து இராயனால் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது. கிபி. 70-ல், பட்டணம் முற்றிலுமாக அழிக்கப்பட்டது. 1,100,000 யூதர்கள் மாண்டு போனார்கள்.

**மலைக்கு ஓடிப்போவதைக்குறித்த மற்றொரு கட்டளை**

இந்த முழு உலகத்திற்கும் இராஜ்யத்தின் சுவிசேஷம் பிரசங்கிக்கப்படுவதற்குப் பின் வாழ்ந்து கொண்டிருப்பவர்களுக்கு இப்படியும் ஒரு எச்சரிப்பை மத்தேயு பதிவு செய்திருக்கிறார். வேதாகமம், முக்கியமான எல்லா பாஷைகளிலும் மொழிபெயர்ப் பிக்கப்பட்டபோது இது நடைமுறைப் படுத்தப்பட்டது (மத். 24:14). "மேலும், பாழாக்குகிற அருவருப் பைக் குறித்துத் தானியேல் தீர்க்கதரிசி சொல்லியிருக்கிறானே. வாசிக்கிறவன் சிந்திக்கக்கடவன். நீங்கள் அதைப் பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும்போது, யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப்போகக் கடவர்கள். வீட்டின்மேல் இருக்கிறவன் தன் வீட்டிலே எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன். வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக் கடவன்" (மத். 24:15-18).

சொல்லர்த்தமான ரோம படைகள் கண்டல்ல, ஆவிக்குரிய காரியங்களை அழிக்கும் போப் அமைப்பின் பாழாக்கும் அருவருப்பைக் காணும்போது, நாம் மலைக்கு ஓடிப்போகும் படி கட்டளைப் பெற்றிருக்கிறோம் (மத். 24:15). தானி. 11:31; 12:10-11 வசனங்களில், நித்தமும் செய்யப்படும் பலியைப் பற்றி உபதேசங்களில் காணலாம். கிறிஸ்துவின் ஈடுபலியின் உபதேசத்தின் ஆழங்களையும், உயரங்களையும், அகலங்களையும் நன்கு நாம் உணர்ந்துகொள்ளும் பட்சத்தில், பலவிதமான பாழாக்கும் உபதேசங்களைப் பற்றி நாம் அறிந்துகொள்ளலாம். அப்பொழுது நாம் தேவனுடைய ஆட்சியும், அதிகாரமும் நம்முடைய வாழ்க்கையை வழிநடத்தும்படிக்கு, தேவனுடைய இராஜ்யமாகிய மலைக்கு ஓடிப்போகலாம் (கொலோ. 1:13). மற்றொரு எடுத்துக்காட்டு, "ஒரே படுக்கையில் படுத்திருக்கிற இரண்டுபேரில் ஒருவன் ஏற்றுக்கொள்ளப்படுவான்; மற்றவன் கைவிடப்படுவான்" (லூக். 17:34) என்று இயேசு கூறுகிறார்.

"ஓடிப்போ" என்ற காரியம் நம்முடைய கீழ்ப்படிதலுக்கு ஒரு பரீட்சையாக வைக்கப் பட்டிருக்கிறது. ஒருவர் "எடுத்துக்கொள்ளப்படுவார்" என்று கூறும்போது, தேவன் நம்முடைய ஆவிக்குரிய நீதியான பயணத்தில் நடக்க உதவி செய்வார் என்று பொருள்படுவதாக இயேசு கூறுகிறார் (மத். 24:41). "கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக் கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்" (பிலி. 3:12) என்று பவுல் கூறுகிறார். இயேசு ஆர்வமாக தம்முடைய சீஷர்களை பிடித்துக் கொண்டார். சிலர் எடுத்துக்கொள்ளப்படுவதாகவும், சிலர் கைவிடப்படுவதாகவும் அவர் விவரிக்கும்போது, "எங்கே, ஆண்டவரே, என்றார்கள். பிணம் எங்கேயோ அங்கே கழுகுகள் வந்து கூடும்" (லூக். 17:37; மத். 24:28) என்று இயேசு பதிலளித்தார்.

மனிதனால் ஏற்படுத்தப்பட்ட உபதேசங்களிலிருந்தும், பிரிவினைகளிலிருந்தும் நாம் ஓட வேண்டியவர்களாக இருக்கிறோம். கிறிஸ்துவின் பலியின் உண்மையான பொருளினால் போஷிக்கப்படுவதற்கும், அவர் செய்த யாவற்றையும் உணர்ந்துகொள்வதற்கும் நாம் விரைந்தோட வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் கிறிஸ்து இயேசுவின் வழிநடத்துதலினாலும், பலத்தினாலும் இடைக்கட்டப்படுகிறோம்.

"பட்டயக்கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்" (லூக். 21:24) என்று இயேசு தொடருகிறார். புறஜாதியாரின் காலம் நிறைவடையும்வரை எருசலேம் 1914-ம் வருடம் வரைக்கும் புறஜாதிகள் கால்களுக்குக் கீழ் மிதிப்படும் என்றார். அதுவரையில் இஸ்ரயேல் ஒரு தேசமாக இருப்பதற்கு வழியில்லாமல் இருந்தது. 1914-ம் வருடத்தின் துவக்கத்தில் முதலாம் உலகப்போர் வரலாற்றில் ஞாபகத்துக்குரியதாக இருந்தது. தேவனுடைய நீதிக்கு எதிராக செயல்பட்ட அமைப்புகள் அனைத்தையும், "தேவனுடைய பழிவாங்கும் நாளில்" (ஏசா. 34:8) பழி வாங்கத் துவங்கியது. இந்த உபத்திரவத்தின் காலம் தேவனுடைய இராஜ்யம் இந்த உலகத்தில் ஸ்தாபிக்கப்படுவதற்கு ஆயத்தப்படுத்தியது. முதலாம் உலகப்போரின் பிரச்சனையில் இஸ்ரயேலின் கூட்டிச்சேர்க்கப்படுவதலே ஒரு முக்கியமான சம்பவமாக எழும்பியது.

**சூரியன் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களில் காணப்படும் அடையாளங்கள்**

"சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்; பூமியின்மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும்; சமுத்திரமும் அலைகளும் முழக்கமாயிருக்கும். வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின்மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம் சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும், நட்சத்திரங்கள் வானத்திலிருந்து

விழும், வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும். சூரியன் அந்தகாரப்படும், சந்திரன் ஒளியைக் கொடாதிருக்கும்; வானத்தின் நட்சத்திரங்கள் விழும், வானங்களிலுள்ள சத்துவங்களும் அசைக்கப்படும்" (லூக். 21:25-26; மத். 24:29; மாற். 13:24-25). சூரியன் மற்றும் சந்திரனும் இந்த பூமியின் மேல் புவிஈர்ப்பு சக்திகளையும், ஜீவனை தக்க வைக்கக்கூடிய சுற்றுகளையும் செயலாற்றுகிறது. நட்சத்திரங்கள் பிரயாணத்திற்கு ஒரு முக்கிய கருவியாகப் பயன்படுகிறது. நம்முடைய நாட்களின் மந்தாரமும், இருளும் ஜனங்களை பார்வையற்றவர் போல நடக்கச் செய்கிறது (செப். 1:15, 17).

நம்முடைய ஆண்டவரின் வருகையிலிருந்து அநேக சம்பவங்களை கடந்து வந்திருக்கிறோம். சூரியன் சந்திரன் மற்றும் நட்சத்திரங்களில் காணப்படும் சில அடையாளங்கள் அறுவடையின் துவக்கத்திலிருந்து முடிவு வரைக்குமுள்ள வெவ்வேறு கிறிஸ்தவ போதனைகளில் தவறுகளும், சத்தியங்களும் ஆங்காங்கே மாறுபாடாகக் காணப்படுவதை இது காட்டுகிறது. ஈடுபலியின் அஸ்திபாரத்தை பரிணாம கொள்கை அசைத்தது. மேலும், உயர்வான விமர்சனங்கள் தேவனுடைய வார்த்தைகளில் நம்பக்கூடிய ஆதாரங்கள் அதற்கு சவாலாக இருந்தது. சகோ. ரஸலின் நாட்களில் இவ்விரண்டுமே மேடைகளின் மேல் பேசப்பட்டது. அறுவடை செய்தியும்கூட அக்காலத்தில் பிரபலமாக அளிக்கப்பட்டது. ஆனால், ஈடுபலியின் வெளிச்சமானது, அதிலிருந்து மந்தமாகவே காணப்படுகிறது. இப்போது மிகப்பெரிய அளவில் அரசியல் தலையீடுகளை பல சபைகளில் காணலாம். இது ஆவிக்குரிய குழப்பங்களுக்கும், இருளுக்கும் வழிநடத்தி சில போலியான நட்சத்திரங்கள் ஆவிக்குரிய நிலையிலிருந்து அரசியல் நிலமைக்கு வந்துவிடுவார்கள்.

"கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருமுன்னே சூரியன் இருளாகவும், சந்திரன் இரத்தமாகவும் மாறும்" (யோயே. 2:31). இந்த வசனத்தில் சந்திரனுக்கான வர்ணனை ஒரு சந்திர கிரகணத்திற்கு ஒப்பிட்டுப் பார்க்கலாம். சந்திர கிரகணத்தின் போது, பொதுவாக சந்திரன் சிவப்பாக தோற்றமளிக்கும். ஏனெனில், சிவப்புநிறம் மட்டுமே அண்டைவெளியில் ஊடுருவி பாயும்போது, அலைகளின் நீளம் நீண்டதாக இருக்கிறது. அது சந்திரன் மேல் விழும்போது சிவப்பாகத் தோன்றுகிறது. ஜனங்கள் சந்திரனைக் **காணும்** விதத்தை யோயேலின் தீர்க்கதரிசனம் விவரிக்கிறது. இந்த சந்திரன் நியாயப்பிரமாணத்தையும், இஸ்ரயேலையும் சித்தரிக்கிறது. இந்த சமுதாயத்தின் கிரகணங்கள் இஸ்ரயேல் தேசத்தின் மேல் பிரகாசிக்கும் சுவிசேஷத்தை மங்கலாகத் தோன்றப்பண்ணி நியாயப்பிரமாணத்தின் மேல் வெளிச்சம் வீசுகிறது. நியாயப்பிரமாணத்தின் பலிகளை உண்மையான அர்த்தங்களை உணராதபடிக்கு இந்த உலகம் காண்கிறது. நம்முடைய நாட்களில் சத்தியத்தின் அறுவடை மற்றும் இஸ்ரயேலுக்கான நம்முடைய ஆண்டவர் வந்து நிற்பதினிமித்தம் இஸ்ரயேலில் பல நன்மையான காரியங்களை நாம் காண்கிறோம் (தானி. 12:1). ஆனால், வருங்காலத்தில் இஸ்ரயேலை மற்ற எந்த தேசமும் ஆதரிக்காது என்று தீர்க்கதரிசனங்கள் குறிப்பிடுகிறது. அரசியல் தகுதிக்கு ஏற்றபடி மீண்டும் இஸ்ரயேலின் நியாயப்பிரமாண சந்திரனை காண்பதற்கு அரசியல் வல்லமை கட்டாயப்படுத்தும். அப்போது, தவறான அநேக கண்ணோட்டங்கள் தென்படும். இது இஸ்ரயேலை பாழாக்கிவிடும் (சக. 14:1-2).

**மேகங்களின் மேல் வருதல்**

"அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும் மகிமையோடும் **மேகத்தின்** மேல் வருகிறதைக் காண்பார்கள்" (லூக். 21:27). இது ஒரு இயற்கைக்கு மாறான வாக்கியம். (குறிப்பான காரியத்தைக் காணும்படி விரிவாகத் திறந்த கண்களினால் புரிந்துகொள்வதைக் குறிப்பிடப்படுகிறது. மத். 13:13-14). அவர்கள் மனுஷகுமாரனை உபத்திரவத்தின் மேகங்களின் மேல் வருவதைக் காண்பார்கள். மேசியாவை முதலில் அடையாளம் கண்டுபிடிப்பவர்களும் (சக. 12:10) யாக்கோபின் உபத்திரவத்தின் வழியாக தேவனுடைய மீட்பை அடையாளம் கண்டுபிடிக்கக்கூடிய மீதியிருக்கும் இஸ்ரயேலர்களையும் இது குறிக்கும். "வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடே அவர் தமது தூதர்களை அனுப்புவார்; அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனைமட்டும் நாலு திசைகளிலுமிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள்" என்று மத். 24:31-ம் வசனம் கூறுகிறது. மாற். 13:27-ம் வசனத்திலும் காணலாம்.

இந்த வசனங்கள் ஆவிக்குரிய இஸ்ரயேலர்களுக்கு மட்டுமல்ல, மாம்ச இஸ்ரயேலர் களுக்கும் பொருந்தக்கூடியதாக இருக்கிறது. "உன் தேவனாகிய கர்த்தர் அங்கே இருக்கிற உன்னைக் கூட்டி, அங்கேயிருந்து உன்னைக் கொண்டு வந்து,"(உபா. 30:3-4) என்று வாசிக்கிறோம். இது அறுவடை அல்லது இஸ்ரயேலரை மீண்டும் கூட்டிச்சேர்ப்பதற்கும், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் அறுவடைக்கு சம்பந்தப்பட்ட சில கோட்பாடுகள் கொண்டிருப்பதாகக் கருதப்படுகிறது. இருவரும்

இந்த உலகத்திலிருந்து வெளியே அழைக்கப் பட்டிருக்கிறார்கள். இஸ்ரயேல் தேசம் பல யூதர்களைத் தங்களுடைய மூதாதையரின் அடிவேருக்கு இழுத்துச் செல்கிறது. ஆவிக்குரிய இஸ்ரயேலர்களும் கிறிஸ்துவின் பலியை புரிந்துகொண்டவர்களாக ஆழமான ஐக்கியத்திற்குள் இழுத்துச் செல்லப்படுகிறார்கள். இரு வகுப்பாருக்குமே சத்தியத்தின் அறிவாள் வைக்கப்பட்டுள்ளது. ஒரு புதிய தேசம் இஸ்ரயேலுக்கு தேவை என்பதை சீயோன் அமைப்பு கற்பித்தது. தீர்க்கதரிசனங்களை புரிந்துகொள்வதற்கும், அறுவடை சம்பந்தப்பட்ட சகல சத்தியங்களையும் தேடக்கூடிய கிறிஸ்தவர்களுக்கு கட்டாமாகக் கொடுக்கப்படுகிறது.

ஆவிக்குரிய ரீதியிலும், மாம்சத்திற்குரிய ரீதியிலும், தூதர்களும் வேலை செய்கிறார்கள். மாம்ச ரீதியில் தியோடர் ஹெர்சல், ஆர்த்தர் ஜேம்ஸ் பால்போர் மற்றும் எலியேசர் பென்யிகூடா என்பவர்களும், ஆவிக்குரிய ரீதியில் தேவனுடைய வார்த்தைகளை அறிவிக்கும் பாஸ்டர் ரஸலும் மற்ற பரிசுத்தவான்களும் இருந்தனர். உலகத்தின் நான்கு மூலைகளிலிருந்தும் இந்த அறுவடை வேலை மிகப்பெரிய அளவில் வேலைகள் செய்யப்பட்டு வருகிறது. தேவனுடைய பிள்ளைகள், எவ்வளவு தூரத்திலிருந்தாலும் அவைகள் எந்தவிதமான தடையுமின்றி கண்டுபிடிக்கப்பட்டு கூட்டிச் சேர்க்கப்படுவார்கள்.

### நம்முடைய ஆவிக்குரிய தோரணை

"இவைகள் சம்பவிக்கத் தொடங்கும்போது, உங்கள் மீட்பு சமீபமாயிருப்பதால், நீங்கள் நிமிர்ந்துபார்த்து, உங்கள் தலைகளை உயர்த்துங்கள்" (லூக். 21:28) என்ற ஞாபகார்த்தமான சம்பவங்களுக்கிடையில் இந்த முக்கியமான அறிவுரைக் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வசனம் நம்முடைய ஆவிக்குரிய தோரணையை அறிமுகப்படுத்துகிறது. நாம் கீழே பார்க்கும்போது, ஒரு குறுகிய கண்ணோட்டத்தைக் காணலாம். ஆனால், நாம் மேலே பார்க்கும்போது, எல்லையற்ற தேவனுடைய காரியங்களையும், விரிவாக்கப்பட்ட பரலோகங்களையும் காணலாம். "துக்கம் தாழ பார்க்கும், கவலைகள் சுற்றிப்பார்க்கும், விசுவாசம் மேலோங்கிப்பார்க்கும்" - ரால்ப் வால்டோ எமர்சன் கூறுகிறார். "பரலோகத்தில் வாசமாயிருக்கிறவரே, உம்மிடத்திற்கு என் கண்களை ஏறெடுக்கிறேன்" (சங். 123:1). "அதிகாலையில் உமது கிருபையைக் கேட்கப்பண்ணும், உம்மை நம்பியிருக்கிறேன், நான் நடக்கவேண்டிய வழியை எனக்குக் காண்பியும்; உம்மிடத்தில் என் ஆத்துமாவை உயர்த்துகிறேன்" (சங். 143:8).

தேவனுடைய ஞானமும், வழிநடத்தலும் உறுதியானதும் தோல்வியற்றதுமாக இருப்பதினால் நாம் எல்லா நல்லுணர்வுகளோடு ஆவிக்குரிய ரீதியில் தேவனிடத்தில் சேர வேண்டும். அவரே நம்முடைய சகாயர். அவரே நம்மை ஏமாற்றங்களிலிருந்து ஆச்சரியமான காரியங்களில் நம்முடைய தலையை உயர்த்துவார். அவர் நம்முடைய தேவைகளை அறிந்து ஏற்றக்காலத்தில் குறித்த வழியில் நடத்துபவர். இது அவருடைய பங்கு. நாம் அவரை நோக்கிப் பார்த்து, அவர் நமக்கு முன் வைத்திருக்கும் மீட்பை பற்றிக்கொள்வதே நம்முடைய பங்கு (1 தீமோ. 6:12, 19; எபி. 6:18). விசேஷமாக நம்முடைய காலத்தில் நாம் மேலோங்கிப் பார்க்கும்போது மிகப்பெரிய காட்சிகளை மிகப்பெரிய காரணங்களுடையதாகக் காணலாம். இறுதியாக, நம்முடைய மீட்பையும், தொடர்ந்துவரும் இந்த முழு உலகத்தின் மீட்பையும் வெகு சீக்கிரத்தில் காணலாம்.

### அத்திமரம் துளிர்விடுதல்

புறஜாதிகளின் காலத்தைக்குறித்து சம்பாஷித்தப் பின் இயேசு இஸ்ரயேலரை அத்திமரத்திற்கு ஒப்பிட்டுப் பேசத்துவங்கினார். இஸ்ரயேல் மட்டுமல்ல, மற்ற தேசங்களும் துளிர்த்துப் பூக்குமென்று இயேசு கூறினார். இரண்டாம் உலகப்போர் துவங்க அத்திமரத்தின் மறுபிறப்போடு பல தேசங்களும் துளிர்விட்டது. இராஜ்யம் வாசலண்டையில் இருப்பதை இந்த அடையாளங்கள் குறிப்பிடுகிறது (மத். 24:33). புறஜாதிகளின் காலம் முடிவு பெற்றவுடன் ஐரோப்பாவின் மையமான வல்லமைகள் சுக்குநூறானது. "இவையெல்லாம் சம்பவிக்குமுன் இந்தச் சந்ததி ஒழிந்துபோகாதென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (லூக். 21:32) என்று இயேசு கூறினார்.

### பாழாக்கப்படுவதிலிருந்து திரும்பக் கொடுத்தல்

இயேசு, எருசலேமின் பாழாக்குதலைக் குறித்து, லூக். 21-ம் அதிகாரத்தில் பேசத் துவங்கினார். அத்தி மரம் துளிர்விடுவதைக்குறித்து பேசின அவர், அதின் திரும்பக் கொடுத்தலைக்குறித்து முழுமையாக விவரித்தார். முதலில், மீதியிருக்கும் இஸ்ரயேலர்களும், அதற்குப் பின் ஒரு முழு தேசமாகவும் விவரிக்கிறார். சகல தேசங்களும் இஸ்ரயேலுக்கு வருகையில், அவர்கள் தப்புவதற்கான எல்லா நம்பிக்கையும் அற்றுப்போகும் போது, தேவன் இஸ்ரயேலை இரட்சிப்பதற்காக எடுக்கும் முயற்சிகளை நாம் பார்த்துப் புரிந்துகொள்ளலாம். அவர்களின் மீட்பு, மேசியாவை திறந்த கண்களில் கண்டு புரிந்துகொள்ளும் போது, தங்களுக்காக பலி

செலுத்தினதை முழு இருதயத்தோடும் உணர்வார்கள்.

இஸ்ரயேல், இலைகள் துளிர்விடுவதோடு கனிகளையும் கொடுப்பார்கள். சரியான முறையில் வளர்ச்சியடைந்து, கிறிஸ்துவின் சாயலைப் பெறுவார்கள். மீண்டுமாக, முழுமனதோடு ஒரு அந்நியனுடைய காணிக்கை (ஏசா. 56:3-8) அல்லது ஒரு காலத்தில் விதவையாக இருந்தவள் (லூக். 21:2) ஆலயத்திற்கு மகிமை சேர்ப்பார்கள். அப்போது, கிறிஸ்துவின் தலை மற்றும் சரீரம் கொடுத்த அர்ப்பணிக்கப்பட்ட பரிசுகளாலும், அழகான கற்களினாலும் அலங்கரிக்கப்படும்.

"வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்து போவதில்லை" (லூக். 21:33). சாத்தான் மற்றும் மனுஷனின் அரசாங்கங்கள் அழிக்கப்படும். அசைக்கக்கூடிய அனைத்தும் அசைக்கப்படும் (எபி. 12:25-29). நம்முடைய விசுவாசம், அசைக்கப்படாதிருந்தால் வருங்காலத்து ஆசீர்வாதங்களை நிச்சயமாகப் பெறுவோம்.

### ஒவ்வொரு காலமும் விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

"உங்கள் இருதயங்கள் பெருந்திண்டியினாலும் வெறியினாலும் லவுகீக கவலைகளினாலும் பாரமடையாதபடிக்கும், நீங்கள் நினையாத நேரத்தில் அந்த நாள் உங்கள் மேல் வராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள். பூமியிலெங்கும் குடியிருக்கிற அனைவர்மேலும் அது ஒரு கண்ணியைப் போல வரும். ஆகையால் இனிச் சம்பவிக்கப்போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி, மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்கப்பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு, எப்பொழுதும் ஜெபம்பண்ணி விழித்திருங்கள்" (லூக். 21:34-36).

மத்தேயு, நோவாவின் நாட்களைக்குறித்து பேசுகிறார். "ஜனங்கள் புசித்தும் குடித்தும், பெண் கொண்டும் பெண்கொடுத்தும், ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டுபோகுமட்டும் உணராதிருந்தார்கள்" (மத். 24:37-39). வாழ்க்கையின் இயல்பான கிரியைகள் இதில் வரிசைப்படுத்தப்பட்டிருக்கிறது. ஆயினும், நோவாவின் நாட்களில் கலவரம் நிறைந்ததாகக் காணப்பட்டது (ஆதி. 6:1-12). இயேசு, இந்தத் தீமையான காலத்தை சாதாரண இயல்பான சொற்களைக் கொண்டு மிக அருமையாக விவரிக்கிறார். இந்தப் பாடமானது, நம்முடைய சொந்த நாகரீகத்தை விட்டு, வஞ்சிக்கக்கூடிய பாவ வழிகளில் செல்லக்கூடிய, தவறானப் பாடங்களை எடுத்துக்கொள்ளக் கூடாது.

இந்த மூன்று கன்னிகளுக்கும் நாம் எச்சரிப்பாக இருக்க வேண்டும். "திராட்சரசம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிபண்ணும்; அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல ஐயோ! யாருக்கு வேதனை? யாருக்குத் துக்கம்? யாருக்குச் சண்டைகள்? யாருக்குப் புலம்பல்? யாருக்குக் காரணமில்லாத காயங்கள்? யாருக்கு இரத்தங்கலங்கின கண்கள்? மதுபானம் இருக்கும் இடத்திலே தங்கித் தரிப்பவர்களுக்கும், கலப்புள்ள சாராயத்தை நாடுகிறவர்களுக்குந்தானே. மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளபளப்பாய்த் தோன்றும்போது, நீ அதைப் பாராதே; அது மெதுவாய் இறங்கும். முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும். உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும்; உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும். நீ நடுக்கடலிலே சயனித்திருக்கிறவனைப்போலும், பாய்மரத்தட்டிலே படுத்திருக்கிறவனைப்போலும் இருப்பாய். என்னை அடித்தார்கள், எனக்கு நோகவில்லை; என்னை அறைந்தார்கள் எனக்குச் சுரணையில்லை; நான் அதைப் பின்னும் தொடர்ந்து தேட எப்பொழுது விழிப்பேன் என்பாய்" (நீதி. 20:1; 23:29-35). இவைகள் நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியைத் தடுத்துவிடும். "முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவர்கள் வசனத்தைக் கேட்கிறவர்களாயிருக்கிறார்கள்; கேட்டவுடனே போய், பிரபஞ்சத்திற்குரிய கவலைகளினாலும் ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும் நெருக்கப்பட்டு, பலன்கொடாதிருக்கிறார்கள்" (லூக். 8:14).

இந்த கண்ணியிலிருந்து தப்பித்துக்கொள்வதற்கு நாம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும் (வெளி. 17:2, 6; எபே. 5:18-20; ரோ. 13:13; 1 பேது. 5:7).

செயல்முறை

# சட்டப்படி புறஜாதியாரை வெளியேற்றுதல்



"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூ. 2:3).

ஆகஸ்டு 1914-ம் வருடத்திலிருந்து இஸ்ரயேல் இறுதியாக புறஜாதி தேசங்களிலிருந்து விடுதலைப் பெறுவதை சட்டப்படி புறஜாதியாரை வெளியேற்று வதாகும்.

அதுபோல, இந்த உலகத்தின் சாத்தானுடைய இராஜ்யத்திற்குப் பதிலாக மேசியாவின் இராஜ்யம் அதேகாலத்தில் ஸ்தாபிக்கப்படும். புறஜாதியாரின் அரசாங்கங்கள் முழுமையாகப் புறக்கணிக்கப்பட்டு, சாத்தான் முழுமையாகக் கட்டப்பட்டதைக் குறிப்பிடும். ஏனெனில், அவனுடைய கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் பூமி முழுவதும் அழிக்கப்படும். அதேநேரத்தில், இஸ்ரயேல் தம்முடைய நியாயாதிபதிகளையும், பழமையான ஆலோசகர்களையும் பெற்றிருக்கும். இஸ்ரயேல் தம்முடைய மேசியாவை அடையாளம் கண்டுபிடித்து, பின் சகல ஜனங்களையும் ஆசீர்வதிக்கக்கூடிய இரட்சப்பின் ஆசீர்வாதங்களைக் கொடுக்கும்படியாக எல்லா தேசங்களுக்கும் மேலாக உயர்த்தப்படும்.

### புறஜாதிகளின் காலம்

ஆகஸ்டு 1914-ம் வருடம், புறஜாதிகளின் காலம் முடிவுப்பெற்றது. அப்போது, சட்டப்படி புறஜாதிகள் வெளியேற்றப்பட துவங்கினார்கள். லூக். 21:24-ல், தீர்க்கத்தரிசன பகுதியை இயேசு விவரித்தார். எருசலேம், "புறஜாதிகளின் காலம் வரைக்கும் புறஜாதியாரால் மிதிக்கப்படும்" என்றார். இப்படியாக, இந்தப் பூமியின் மேல் புறஜாதிகள் ஆட்சிசெய்வதற்கு ஒரு குறிப்பிட்ட காலத்தைப் பற்றி குறிப்பிடுகிறார். இந்தப் புறஜாதியாரின் ஆட்சியின் பிரதான குணாதிசயங்களை தீர்க்கதரிசனமாகக் கூறினார். இந்தப் புறஜாதிகளின் காலம் முதலாம் உலகப்போரின் துவக்கத்தில் முடிவடைந்தது. இந்தப் பூமியின் முன்னோடியாக நாடுகள் அதிகமாக பெலவீனப்பட்டது. இது நேபுகாத்நேச்சார் கண்ட சிலையின் 10விரல்களாம். "இராஜாக்களின் தெய்வீக உரிமை" என்ற காரியத்தை இது அளித்தது. ஐரோப்பா தேசங்கள் "கிறிஸ்தவ மண்டலமாக" இருந்தது. தொடர் சங்கிலியான சம்பவங்கள் காலப்போக்கில் இஸ்ரயேல் தனி தேசமாக திகழ வழிவகுத்தது.

இஸ்ரயேலின் திரும்பக்கொடுத்தல் ஒரு நவீன அற்புதமாகும். இஸ்ரயேல் தேசம் இரண்டு முறை நெருக்கப்பட்டு, ஜாதிகளுக்குள் சிதறடிக்கப் பட்டதாக வரலாறு கூறுகிறது. 70 வருடங்கள் பாபிலோனில் சிறைப்பிடிக்கப்பட்ட பின், இஸ்ரயேல் மீண்டும் கூட்டிச்சேர்க்கப்பட்டு, பட்டணத்தில் மதிற்சுவர்கள் கட்டப்பட்டது. ஆலயமும் கட்டப்பட்டது. ஆனால், தாவீதின் வம்சத்திற்கு மீண்டும் சிங்காசனம் கொடுக்கப்படவில்லை. நூற்றுக்கணக்கான வருடங்களுக்குப் பின் மீண்டும் தேசம் பாழாக்கப்படும் என்று இயேசு தீர்க்கதரிசனமாக அறிவித்தார். இந்த சிதறடிப்பு, பல நூற்றாண்டுகள் நீடித்தது. புறஜாதியாரின் காலத்தைக்குறித்த விளக்கத்தில், இஸ்ரயேல் தேசம் பாழாக்கப்படுவதையும் கொண்டிருந்தது.

பாபிலோனியர்கள் எருசலேமை அழிக்கும்போது, யூத இராஜயம் முடிவடைந்தது. இது, 2 நாளா. 36:17-20-ல் பதிவு செய்யப்பட்டுள்ளது. இயேசு சொன்ன தீர்க்கதரிசனத்திற்கும், எருசலேம் இரண்டாம் முறை பாழாக்கப்படுவதற்கும் உள்ள தொடர்பை பார்க்கவும். "பட்டயக்கருக்கினாலே விழுவார்கள்" "சகல புறஜாதிகளுக்குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்"இவ்விடத்தில் ஒரு கல்லின்மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப்போகும் (லூக். 21:24; மத். 24:2).

பயங்கரமான இந்த அழிவைக்குறித்தும், கிபி. 70-ம் வருடம் பட்டணம் எரிக்கப்பட்டதையும் குறித்து ஜோஸபஸ் பதிவு செய்திருக்கிறார். "அக்கினி சூடாக இருந்ததால், கல்லுகள் அலறின" என்று எழுதியிருக்கிறார். இது ஆலயத்தில் பணி செய்யும் ஆசாரியத்துவத்தையும், பணிகளையும் நிறுத்தியது. மீதியிருந்த யூதர்கள், உலகமெங்கும் பல நூற்றாண்டுகளாக சிதறடிக்கப்பட்டார்கள்.

### ஆவ் ஒன்பதாம் தேதி

யூத காலண்டரில், புறஜாதிகளின் காலத்தின் முடிவை இரண்டு மிகப்பெரிய பேரழிவுகள் கொண்ட ஒரே தேதி ஆச்சரியப்படக் கூடியதாக இருக்கிறது. புறஜாதிகள் இரண்டு முறைகள் ஆலயம் ஆவ் ஒன்பதாம் தேதி அழிக்கப்பட்டது என்பதை எல்லா யூத ஜனங்களும் நன்கு அறிந்திருந்தார்கள். யூத

வரலாற்றில் இந்த ஒருநாள் துக்ககரமாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த எருசலேம் மற்றும் ஆலயத்தின் முதல் அழிவை நினைவுகூரும் படி புலம்பலை வாசிப்பார்கள். இன்றும், ஆவ் ஒன்பதாம் தேதி, பல பயங்கரமான சம்பவங்கள் நடந்ததைக் காணலாம். 1290-ம் வருடம் இங்கிலாந்திலிருந்தும், 1492-ம் வருடம் ஸ்பானியா தேசத்திலிருந்தும் யூதர்கள் வெளியேற்றப்பட்டார்கள்.

ஆவ் ஒன்பதாம் தேதிக்கும், முதலாம் உலகப்போருக்கும் உள்ள சம்பந்தம் தெரியவில்லை. 1914 ஆவ் மாதம் ஒன்பதாம் தேதி, ஆகஸ்டு 1 மாலையில் துவங்கியது. இது ஒரு முக்கியமான தேதியாகும். எனெனில், அதேநாள் 7 மணி மாலையில் ஜெர்மனி, ரஷ்யாவின் மேல் போர் தொடுத்தது. அவர்கள் சேனை மேற்கு எல்லையைத் தாண்டி பிரான்ஸை எதிர்க்க ஆயத்தமானார்கள். பிரான்ஸ் மற்றும் கிரேட் பிரிட்டன் போரில் ஈடுபட்டதை இந்த இரண்டு வேலைகளும் நமக்கு வலியுறுத்துகிறது. ஆனாலும், அந்தப் போர் அவர்களுக்குள் முடிவடையாமல், ரஷ்யா, ஆஸ்திரேலியா மற்றும் ஹங்கேரியும் கலந்துகொண்டது. 1914 ஆவ் ஒன்பதாம் தேதி, ஜெர்மனியின் கிரியைகளானது இந்த யுத்தம் உலகளாவியலான ஒரு பிரச்சனையாக இருக்கும் என்பதை உறுதிபடுத்தியது.

முதலாம் உலகப்போர் மனிதவரலாற்றில் அரசாங்கங்கள் பொருளாதாரம் மற்றும் சமுதாய அமைப்புகளில் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று வரலாற்று ஆசிரியர்கள் கண்டார்கள். நிச்சயமில்லாததும், பாதுகாப்பின்மையும் இந்த நவீன காலத்தின் குணாதிசங்களாக இருக்கிறது. முதலாம் உலகப்போர், இரண்டு மிகப்பெரிய பிரச்சனைகளைத் துவக்கியதாகவும், அதற்கு இரண்டு முக்கிய பலன்கள் கிடைத்ததாகவும் வேத மாணவர்கள் கூறுகிறார்கள் : சகல ஜாதிகளும் பலவீனப்பட்டு, யூத ஜனங்களின் வளர்ச்சிக்குரிய காரியங்களில் ஆர்வம் ஏற்பட்டது. முதலாம் உலகப்போர் முடிவுக்கு முன்னமே, பிரிட்டீஷ் அரசாங்கம் பாலஸ்தீனாவை துருக்கியிடமிருந்து எடுத்து யூத ஜனங்களுக்கு குடியிருக்கும் தங்களுடைய தாய் தேசத்தை ஆயத்தப்படுத்தியது. 1948-ம் ஆண்டு யூத தேசம் தனியாகக் கொடுக்கப்படுவதை அறிவித்ததற்குப் பின் பிரிட்டீஷ் ஆட்சி முப்பது ஆண்டுகளில் முடிவடைந்தது.

### வேத மாணவர்களின் எதிர்பார்ப்புகள்

1876-ம் வருடத்தின் துவக்கத்தில், 1914-ம் வருடம் புறஜாதிகளின் முடிவு காலத்தைக் குறிக்குமென்று சில கிறிஸ்தவர்கள் விசுவாசித்தார்கள். இஸ்ரயேலர்களின் அவ்விசுவாசத்தினிமித்தம், லேவியராகமம் 26-ம் அதிகாரத்தில் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டதிலிருந்து முடிவுக்கு வந்தார்கள். தேவனுடைய எச்சரிப்புகளுக்கு இஸ்ரயேல் செவிக்கொடுக்காததினால், அவர் ஏழத்தனையாக தண்டித்தார். ஆதிகாலத்து வேத மாணவர்கள், (1) ஏழு அடையாளமான வருடங்கள், (7 x 360 =) 2520 வருடங்கள் என்று கணக்கிட்டார்கள். (2) கடைசி இராஜா புறக்கணிக்கப்பட்ட கிமு. 606-ல் புறஜாதிகளின் காலங்கள் துவங்கியது என்று கண்டார்கள். (3) 2520 வருடங்கள் 1914-ம் வருடம் முடிவடையுமென்று எதிர்பார்த்தார்கள்.

1874-ம் வருடம், இயேசு வந்துவிட்டார் என்ற நம்பிக்கைகளும் புறஜாதியாரின் காலங்கள் 1914-ம் வருடம் முடிவடைகிறது என்ற விசுவாசமும் சபையைக் கூட்டிச்சேர்க்கும் அறுவடை வேலைகளில் டேஸ் ரஸலுக்கு மிகப்பெரிய உந்துதலாக இருந்தது. 1800-ம் வருடத்திலிருந்து 1900 வருட துவக்கத்திற்குள் பொய் மத அமைப்புகளிலிருந்து வெளியே வந்த சகோதர சகோதரிகள் இரண்டு இரட்சிப்புகளைக்குறித்தும், இராஜ்யத்தைக்குறித்தும் கற்றுக்கொள்வதில் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். 1914-ம் வருஷம் புறஜாதியாரின் காலம் நிறைவேறு முன் சபை பூரணப்பட்டு மகிமையடைந்துவிடும் என்ற பலர் ஒரே சிந்தையாக எதிர்பார்த்தார்கள். இந்த ஓர் எதிர்பார்ப்பு, சகோதரர்களுக்கு ஒரு மிகப்பெரிய சோதனையாக அமைந்தது.

1914-ம் வருடத்திற்கும், சபையின் இறுதி வேலைகள் இஸ்ரயேலை திரும்பக்கொடுத்தல் மற்றும் அரசியல், சமுதாயம், பொருளாதாரம் மற்றும் எல்லா அமைப்புகளும் மிகக் குறுகிய காலத்திற்குள் கவிழ்ந்துவிடுமா என்று 1910-ம் வருடம் சகோ. ரஸல் ஆச்சரியப்பட்டார். "நாம் ஏற்றக்காலத்தில் தவறான காரியங்களை எதிர்பார்க்கிறோமா?" என்று 1914-ம் வருடம் ஜனவரி மாதம் காவற்கோபுரத்தின் வழியாகக் கேட்டார். ஆகஸ்டு 1914-ம் வருடம் முதலாம் உலகப்போர் துவங்கினபோது, புறஜாதிகளின் காலம் உண்மையில் முடிவடைந்துவிட்டது என்று தெளிவானது. ஆனால், எந்த நம்பிக்கையோடு கிறிஸ்துவோடுகூட சகோதரர் அறுவடை வேலைகள் தொடர்ந்து நடத்தினார்கள்?

சபையின் நிறைவோடு சம்பந்தப்பட்ட தீர்க்கதரிசனங்களைப் புறஜாதிகளின் காலத்தோடு இணைத்துப் பார்ப்பது தவறு என்று 1916-ம் வருடம் சகோ. ரஸலின் மரணத்திற்கு முன் அவர் உணர்ந்தார். அவர், யூத யுகம் மற்றும் சுவிசேஷ யுக அறுவடையின் இணைகளிலிருந்து அனுமானித்தார். 1914-ம் வருடம் புறஜாதியாரின் காலங்கள் முடிவடைந்தது என்று

நம்பினதால், சபை நிறைவடைந்து, இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு, "மேற்கொண்டு ஒரு வருடம் அல்லது இரண்டு அல்லது மூன்று வருடம்" செல்லும் என்று எதிர்பார்த்தார். ஆனால், அதையும் தாண்டி ஒரு நீண்ட காலம் சென்றுக்கொண்டிருக்கிறது.

**முதலாம் உலகப்போருக்கு பின்**

முதலாம் உலகப்போர் எல்லைக்கடங்காத பிரச்சனைகளும், அதிர்ச்சியூட்டும் சிதறல்களும் தொடர்ந்தது. "இந்த மிகப்பெரிய போரானது, 1914-18 நம்முடைய காலத்தையும், (1914-க்கு முன்) இரண்டாகப் பிரித்தது. பல உயிர்களைக் குடித்து, நம்பிக்கைகளை அழித்து, மாறா காரியங்களை ஏற்படுத்தி, இரண்டு யுகங்களுக்கு இடையில் ஒரு மிகப்பெரிய பிளவை ஏற்படுத்தியது" என்று ஒரு புத்தகத்தில் (The Proud Tower, Barbara Tuchman) எழுதப்பட்டிருக்கிறது.

முதலாம் உலகப்போர் பொதுவாக இந்த உலகத்தை ஆண்டுகொண்டுவந்த எல்லா ஐரோப்பிய தேசங்களும் வலுவிழந்துப் போனது. ஆட்சி செய்வதற்கான தெய்வீக உரிமையைக் கோரி, பல நூற்றாண்டுகளாக ஆஸ்திரியா - ஹங்கேரி, ஜெர்மனி, ரஷ்யா போன்ற தேசங்களிலிருந்து சர்வாதிகாரத்தைக் கவிழ்த்தது. புரட்சிகளுக்கும் வழி வகுத்தது. ஐரோப்பாவில் மத அமைப்புகளிலுள்ள விசுவாசம் அழிக்கப்பட்டது. மேலும், கிறிஸ்தவத்தின் காரணமாகவே இந்த யுத்தங்கள் நடந்தது என்று தேசிய அளவில் அரசாங்கம் அதை நியாயப்படுத்தியது. இந்தப் பிரச்சனைகளினிமித்தம் ஐரோப்பாவின் சமுதாயம் மிகப்பெரிய அளவில் ஒழுக்கக்கேடு அடைந்தது. இது இசையிலும், கலைகளிலும், கல்வியிலும் மிகப் பெரிய மாற்றங்கள் ஏற்பட்டது.

1914-ம் வருடம் முதல், கிட்டத்தட்ட இந்த உலகம் அனைத்துப் பிரச்சனைகளும் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ முதலாம் உலகப் போருக்கு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது. ஜெர்மனி மற்றும் இத்தாலியிலுள்ள பலவீனமான அரசாங்கங்கள் (சகல அதிகாரங்கள் பெற்ற) மிகக் குறைந்த வருடங்களுக்குள் ஜனங்களை இரண்டாம் உலகப்போருக்கு வழி நடத்தியது. ரஷ்யாவின் சர்வாதிகாரத்தின் பயங்கரமாக புறக்கணிப்பு, பூமியின் மேல் கம்யூனிஸ்டு புரட்சிகளுக்கு வழி நடத்தியது. முதலாம் உலகப்போரினாலும், இரண்டாம் உலகப்போரில் நடந்த பேரழிவினாலும், பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் தங்களுடைய சாம்ராஜ்யங்களை இழந்து, அவைகளின் ஒவ்வொரு காலனிகளும் அவர்களின் கையைவிட்டு நழுவியது. முதலாளிவர்க்கம் மற்றும் கம்யூனியஸத்திற்கு இடையில் ஏற்பட்ட பிரச்சனைகள் மத்தியில் முன்னாள் இந்த காலனிகள் கொஞ்சம் கொஞ்சமாக வழுவிச்சென்றது. அரபு - இஸ்ரயேல் மத்தியிலிருக்கும் பிரச்சனைகள், முதலாம் உலகப்போருக்குப் பின் மத்திய கிழக்கு தேசங்களிலுள்ள பிரச்சனைகளுக்கு வேர் விட்டது. உண்மையில், முஸ்லீம்கள் மேற்கத்திய தேசங்களோடு ஏற்பட்ட பிரச்சனைகள், தொடர்ந்து வந்த இரண்டு போர்களிலும் காலனிகளின் வல்லமை பலவீனப்பட்டது. இந்நாளில், காணப்படும் புரட்சிகள் அனைத்துமே, முதலாம் உலகப்போரை அஸ்திபாரம் கொண்டதாக இருக்கிறது.

**சட்டப்படி புறஜாதிகளை வெளியேற்றுதல்**

புறஜாதியாரின் வல்லமைகள் சட்டப்படி வெளியேற்றப்படுவதை இந்த 20-ம் நூற்றாண்டு பிரச்சனைகளுக்கு மேலும் ஆதாரமாக இருக்கிறது. பல வசனங்கள் இக்காலத்தைக் குறித்தும், புறஜாதியாரின் வெளியேறுதலைக் குறித்தும் விவரிக்கிறது. மலைகள் நடுச்சமுத்திரத்தில் பெயர்ந்து போகுமென்றும், பர்வதங்கள் அசையும் என்றும் சங்கீதக்காரர் 46-ம் சங்கீதத்தில் குறிப்பிடுகிறார். இந்த அடையாளமான மொழியை நாம் மொழிபெயர்க்கையில் - உயர்வானதும், ஜனங்களை ஒடுக்குகிற அரசாங்கங்களும் பயங்கரமாகக் கவிழ்க்கப்பட்டு, ஜனங்களுக்கு சாதகமான அரசாங்கம் இணைந்து செயல்படும். இந்தக் கடைசி நூற்றாண்டில், தெய்வீக உரிமைகளையும் அதிகாரத்தைக் கோரும் பலவிதமான சர்வாதிகாரங்களும் ஆதிக்கம் செலுத்தும் ஆட்சிகளும் தூக்கியெறியப்பட்டு, ஜனநாயக நாடாக மாற்றப்பட்டுள்ளது.

இந்த உலகம் நான்கு புறஜாதி இராஜ்யங்களினால் ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஆட்சி செய்யப்படும் என்று நேபுகாத்நேச்சாரின் பல உலோக சிலையின் சொப்பனம் விளக்கம் கூறுவதாக தானியேல் 2-ஆம் அதிகாரம் கூறுகிறது. அந்தச் சிலையின் பொன்னான தலையாகவும், இஸ்ரயேலை அழிக்கக்கூடிய பேரரசாகவும் நேபுகாத்நேச்சார் அடையாளம் கண்டுகொள்ளப்பட்டார். இது புறஜாதியாரின் ஆளுகை காலத்தில் துவங்கியது. அந்தச் சிலையை கைகளினால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து, மோதி அது பதரைப் போல் பறக்கும் வரைக்கும் சுக்குநூறாக நொறுக்கினது என்று 35-ல், அந்த புறஜாதிகளின் ஆளுகையின் அழிவைக் குறித்து கூறுகிறது. பொடியாக்கப்பட்டு, பதரைப் போல பறக்கடிவிக்கப்படும் செயல்கள் புறஜாதியாரின் வல்லமைகள் எவ்வாறு அழிக்கப்பட்டு, சட்டப்படி வெளியேற்றப்படும் என்பதைத் தெளிவாக நமக்குக்

காட்டுகிறது. இப்போதும் மிகப்பெரிய சாம்ராஜ்யங்கள், தேசங்கள் அனைத்தும் சிறிய பகுதிகளாக நொறுக்கப்பட்டுள்ளது. அதாவது, பழமையான, அழிந்துபோன தேசங்களிலிருந்து சிறிய தேசங்கள் உருவாயிருப்பதைக் காணலாம்.

எலியா கண்ட பூமியதிர்ச்சி, காற்று, அக்கினி இந்தப் பூமியின் முழு குடும்பங்களும் ஆசீர்வதிக்கப்படுவதற்காக ஏற்படும் படிப்படியான பிரச்சனைகள் குறித்து, மிகத் தெளிவாக வெளிப்படுத்துகிறது. இந்தத் தரிசனம் பிரச்சனைகளில் காணப்படும் வளர்ச்சிகளையும் தெளிவாகக் காட்டுகிறது. காற்றுகள் - யுத்தத்தையும், பூமியதிர்ச்சி - புரட்சிகளையும், அக்கினி - சர்வாதிகாரத்தையும் அடையாளப் படுத்துகிறது. ஒவ்பொரு தேசங்களுக்கு இடையில் யுத்தங்களையும், புரட்சிகளையும் காணலாம். தனிப்பட்ட நபர்கள் மத்தியில் இந்த சர்வாதிகாரத்திற்குரிய பிரச்சனைகளைக் காணலாம். "தேசியளவிலான பிரச்சனைகள் தனிமனித பிரச்சனைகளாக மாறும்" என்று 1916-ம் ஆண்டு பிப்ரவரி மாத இதழில் (காவற்கோபுரம்) சகோ.ரஸல் எழுதினார். அந்த மனித பிரச்சனைகளும் தோல்வி நிலையை அடைந்துகொண்டு வருகிறது என்று விமர்சகர்கள் பேசுகிறார்கள். ஆகவே, இந்த உலகத்திற்கு மேலிருக்கும் கட்டுப்பாடுகள் மிகவும் குறைய துவங்கிற்று. இப்படியாக, தோல்வியடைந்த தேசம், அதிகமான தீவிரவாதிகளை உருவாக்கும் என்று விவரிக்கப்படுகிறது.

சமச் சீரில்லாத யுத்தங்களில் வல்லமையான இராணுவ தேசங்கள் சம்பிரதாயமாக இல்லாத பிரச்சனைகளில் ஈடுபடுவதினால், பாரம்பரியமாக ஏற்பட்ட யுத்தங்கள் குறைந்தது என்று இராணுவ கூற்றுகள் கூறுகிறது. சமச் சீரில்லாத யுத்தத்திற்கு இந்த யுத்தத்தின் அச்சுறுத்தல் ஒரு சிறந்த மாதிரியாக உள்ளது. அதாவது, ஒரு நலிந்த தேசம் எந்தவித வல்லமையான ஆதாரங்களின்றி ஒரு வல்லமையுள்ள தேசத்தை எதிர்ப்பது, இதைக் குறித்து யோயேல் தீர்க்கதரிசி முன்னறிவித்திருக்கிறார். "உங்கள் மண்வெட்டிகளைப் பட்டயங்களாகவும், உங்கள் அரிவாள்களை ஈட்டிகளாகவும் அடியுங்கள்; பலவீனனும் தன்னைப் பலவான் என்று சொல்வானாக" (யோயே. 3:10). அனுதினம் பயன்படுத்தப்படக்கூடிய கருவிகள் பேராயுதங்களாக மாற்றப்பட்டது. செப்டம்பர் 11-ம் தேதி விமானங்களைக் கொண்டு தாக்கிய தீவிரவாதிகள், பெலவீனர்களாக இருந்தாலும், தங்களை பலவான்களென்று சொல்லிக்கொண்ட காரியம் இதற்குச் சரியான ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

பூமியின் ஓரங்களிலிருந்து தேசதேசமாக சூழற்க்காற்றைப் போல எழும்பக்கூடிய இந்தத் தீமை (புறஜாதிகளின் வெளியேறுதல்) எரே. 25:31-32-ம் வசனங்களில் விவரிக்கப்படுகிறது. ஒவ்வொரு தேசமாகப் பிரச்சனைகள் எவ்வளவு தீவிரமாகவும், சமுதாயங்களைப் பாதிக்கக்கூடிய அளவிலும் எவ்வாறு பரவுகிறது என்று கிழக்கத்திய ஐரோப்பாவில் 1989-ல் கம்யூனிசம் தூக்கியெறியப்பட்டதும் 2011-ல், அரபியர்களின் எழுற்சியும் தெளிவாகக் காட்டுகிறது.

### தேவனுடைய நோக்கம்

1914-ம் வருடம் புறஜாதிகளின் காலம் முற்றிலுமாக நிறைவுபெறாமல், இவ்வளவு நீண்ட காலத்தை தேவனுடைய திட்டத்தில் அவர் வடிவமைத்ததன் நோக்கமென்ன? தேவன் சபையின் நிறைவைக்கொண்டுவராமல், அனைவரும் எதிர்பார்த்தபடி இராஜ்யத்தை ஏன் ஸ்தாபிக்கவில்லை?

1914-ம் வருடத்திலிருந்து சாத்தானுடைய இராஜ்யம் துண்டுதுண்டாக நொறுக்கப்பட்டு வருவதை மனுக்குலம் கண்டுகொண்டு வருகிறது. மிக உயர்ந்ததும், ஜனங்கள் மத்தியில் காணப்படும் ஜனங்களை நசுக்கும் அரசாங்கங்கள் முதல் பயனற்ற குப்பையைப் போல தாழ்த்தப்பட வேண்டும். அடுத்து, அதற்குப் பின் வந்த ஒவ்வொரு அரசாங்கங்களும் தராசில் நிறுக்கப்பட்டு ஜனங்களின் பார்வையில் குறைவாகவே காணப்பட்டு வருகிறது. இந்த உலகத்தில் தொடர்ந்து வரும் அரசாங்கங்கள், இந்த உலகத்திற்குப் பாத்திரமானதா? என்று கண்காணித்துக்கொண்டே வருகிறது. ஆனால், ஒவ்வொரு முறையும் மீதியிருக்கும் அரசியலில் மற்றும் பூமியின் அமைப்புகளிலிருந்து நீக்கப்பட வேண்டியதும் தேவைப்படும் காரியங்களும் இருந்துக்கொண்டே இருக்கிறது.

புறஜாதியாரின் வல்லமைகள் புறக்கணிக்கப்படும் இந்நேரத்தில் அதிகரிக்கக்கூடிய அறிவு அரசாங்கங்களையும், இராஜ்யங்களையும் தூக்கியெறிந்து, மனுஷரின் சரீரத்தை சீரமைக்கும் பொருட்டு, நல்லதொரு தரமான சமுதாயத்தை அமைக்க, புதிய ஆட்சிமுறைகள் அறிமுகப்படுத்த முயற்சிக்கிறார்கள். மனுஷன் தம்முடைய சொந்த கைகளினால் இந்த பொன்னான காலத்தைக் கொண்டுவருவதற்கு தேவன் அனுமதிக்கிறார். வலி, வேதனைகள், பசி, வயோதிகம் போன்றவற்றை நீக்க

மனுக்குலம் முயற்சிக்கிறார்கள். இவைகள், மனித வரலாற்றின் விடியலிலிருந்தே ஏற்றுக்கொள்ளப் பட்டதாகும். இப்படிப்பட்ட மிக உன்னதமான வளர்ச்சியை, இந்த வாழ்க்கையில் ஏற்படுத்துவதற்கு ஏறெடுக்கும் முயற்சிகளின் மத்தியில், மனுஷன் பாவத்தைவிட்டும், சுயநலத்தை விட்டுவிலகாமலும், சீரழிந்த மனுஷனுடைய இருதயம் மற்றும் சிந்தையை மாற்ற முடியவில்லை. தீர்க்கதரிசனமாகச் சொல்லப் பட்டபடி எந்தளவுக்கு சாதகமான நிலைகள் வந்தாலும், மனுக்குலம் மிகுந்த அதிருப் தியானவர்களும், பிரச்சனைக்குரியவர் களாகவும், மிகுந்த அழுத்தமுள்ளவர் களுமாக இருக்கிறார்கள்.

பூமியின் அரசாங்கங்களை அழித்து, பொது ஜனங்களின் உரிமைகளுக்காக யுத்தம் செய்யக்கூடிய காரியங்கள் இரண்டுமே, மனுஷர் மத்தியில் தேவனுடைய இராஜ்யம் முழுமையாக ஸ்தாபிக்கப்படுவதற்குரிய முக்கியமான ஆயத்தங்களாக இருக்கிறது. இந்த ஒரு ஆயத்தத் திற்குரிய காலப்பகுதியில் பெரும்பாதையிலுள்ள இடறல்கள் அனைத்தும் நீக்கப்படும் என்று ஏசாயா தீர்க்கதரிசி விவரிக்கிறார் (ஏசா. 62:10). புறஜாதிகளின் வல்லமைகள் வெளியேற்றப்படும் செயல்முறைகள், மனுக்குலம் பெரும்பாதையான வழியில் தடையின்றி நடப்பதற்குத் தேவையான ஆயத்தங்கள் மேற்கொள்வதை இந்தத் தீர்க்கதரிசனம் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. இந்த ஆயத்த வேலைகள், பூமிக்குரிய அமைப்புகளையும், ஆவிக்குரிய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் எந்த காரியங்களையும் தகர்த்து, மனுக்குலத்தின் வளர்ச்சிக்குத் தடையாக இருக்கும் சகல இடறல்களையும் நீக்கி, தடையின்றி பெரும்பாதையில் அவர்களைப் பிரவேசிக்கச் செய்யும்.

தேவனுடைய திட்டத்தில் இந்த புறஜாதிகளின் வல்லமைகளை வெளியேற்றுவதன் காலம் மிக நீண்டதாகத் தோன்றினாலும், தீமையின் அனுமதியின் ஒரு மிகப்பெரிய பங்கைப் பெற்றிருக்கிறது. இந்தப் பூமியின் மேல் மனுஷர் முழுமையாகப் பெருகின பின், இந்தப் பூமியின் கடந்த காலமும், நிகழ்காலத்து அமைப்புகள் பற்றிய அனுபவங்களையும், எல்லாவிதமான சாதகமான சூழ்நிலையில் பாவத்தின் விளைவுகளின் அனுபவங்களையும் பெறவேண்டும் என்று தேவன் அனுமதித்திருக்கிறார். இந்த ஒரு நீண்டகாலம், யூத ஜனங்களின் விசுவாசம் சோதிக்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட வாக்குத்தத் தங்கள் நினைப்பூட்டப்பட்டு, இந்த முழு மனுக் குலத்தைப் போஷித்து, கற்பிக்கக்கூடிய மிகச் சிறப்பானதும், அற்புதமானதுமான உன்னத உரிமைகளைப் பெறுவதற்கு தேவன் அவர்களை ஆயத்தப்படுத்தினார். இவைகளுக்கு மத்தியில் தேவன், இறுதியான பாத அங்கத்தினர்களும் இந்தப் பொதுவான அனுபவங்களில் பங்கெடுத்து சீர்பொருந்துவதற்கு அனுமதித்திருக்கிறார். "குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூ. 2:3).

இஸ்ரவேல் திரும்பக்கொடுத்தல்

# பிதாவின் காலத்தில், இஸ்ரயேல்



"ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" (அப். 1:6).

Robert Gray

இந்தப் பூமிக்குரிய இராஜ்யத்தை தேவன் ஆயத்தம் செய்வதற்கு இஸ்ரயேலை சீர்படுத்துவதில் 1914-ம் வருடம் நடந்த மிகப்பெரிய போர் நம்முடைய காணக்கூடிய விசுவாசத்தை உறுதிப்படுத்துகிறது. ஒரு நூற்றாண்டுக்குப் பின் தேவனுடைய மகிமையான இராஜ்யத்தின் "தரிசனம்" தாமதிப்பதுபோலிருந் தாலும் அதை "நிச்சயமாக வரும்" என்று நாம் வாக்குத்தத்தம் பெற்றிருக்கிறோம் (ஆபகூ. 2:3)!

இஸ்ரயேலின் வருங்காலத்தைப் பொறுத்தவரையில், தேவனுடைய சிந்தையில் இருப்பதை எரேமியா தீர்க்கதரிசி வெளிப்படுத்துகிறார். "அவர்களுக்கு நன்மை செய்யும்படி அவர்கள்மேல் சந்தோஷமாயிருந்து, என் முழு இருதயத்தோடும் என் முழு ஆத்துமாவோடும் அவர்களை இந்தத் தேசத்திலே நிச்சயமாய் நாட்டுவேன். நான் இந்த ஜனத்தின்மேல் இந்தப் பெரிய தீங்கையெல்லாம் வரப்பண்ணினதுபோல, அவர்களைக்குறித்துச் சொன்ன எல்லா நன்மையையும் அவர்கள்மேல் வரப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்" (எரே. 32:41-42).

வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குத் திரும்பி வந்திருக்கும் யூத ஜனங்களும் கூட புறஜாதிகளுக்கு வெளிச்சமாக, மேசியாவின் இராஜ்யத்தை சேவிப்பதற்கு இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை. இயேசு பரலோகம் எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன், "என் பிதாவின் காலத்தில்" இஸ்ரயேல் சீர்பொருத்தப்படும் என்று இயேசு சீஷர்களிடம் கூறினார் (அப். 1:6-7). "அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன்; அவர்கள் பேசும்போதே நான் கேட்பேன்" (ஏசா. 65:24-25).

### முதலாவது புறஜாதியார் மிதிக்கப்படுதல்

இராஜ்யத்திற்குள் இஸ்ரயேல் பிரவேசிக்கக்கூடிய பாதை மிக உபத்திரவமானதாக இருக்கிறது. அவர்கள் செய்த உடன்படிக்கையை மீறினதினிமித்தம் தண்டிக்கப்பட்டார்கள். "உங்களை இந்தத் தேசத்திலிருந்து நீங்களும் உங்கள் பிதாக்களும் அறியாத தேசத்திற்குத் துரத்திவிடுவேன்; அங்கே நான் உங்களுக்குத் தயை செய்வதில்லை" (எரே. 16:13). இவர்கள் தேசம் பாழாக்கப்படும் என்று இயேசு முன்னறிவித்தாலும், அந்த தண்டனைக்குரிய காலளவையும் அவர் குறிப்பிட்டார். "பட்டயக் கருக்கினாலே விழுவார்கள், சகல புறஜாதிகளுக குள்ளும் சிறைப்பட்டுப்போவார்கள்; புறஜாதியாரின் காலம் நிறைவேறும்வரைக்கும் எருசலேம் புற ஜாதியாரால் மிதிக்கப்படும்" (லூக். 21:24). இஸ்ரயேல் மேல் புறஜாதிகளின் ஆதிக்கம் குறைந்த பின் தேசிய அளவில் இஸ்ரயேல் மறுபடியும் பிறக்கக்கூடிய ஒரு நம்பிக்கை ஏற்பட்டது.

நேபுகாத்நேச்சாரை அலைக்கழித்த அந்தப் பிரச்சனைக்குரிய சொப்பனம் புறஜாதிகளின் "காலங்களோடு" தொடர்புடையதாக இருந்தது. அந்த தரிசனத்தையும், அதன் அர்த்தத்தையும் தானியேல் இராஜாவாகிய பெல்ஷாத்சாருக்கு விளக்கிச் சொன்னார். அதில் காணப்பட்ட "பொன்னான தலை" நேபுகாத்நேச்சார் என்றும் விவரித்தார் (தானி. 2:38). அதைத் தொடர்ந்து மூன்று வல்லமையுள்ள இராஜ்யங்கள் இந்த உலகத்தை ஒன்றுக்குப் பின் ஒன்றாக ஆட்சி செய்யும் என்றும் கூறினார் (39-40). இஸ்ரயேலின் கடைசி இராஜா சிங்காசனத்தை விட்டு கவிழ்க்கப்பட்ட போது, நான்கு புறஜாதிகளுக்குள் பாபிலோன் இஸ்ரயேலை முதலில் ஆட்சி செய்தது (2 இரா. 25).

மோசேயின் மூலமாகக் கொடுக்கப்பட்ட நியாயப்பிரமாணங்கள் மீறப்படுவதற்கான பலன்களைப் படிப்படியாகக் கூறினது. "இவ்விதமாய், உங்கள் பாவங்களினிமித்தம் பின்னும் ஏழத்தனையாக உங்களைத் தண்டிப்பேன்" (லேவி. 26:18). இந்த ஒரு தண்டனை லேவியராகமத்தில் **நான்கு** முறைகள் கூறப்பட்டுள்ளது (வசனங்கள் 18, 21, 24, 28). நேபுகாத்நேச்சார் கண்ட சொப்பனத்தில், நான்கு இராஜ்யங்களுக்குப் பின், "ஒரு கல் அந்த சிலையை மோதி," இந்த "முழு உலகத்தையும்" நிரப்பக்கூடிய "ஒரு பெரிய இராஜ்யமானது" (தானி. 2:34-35). "என்றும் நிலைத்திருக்கும்" ஸ்திரமான தேவனுடைய இராஜ்யத்தை அடையாளப்படுத்தும் அந்த கல் ஒரு பர்வதமாக வளர்ந்தது, எவ்வளவு துல்லியமாக இருக்கிறது (தானி. 2:44).

அந்தச் சிலை அடிக்கப்பட்ட போது, தேவனுடைய திட்டத்தில் புறஜாதியாரின் வெளியேற்றம் துவங்கியது. அதன் தூள்களை காற்றுப்பறக்கடிக்கும் "பதரைப்" போல ஆனது.

"அவைகள் இருந்த இடம் காணாமற்போயிற்று" (தானி. 2:35).

இந்த ஒரு செயல்முறை தானியேல் கண்ட "நான்கு மிருகங்கள்" என்ற தரிசனத்திலும் காணலாம். "கெடியும் பயங்கரமான மிருகமே" நான்காம் மிருகமே முதலில் "வெட்டப்பட்டது" ஆனால், அதற்குப் பின், "எரிகிற அக்கினியில் போடப்பட்டது" (தானி. 7:11). அந்த சிலை, "நொறுக்கப்பட்டாலும்" மிருகம் "வெட்டப்பட்டாலும்" 1914-ம் வருடம் மீதியிருந்த புறஜாதியாரின் வல்லமைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்நாளில் காணப்படும் ஐரோப்பிய தேசங்களின் ரோம சாம்ராஜ்யத்தின் மீதியுள்ள "பத்துவிரல்களாம்" (தானி. 7:24-ல் காணப்படும் "பத்து கொம்புகள்"). "இந்த இராஜாக்களின் நாட்களில்" தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு இந்த இறுதியான அழிவுக்குரிய வேலைகள் நடைபெறும் என்று தானியேல் கூறுகிறார் (தானி. 2:44).

தேசங்கள், இனி ஒருகாலமும் இஸ்ரயேலின் மேல் அதிகாரம் செலுத்துவதற்கு அனுமதி கொடுக்கப்படுவதில்லை. "இதோ, தத்தளிப்பின் பாத்திரத்தை உன் கையிலிருந்து நீக்கிப்போடுகிறேன், இனி என் உக்கிரத்தினுடைய பாத்திரத்தின் வண்டல்களை நீ குடிப்பதில்லை. உன்னை நோக்கி: நாங்கள் கடந்து போகும்படிக்குக் குனியென்றுசொல்லி, கடந்துபோகிறவர்களுக்கு நீ உன் முதுகைத் தரையும் வீதியுமாக்கும்படி, உன்னைச் சஞ்சலப்படுத்தினவர்களின் கையில் அதைக் கொடுப்பேன்" (ஏசா. 51:22, 23).

மேசியாவின் இராஜ்யத்தில், "பத்து மனுஷர் ஒரு யூதனுடைய வஸ்திரத்தொங்கலைப் பிடித்துக்கொண்டு: தேவன் உங்களோடே இருக்கிறார் என்று கேள்விப்பட்டோம்; ஆகையால் உங்களோடேகூடப் போவோம் என்று சொல்லி, அவனைப் பற்றிக்கொள்வார்கள்" (சக. 8:23). நேபுகாத்நேச்சார் சொப்பனத்தில் கண்ட அந்தச் சிலையின் பத்து விரல்களும், புறஜாதியின் வல்லமைகளாம். அதே புறஜாதிகளின் வல்லமையைக் கொண்டு யூதர்கள் தேவனால் கற்பிக்கப்படுவார்கள். அதற்குப் பின் இஸ்ரயேல், "புறஜாதிகளுக்கு வெளிச்சமாக" செயல்படும் ஒரு கருவியாக பயன்படுவார்கள் (ஏசா. 42:6).

**"புறஜாதியாரின் காலங்களுக்குப் பின் "**

முதலாம் உலகப்போரின் போது, பால்பேர் பிரகடணத்தை அறிவித்ததின் மூலம், யூதர்களுக்கு ஒரு தனிநாடு கொடுக்க வேண்டும் என்ற பிரிட்டீஷ் அரசாங்கத்தின் நோக்கம் வெளிப்பட்டது. எவ்வளவு ஆச்சரியமூட்டும் காலம்! இஸ்ரயேலின் தேவன் தம்முடைய அனந்த ஞானத்திலும், வல்லமையிலும் எல்லையற்ற ஆலோசனைகளினாலும் காயீம்வைஸ் மான் என்ற யூத விஞ்ஞானிக்கு பிரிட்டீஷ் போரயுதங்களுக்கு தேவைப்படும் வெடிமருந்துகளை தயாரிப்பதற்கான அனுமதி கொடுத்தார். மிகுந்த நன்றியுணர்வுகளோடு பிரிட்டீஷ் அரசாங்கம் இந்த காரியத்தை மேற்கொண்டது. கிரேட் பிரிட்டன் அயல் தேசத்து காரியதரிசியாகிய லார்டு பால்பேர் இந்தப் புதிய திட்டத்தை லார்டு ரோத்ஸ்சயில்ட் இடம் நவம்பர் 1917-ம் வருடம் சீயோன் ஙபெடரேஷனுக்கு அறிவிக்கும்படி கூறினார்:

"மதிப்பிற்குரிய அரசாங்கத்தின் கண்ணோட்டத்தின்படி, பாலஸ்தீனாவில் யூத ஜனங்களுக்கு ஒரு தேசிய வீட்டை ஸ்தாபித்து, இதற்கேற்ற அவர்களின் சிறந்த முயற்சிகளை நாம் பயன்படுத்தி, இந்தக் காரியத்தின் மேலுள்ள வெற்றியைப் பெறுவோம்."

இரண்டாம் உலகப்போரில், அநேக அரபு தீவிர வாதிகளினாலும் அல்-ஹூசைனி தூண்டிவிடப்பட்டு நாசிஸ் மற்றும் ஙபாஸிஸ்ட்ஸ் போன்ற தீவிரவாதிகள் ஒன்று சேர்ந்தார்கள். 1948-ம் வருடம், மே மாதம் 15-ம் தேதி யூதர்களுக்கு தனிநாடு கிடைத்தவுடனே ஐந்து அரபு படைகள் இஸ்ரயேல் மேல் போர் தொடுத்தனர். 1956-ம் வருடம் எகிப்து சர்வதேச சட்டத்தைப் புறக்கணித்து, எருசலேமின் மேல் போர் தொடுத்தது. (சீனாய்/சுயஸ்) யாசர் அராஙபத் ஙபாட்டா என்ற குழுவை உருவாக்கி இஸ்ரயேலுக்கு எதிராக கொரில்லா போரை தொடர்ச்சியாக நடத்தினான்.

யோர்தானை, இஸ்ரயேல் எவ்வளவு தடுத்தப் போதிலும் 1967-ம் வருஷம் ஜூன் மாதம் யோர்தானின் படைகள் எருசலேமுக்கு எதிராக வந்தது. யோர்தான் ஐக்கிய நாடுகளின் தலைமையை எருசலேமில் வைத்திருந்தபோது, இரண்டு நாட்களுக்குள் கிழக்கு எருசலேமை இஸ்ரயேல் படைகள் ஆக்கிரமித்தது. ஜூன் மாதம் 7-ம் தேதி இஸ்ரயேலின் படை பாதுகாப்பு (IDF) பழைய பட்டணத்தின் வழியாகச் சென்று ஆலயத்தையும், மேற்கத்திய மதிற்சுவர்களையும் அதாவது, எருசலேமின் பரிசுத்தமுள்ள பகுதிகளை 1900 வருடங்களில் முதல் முறையாக யூதர்கள் தங்களுடைய கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தார்கள். இது சகரியாவின் தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றியது. "அந்நாளிலே நான் எருசலேமைச் சகல ஜனங்களுக்கும் பாரமான கல்லாக்குவேன்; அதைக் கிளப்புகிற யாவரும் சிதைக்கப்படுவார்கள்; பூமியிலுள்ள ஜாதிகளெல்லாம் அதற்கு விரோதமாய்க் கூடிக்கொள்வார்கள். அந்நாளிலே யூதாவின் தலைவரை

விறகுகளுக்குள்ளே எரிகிற அக்கினி அடுப்புக்கும், வைக்கோல் கட்டுகளுக்குள்ளே எரிகிற தீவட்டிக்கும் ஒப்பாக்குவேன்; அவர்கள் வலதுபுறமும் இடதுபுறமுமாகப் புறப்பட்டு, சுற்றிலும் இருக்கிற எல்லா ஜனங்களையும் பட்சிப்பார்கள்; எருசலேம் திரும்பவும் தன் ஸ்தானமாகிய எருசலேமிலே குடியேற்றப்பட்டிருக்கும்" (சக. 12:3, 6).

தொடர்ந்து வந்த யோம் கிப்பூர் யுத்தம் (1973) மற்றும் லீபனோனின் யுத்தத்திற்குப் பின் (1982-85) "முதல் இன்டிஙபாடா" 1987-ல் துவங்கியது. அதற்குப் பின் பெர்சியன் போர் (1991), ஓஸ்லோ சமாதானம் இருந்தபோதிலும், முதன்முறையாக 1994-ம் வருடம் தற்கொலைப் படை செயல்பட்டது. அதைத் தொடர்ந்து, அரபு படை சேனைகள் இந்த தற்கொலை முறையை சோர்வின்றி பயன்படுத்தியது.

**திரும்பக் கொடுத்தல் - வேதனையான ஒரு செயல்**

"இதோ, நாட்கள் வருமென்று கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் இஸ்ரவேலும் யூதாவுமாகிய என் ஜனத்தினுடைய சிறையிருப்பைத் திருப்பி, நான் அவர்கள் பிதாக்களுக்குக் கொடுத்த தேசத்துக்கு அவர்களைத் திரும்பிவரப்பண்ணுவேன்; அதை அவர்கள் சுதந்தரித்துக்கொள்ளுவார்கள்" (எரே. 30:3) என்று தேவனுடைய ஜனங்கள் இஸ்ரயேலுக்குத் திரும்பி வருவார்கள் என்று எரேமியா தீர்க்கதரிசனம் உரைத்தார். ஆயினும், இது ஒரு வேதனையான காரியமாக இருந்தது. " கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: தத்தளிப்பின் சத்தத்தைக் கேட்கிறோம்; திகிலுண்டு, சமாதானமில்லை" (எரே. 30:5) என்று எரேமியா முன்னறிவித்தார். ஆகவே, அந்த காலத்தை தீர்க்கதரிசயாகிய எரேமியா ஒரு மறுபிறப்புக்கு ஒப்பிட்டுப் பேசினார். " ஆணாய்ப் பிறந்தவன் பிரசவிக்கிறதுண்டோ என்று கேட்டுப்பாருங்கள்; பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் புருஷர்யாவரும் தங்கள் இடுப்புகளின்மேல் தங்கள் கைகளை வைத்திருக்கிறதையும், முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கிறதையும் நான் காண்கிறதென்ன? ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்" (எரே. 30:6-7) என்றும் கூறினார்.

1895-ம் வருடம் "நாம் யாக்கோபின் இக்கட்டுக்காலத்தில் இருக்கிறோம்" என்று பாஸ்டர் ரஸல் குறிப்பிட்டார். இதினிமித்தம் யூதர்கள் ஆஸ்திரியா, ஜெர்மனி மற்றும் பிரான்ஸிலிருந்தும் வெளியேற்றப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது. இவருடைய எதிர்பார்ப்பு 1930 மற்றும் 1940-களில் நடந்தது. 1910-ம் வருடம் கூட இஸ்ரயேலுக்காக அவருடைய ஆழ்ந்த அன்பை வெளிப்படுத்தினார். "நம்முடைய இருதயம் யூத ஜனங்களுக்காக வேதனைப்படுகிறது. அவர்களின் வீடு பாழாக்கப் பட்டதை எண்ணி வருத்தப்படுகிறோம்... சீக்கிரத்தில் யாக்கோபின் இக்கட்டுக்காலம் முடிவடையும் என்று மகிழ்ச்சியுடன் எதிர்பார்கிறோம்" (R4610). இஸ்ரயேல் மறுபடியும் பிறக்கும் காரியத்தில் கோகு மாகோகின் படையெடுப்பின் மூலம், மிகுந்த உபத்திரவத்தை அடைந்திருந்தாலும் (எசே. 38) யாக்கோபின் இக்கட்டுக்காலம் முடியும்போது மிகுதியான துன்பம் நேரிடும்.

அந்த யுகத்தின் முடிவில் தேவன், "பல மீன் பிடிப்பவர்களை" அனுப்பி யூதர்களை தங்களுடைய தேசத்திற்கு திரும்பிவரச் செய்தார். அதற்குப் பின், வேட்டைக்காரர்களை அனுப்பினார். ஆயினும், பாவத்தின் அதிகரிப்பினால் தங்களுடைய தேசத்திற்குத் திரும்பிப்போக மறுத்தார்கள். "கொடூரமானவர்கள்" புதிய உபத்திரவங்களை அவர்கள் மேல் கொண்டுவந்தார்கள் (எரே. 16:14-16; 30:14).

ஆயினும், "ஆணாய்ப் பிறந்தவன் பிரசவிக்கிறதுண்டோ என்று கேட்டுப்பாருங்கள்; பிரசவிக்கிற ஸ்திரீயைப்போல் புருஷர்யாவரும் தங்கள் இடுப்புகளின்மேல் தங்கள் கைகளை வைத்திருக்கிறதையும், முகங்களெல்லாம் மாறி வெளுத்திருக்கிறதையும் நான் காண்கிறதென்ன? ஐயோ! அந்த நாள் பெரியது; அதைப்போலொத்த நாளில்லை; அது யாக்கோபுக்கு இக்கட்டுக்காலம்; ஆனாலும் அவன் அதற்கு நீங்கலாகி இரட்சிக்கப்படுவான்" (எரே. 30:6-7) என்று தீர்க்கதரிசனம் கூறுகிறது. மீண்டும், தாய் தேசத்திற்குத் திரும்பினதினிமித்தம் சிறிதளவான சமாதானம் அவர்களைத் தொடர்ந்தது. இறுதியாக, வேதனைகளின் உச்சக்கட்டம் இஸ்ரயேலின் விடுதலையில் நடைபெறும்.

எசே. 37:1-14 வசனங்களில், முழு இஸ்ரயேல் மீண்டும் கூட்டிச் சேர்க்கப்பட்டு, அவர்கள் சீர்பொருந்தப்படும் காரியங்களில் நடைபெறும் செயல்களை அவர் முன்னறிவித்தார். "முழு இஸ்ரயேல் வீட்டாரும்," உலர்ந்த "எலும்புகளாக" பள்ளத்தாக்கிலிருந்து பெரும் இரைச்சலோடு ஒவ்வொரு "எலும்புகள்" தன்னுடைய எலும்புகளோடு இணைந்து, அதற்குமேல் "நரம்புகள்" வந்து, அதற்கு மேல் "சதை," "தோல்" வந்தது. 1948-ம் வருஷம் இஸ்ரயேல் ஒரு தேசமாக உருவானதை இது

அடையாளப்படுத்தக்கூடும். இன்றும் ஒரு படி மீதியுள்ளது. வருங்காலத்தில் அந்த சரீரத்திற்கு "ஜீவன்" வரவேண்டும். மாம்சமான யாவர் மேலும் என்னுடைய ஆவியை பொழிவேன் என்று யோயேலினால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனம் முதலாவது இஸ்ரயேலின் மேல் நிறைவேறும் (சக. 12:10; யோயே. 2:28; அப். 2:17).

இன்று, இயேசுவை அவர்கள் மேசியா என்று ஏற்றுக்கொள்ளாத போதிலும், இஸ்ரயேல், "என் ஜனம்" என்று அழைக்கப்படுகிறது (ஏசா. 58:1; எரே. 30:3; 50:6; சக. 8:7-8; ஆமோ. 9:14). "என்னுடைய தேசத்தில்" நாட்டப்படுகிறார்கள் என்று கூறப்படுகிறது (எசே. 38:16; யோயே. 1:6). இஸ்ரயேல், மேசியாவை அடையாளம் கண்டுக்கொண்ட பின், தந்தையாகிய ஆபிரகாமின் பூமிக்குரிய சந்ததியாக, கடற்கரை மணலைப் போல, "இந்த பூமியிலுள்ள முழு குடும்பங்களையும் ஆசீர்வதிப்பார்கள்" (ஆதி. 22:17).

**ஆசீர்வதிக்கும் நிலையில் இன்று இஸ்ரயேல்**

வகையறுக்கப்பட்ட நிலையில் இன்றிருக்கும் சிறிய தேசமாகிய இஸ்ரயேல், பூமியிலுள்ள ஜனங்களுக்கும் உதவி செய்து கொண்டிருக்கிறது. 2013 பிலிப்பைன்சில் ஏற்பட்ட புயலில் இஸ்ரயேல் வயல்களில் மருத்துவமனைகள் ஏற்படுத்தி பாதிக்கப்பட்ட 2600 பேர்களுக்கு வைத்தியம் செய்தார்கள். 12 குழந்தைகள் பிறந்தது அதில் மூன்று குழந்தைகள் வளர்ச்சிக் குன்றியிருந்தனர். அதிகமான பராமரிப்புத் தேவைப்பட்டது.

ஹெய்டியனில் ஒரு மிகப்பெரிய பூமியதிர்ச்சி சம்பவித்த 48 மணி நேரத்திற்குள் 230 வேலையாட்களை ஏற்பாடுபண்ணி, அவர்களோடு மருத்துவ உதவியாளர்களையும் அனுப்பினார்கள். அவர்கள் கிட்டத்தட்ட 1100 நோயாளிகளை அங்கிருந்த குவியலிலிருந்து 20 நாட்களுக்குள் வெளியே இழுத்தார்கள். அதுபோல, துருக்கியில், 2011-ம் வருஷம் ஏற்பட்ட பூமியதிர்ச்சியின் போதும், இஸ்ரயேல் தங்களுடைய உதவிக்கரங்களை நீட்டியது.

டெல் அவிவ் (Tel Aviv) அருகில், இஸ்ரயேலில், "Save a Child's Heart" (SACH) என்ற மருத்துவ மையம் மற்ற தேசங்களிலிருக்கும் குழந்தைகளுக்கு இருதய அறுவை சிகிச்சை செய்து, ஜீவனைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. 1996-ம் வருஷம், ஸ்தாபிக்கப்பட்ட இந்த நிறுவனம் வளர்ச்சியடையக்கூடிய நாடுகளில் குழந்தைகளின் ஆரோக்கியத்தின் தரம் வளர வேண்டுமென்ற நோக்கத்துடன் செயல்பட்டுக் கொண்டுவருகிறது. பாதிக்கு மேல் அதிகமாக பயன்பட்ட குழந்தைகள் அரபு, பாலஸ்தீனா குழந்தைகள்.

**இஸ்ரயேலர்களுடைய இருதயத்தில் எழுதப்படும் புதிய உடன்படிக்கை**

சுவிசேஷ யுக வேலைகளில், ஆவிக்குரிய இஸ்ரயேலர்களின் கூட்டிச்சேர்த்தல் நிறைவுபெறும் போது, "இஸ்ரயேல் வீட்டாரோடு ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்துவேன்..." அவர்களுடைய இருதயங்களில், "என்னுடைய பிரமாணங்களை எழுதுவேன் என்று தேவன் உரைக்கிறார்" (எரே. 31:31-33; எபி. 10:16). அதற்குப் பின், "யாக்கோபு வேர்பற்றி, இஸ்ரவேல் பூத்துக்காய்த்து உலகத்தைப் பலனால் நிரப்பும் நாட்கள் வரும்" (ஏசா. 27:6).

"இனிக் கொடுமை உன் தேசத்திலும், அழிவும் நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது; உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்" (ஏசா. 60:18).

"கர்த்தர் சீயோனுக்கு ஆறுதல் செய்வார்; அவர் அதின் பாழான ஸ்தலங்களையெல்லாம் தேறுதலடையச்செய்து, அதின் வனாந்தரத்தை ஏதேனைப்போலவும், அதின் அவாந்தரவெளியைக் கர்த்தரின் தோட்டத்தைப்போலவும் ஆக்குவார்; சந்தோஷமும் மகிழ்ச்சியும் துதியும் கீதசத்தமும் அதில் உண்டாயிருக்கும்" (ஏசா. 51:3).

எருசலேம், "தேவனுடைய சிங்காசனமாக" பூமிக்குரிய கிறிஸ்துவின் இராஜ்யத்திற்கு தலைநகரமாக இருக்கும் (எரே. 3:17). பூமியிலுள்ள ஜனங்கள், "யாக்கோபின் தேவனைக்" குறித்து கற்றுக்கொண்டு, "அவருடைய பாதையில் நடப்பார்கள்" (ஏசா. 2:3).

நியூயார்க்கில் தெருக்களின் குறுக்காக மிகப்பெரிய அளவில் "Isaiah Wall"-ல் ஏசா.2:4-ம் வசனம் எழுதப்பட்டுள்ளது. "அவர் ஜாதிகளுக்குள் நியாயந்தீர்த்து, திரளான ஜனங்களைக் கடிந்துகொள்வார்; அப்பொழுது அவர்கள் தங்கள் பட்டயங்களை மண்வெட்டிகளாகவும், தங்கள் ஈட்டிகளை அரிவாள்களாகவும் அடிப்பார்கள்; ஜாதிக்கு விரோதமாய் ஜாதி பட்டயம் எடுப்பதில்லை, இனி அவர்கள் யுத்தத்தைக் கற்பதுமில்லை."

இது ஏசாயாவின் வசனங்களில் ஒரு பகுதியாகும். அதற்கு முன் சொல்லப்பட்ட அற்புதமான வார்த்தைகள் விடப்பட்டது. "கடைசிநாட்களில் கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின் கொடுமுடியில் ஸ்தாபிக்கப்பட்டு, மலைகளுக்கு

மேலாய் உயர்த்தப்படும்; எல்லா ஜாதிகளும் அதற்கு ஓடிவருவார்கள். திரளான ஜனங்கள் புறப்பட்டு வந்து: நாம் கர்த்தரின் பர்வதத்துக்கும், யாக்கோபின் தேவனுடைய ஆலயத்துக்கும் போவோம் வாருங்கள்; அவர் தமது வழிகளை நமக்குப் போதிப்பார், நாம் அவர் பாதைகளில் நடப்போம் என்பார்கள்; ஏனெனில் சீயோனிலிருந்து வேதமும், எருசலேமிலிருந்து கர்த்தரின் வசனமும் வெளிப்படும்" (ஏசா. 2:2-3).

சகல ஜாதிகளும் கற்றுக்கொள்வதற்கு இஸ்ரயேலுக்கு வருவார்கள். ஆவிக்குரிய இஸ்ரயேல், முற்பிதாக்களால் வழிநடத்தப்படும் மாம்ச இஸ்ரயேலைப் பயன்படுத்தி சமாதானமாக வாழ்வதற்கு மனுக்குலத்திற்குக் கற்றுக்கொடுப்பார்கள். இவர்கள், ஆவிக்குரிய சீயோனோடு இணைந்து செயல்படுவார்கள். அப்போது, போர்களுக்குப் பயன்படுத்தின ஆயுதங்கள் உலக சமாதானத்திற்கும், போஷிப்பதற்கும் பயன்படுத்தப்படும்.

## "இஸ்ரயேலின் இரதமும், குதிரை வீரர்களும்"

எவ்வளவு எதிரிடையான காலம், இந்த பழமையான ஒழுங்கின் உச்சக்கட்டத்தில், யூத இனத்தின் மீதான வெறுப்பு எவ்வளவாய் வளர்ச்சியடைகிறது! இந்த உலகத்தில் ஏற்படும் அனைத்து பிரச்சனைகளுக்கும் யூதர்களே காரணமென்று பழி சுமத்தப்படுகிறது. இஸ்ரயேலுக்கு எதிராக யுத்தங்கள் தொடர்ந்து நடைபெறுகிறது. இந்த உலகத்திற்கு அதிபதி சாத்தான் (2 கொரி. 4:4). ஆவிக்குரிய இஸ்ரயேலருக்கு இயற்கையாகவே மாம்ச இஸ்ரயேலர்கள் மேல் மன இரக்கம் இருக்க வேண்டும். ஏனெனில், அவர்கள் தேவன் வழியாக இரட்சகரின் வேலைகளைக் கொண்டு இராஜ்யம் பெறுவார்கள் (ரோ. 11:26, 31).

யுகத்தின் முடிவில், எலியா சபையின் முடிவை சித்தரிக்கையில், சுழற்காற்று அவரை பரலோகத்திற்கு எடுத்துச் செல்லும்போது, அவரோடிருந்த எலிசா, "என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாய் இருந்தவரே" (2 இரா. 2:12) என்று கூறினார். இரதங்களும், குதிரை வீரர்களும், இராணுவ வல்லமையோடும் பலத்திற்கும் ஒப்பிட்டுப் பேசப்படுகிறது (1 இரா. 10:26; 1 நாளா. 18:4; தானி. 11:40). இப்படியிருக்க, யுகத்தின் முடிவிலுள்ள சபை, "ஏன் ஒப்பிடப்படுகிறது?" எலியா எடுத்துக் கொள்ளப்படும் போது, அவருடைய சால்வை எலிசாவின் மேல் விழுந்தது. பல வருடங்களுக்குப் பின் எலிசாவும் மரிக்கும்போது, இராஜாவாகிய யோவாஸ், "அவன் நாட்களில் எலிசா மரணத்துக்கு ஏதுவான வியாதியாய்க் கிடந்தான்; அப்பொழுது இஸ்ரவேலின் ராஜாவாகிய யோவாஸ் அவனிடத்துக்குப்போய், அவன்மேல் விழுந்து, அழுது: என் தகப்பனே, என் தகப்பனே, இஸ்ரவேலுக்கு இரதமும் குதிரைவீரருமாயிருந்தவரே என்றான்" (2 இரா. 13:14). இஸ்ரயேலின் இராஜாக்கள் மற்றும் இராணுவங்களைக் காட்டிலும், எலியா மற்றும் எலிசா இஸ்ரயேலுக்கு பலத்த ஆதரவாக இருந்தார்கள். உலகத்தில் பிரச்சனைகள் அதிகரிக்கக்கூடிய இந்த நாட்களில், சபையாகிய நாம் தேவன் தந்த தீர்க்கதரிசனங்களையும், வாக்குத்தத்தங்களையும் இஸ்ரயேலுக்குக் கூறி, தேவன் மேலுள்ள விசுவாசத்தை அவர்கள் அதிகரிக்கும்படி அவர்களிடத்தில் இரக்கத்தை வெளிப்படுத்த வேண்டும்.

## இஸ்ரயேலின் சீர்பொருந்துதல் மற்றும் திரும்பக்கொடுத்தலின் காலம்

இயேசு, பரலோகத்திற்கு ஏறும்போது, "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" (அப்.1:6)? என்ற கேள்வியை இவர்கள் இயேசுவிடம் கேட்டார்கள். "அதற்கு அவர்: பிதாவானவர் தம்முடைய ஆதீனத்திலே வைத்திருக்கிற காலங்களையும் வேளைகளையும் அறிகிறது உங்களுக்கு அடுத்ததல்ல" (அப். 1:7) என்று இயேசு எளிமையாகப் பதிலளித்தார்.

இயேசு, சட்ட பூர்வமான அதிகாரத்தோடு வந்திருக்கிறார். "பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரை" (ஏசா. 62:6-7). தேவனுடைய இராஜ்யத்தில் ஆட்சி செய்யக்கூடிய தங்களுடைய சகல சிறப்புரிமைகளையும் திரும்பக் கொடுப்பதைக் குறித்து இயேசு பேசுகிறார் (தானி. 12:1). தேவனுடைய நோக்கத்தை அறிந்த நாம், தேவன் தம்முடைய வேலைகளை ஏற்ற நேரத்தில் செய்வார் என்று அவருடைய வல்லமையின் மேல் நம்பிக்கை உள்ளவர்களாக, "அவருடைய ஜனங்களுக்கு" (ஏசா. 40:1-2) ஆறுதல் அளிக்க வேண்டும். "இதோ, இஸ்ரவேலைக் காக்கிறவர் உறங்குவதுமில்லை தூங்குகிறதுமில்லை" (சங். 121:4).

விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

# தரிசனம் தாமதித்தல்



"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூ. 2:3).

Raymond Charlton

**முதலாம் வருகை**

இஸ்ரயேலில் தேவனுடைய இராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதற்கு அப்போஸ்தலர்கள் எவ்வாறு ஏங்கினார்கள் என்று இயேசு தேசத்தை சுற்றிவரும்போது, "காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற். 1:15) என்று போதித்துக் கொண்டுவந்தபோது, அவர்கள் இயேசுவோடுகூட இருந்தார்கள். இராஜ்யத்தில் சில முக்கிய இடங்களையும்கூட சீஷர்கள் தங்களுக்கென்று கேட்டுக்கொண்டனர் (மத். 20). "அவர் அவளை நோக்கி: உனக்கு என்ன வேண்டும் என்று கேட்டார். அதற்கு அவள்: உம்முடைய ராஜ்யத்திலே என் குமாரராகிய இவ்விரண்டுபேரில் ஒருவன் உமது வலது பாரிசத்திலும், ஒருவன் உமது இடது பாரிசத்திலும் உட்கார்ந்திருக்கும்படி அருள்செய்யவேண்டும்" (மத். 20:21) என்று யாக்கோபு யோவானின் தாய் இயேசுவிடம் கேட்டுக்கொண்டாள்.

தானியேல் தீர்க்கதரிசனத்தின் 9-ம் அதிகாரத்தைக் குறித்து அறிந்தவர்கள் எதிர்பார்த்த மேசியாவின் வருகையின் காலத்தைக் கணக்கிட முடிந்தது. ஏசாயாவின் வார்த்தைகள் பிரபலமாக இருந்தது. "நமக்கு ஒரு பாலகன் பிறந்தார்; நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார்; கர்த்தத்துவம் அவர் தோளின்மேலிருக்கும்; அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனைக்கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப்பிரபு என்னப்படும். தாவீதின் சிங்காசனத்தையும் அவனுடைய ராஜ்யத்தையும் அவர் திடப்படுத்தி, அதை இதுமுதற்கொண்டு என்றென்றைக்கும் நியாயத்தினாலும் நீதியினாலும் நிலைப்படுத்தும்படிக்கு, அவருடைய கர்த்தத்துவத்தின் பெருக்கத்துக்கும், அதின் சமாதானத்துக்கும் முடிவில்லை; சேனைகளின் கர்த்தருடைய வைராக்கியம் இதைச் செய்யும்" (ஏசா. 9:6-7). அவர் எந்த பட்டணத்தில் பிறப்பார் என்பதையும் அறிந்திருந்தார்.

"ஏரோதுராஜா அதைக் கேட்டபொழுது, அவனும் அவனோடேகூட எருசலேம் நகரத்தார் அனைவரும் கலங்கினார்கள். அவன் பிரதான ஆசாரியர் ஜனத்தின் வேதபாரகர் எல்லாரையும் கூடிவரச் செய்து: கிறிஸ்துவானவர் எங்கே பிறப்பாரென்று அவர்களிடத்தில் விசாரித்தான். அதற்கு அவர்கள்: யூதேயாவிலுள்ள பெத்லகேமிலே பிறப்பார்" (மத். 2:3-5) என்று ஆசாரியர்கள் ஏரோது இராஜாவுக்கு அறிவித்தார்கள்.

கிறிஸ்து, தம்முடைய முதலாம் வருகையில், யூதர்களை ரோம ஆதிக்கத்திலிருந்து இரட்சிப்பார் என்று அனைவரும் எதிர்பார்த்தார்கள். அப்போது, அவர் இராஜ்யத்தை இஸ்ரயேலுக்குத் திரும்பக் கொடுத்து, தற்காலிகமான வல்லமையையும், ஆஸ்தியும் கொடுப்பார் என்று எண்ணினார்கள். ஆகவே, பொது ஜனங்கள் அவரை வரவேற்றார்கள். "மறுநாளிலே இயேசு எருசலேமுக்கு வருகிறாரென்று பண்டிகைக்கு வந்த திரளான ஜனங்கள் கேள்விப்பட்டு, குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டுபோகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்" (யோவா. 12:12-13).

அவர்கள், வசனங்களைப் படித்தாலும், மனுக்குலத்திற்காக தேவனுடைய திட்டத்தை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லை. இயேசு, இராஜ்யத்தை ஜெயித்த இராஜாவாக எருசலேமில் வலம் வராமல், இந்த உலகம் அஸ்திபாரம் போடப்படுவதற்கு முன் குறிக்கப்பட்ட பலியாட்டைப் போல வந்தார். பஸ்காவுக்கு ஜனங்கள் ஆட்டுக்குட்டிகளைத் தேர்ந்தெடுக்கும்போது, இயேசு தாமே தம்மை முன் நிறுத்தினார். "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே" (1பேது. 1:19). ஏசாயா 53-ம் அதிகாரத்தில் மேசியா தம்முடைய முதல் வருகையில் அனுபவிக்க வேண்டிய பாடுகளையும், பலிகளையும் குறித்து எதிர்பார்த்த காரியங்களை அவர்கள் மேலோட்டமாக வாசித்தார்கள்.

இயேசு, காட்டிக்கொடுக்கப்பட்ட போது, அப்போஸ்தலர்கள் அவரோடு இருந்தார்கள். ஆலோசனை சங்கத்தாருக்கு முன் அவருக்கு நடந்த அநியாயமான விசாரணைகளும், பொய் சாட்சிகளையும், நியாயமில்லாத அடிகளையும் இறுதியாக, சிலுவை மரணத்தைக்குறித்தும் அவர்கள் கண்களில் கண்டார்கள். அதே அப்போஸ்தலர்கள் அவருடைய உயிர்த்தெழுதலுக்கும் சாட்சியாக இருந்தார்கள்.

வசனங்களில் முன் குறிப்பிட்டபடி எம்மாவூருக்குப் போகும் வழியில் சென்ற இரண்டு சீஷர்களையும் உயிர்த்தெழுந்த இயேசுவே ஆவியினால் ஊக்கப்படுத்தினார். "அப்பொழுது கூடிவந்திருந் தவர்கள் அவரை நோக்கி: ஆண்டவரே, இக்காலத் திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர்" (அப். 1:6) என்று இயேசு பரலோகம் செல்லும்போது சீஷர்கள் அவரிடம் கேள்வி எழுப்பினார்கள்.

சீஷர்கள், எவ்வளவு மாம்சமாக இருந்தார்கள். இராஜ்யம் உடனடியாக வரவேண்டும் என்று அவர்களுடைய இயல்பான விருப்பமாக இருந்தது. அவர்களைச் சுற்றி மனிதருடைய ஆழந்த துன்பங்களையும் ரோம ஆதிக்கத்தின் கீழ் யூதர்களின் அடிமைத்தனத்தையும் கண்டார்கள். அவர்களை விடுதலையாக்கக்கூடிய வாக்குத்தத்தம் செய்யப்பட்ட இராஜாவை எதிர்பார்த்தார்கள். அவர்கள் தரிசனத்தை அறிந்திருந்தார்கள். அது தாமதிப்பதை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் 2000 வருடம் காத்திருக்க வேண்டும் என்பதை அறிந்திருந்தால், அவர்கள் நெருக்கமானப் பாதையில் தங்களுடைய ஓட்டத்தை வெற்றிகரமாக ஓடியிருக்க முடியுமா? தேவனுடைய பிள்ளைகள் இனிவரக்கூடிய காரியங்கள் எதுவாக இருந்தாலும் சரி, அதைக்குறித்து கவலைப்பட மாட்டார்கள் என்று பரலோக பிதாவுக்கு தம்முடைய பிள்ளையைக் குறித்த விருப்பம் என்று ஒரு பிரபலமான கவிதை கூறுகிறது.

**நம்முடைய ஆண்டவரின் திருப்புதல்**

18 நூற்றாண்டுகளுக்குப் பின் இதுபோல, ஒரு சூழ்நிலை நிலவியது. வேத மாணவர்கள் தீர்க்கதரிசனங்களைப் புரிந்துகொள்ள துவங்கினார்கள். "தானியேலே, போகலாம்; இந்த வார்த்தைகள் முடிவுகாலமட்டும் புதைபொருளாக வைக்கப்பட்டும் முத்திரிக்கப்பட்டும் இருக்கும்" (தானி. 12:9). 19-ம் நூற்றாண்டில் வெளிச்சம் வீசும் விடியல் துவங்கியது. 1260, 1290 மற்றும் 1335 நாட்களின் விளக்கம் மிகத் தெளிவாகப் புரிந்தது.

சகோ. வில்லியம் மில்லர் மற்றும் சகோ. நெல்சன் பார்பர் காணக்கூடிய கிறிஸ்துவின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். 1843-ம் வருடம் மில்லர் இயேசுவை எதிர்பார்த்தார். பார்பர் 1873-ம் வருடம் எதிர்பார்த்தார். அதற்குப் பின் 1874-ம் வருடமும் எதிர்பார்த்தார். கிறிஸ்துவின் வருகையில் ஏமாற்றமடைந்த பார்பர், தன்னுடைய பத்திரிக்கையில், "The Herald of the Morning" (1875) வருஷம் இயேசு காணக்கூடாத நிலையில் வந்துவிட்டார் என்றும், அறுவடைக்காலம் 1878 வரையில் நடைபெறும் என்றும், 1881 வருஷம் பாலஸ்தீனாவுக்கு யூதர்கள் திரும்பிவிடுவார்கள் என்றும் 1914-ல், இந்த பூமியின் மேல் தேவனுடைய இராஜ்யம் ஸதாபிக்கப்படும் என்றும் எழுதினார்.

"எனக்கு ஆச்சரியமூட்டும் வகையில், கிறிஸ்துவின் வருகையைக்குறித்து வெகுசிலரே ஆர்வத்தோடு செவிசாய்த்தனர். ஏதோ ஒருவர் தீவிரமாக இருந்தாலும், பெரும்பாலானவர்கள் ஒரு கட்டுக்கதையைப் போல் விட்டுச் சென்றார்கள்" என்று சகோதரர் வில்லியம் மில்லர் எழுதினார்.

இந்தக் காலத்தைக்குறித்த எச்சரிப்பை தீர்க்கதரிசனமாக பேதுரு நமக்கு எழுதியிருக்கிறார். "கடைசிநாட்களில் பரியாசக்காரர் வந்து, தங்கள் சுய இச்சைகளின்படியே நடந்து, அவர் வருவார் என்று சொல்லுகிற வாக்குத்தத்தம் எங்கே? பிதாக்கள் நித்திரையடைந்தபின்பு சகலமும் சிருஷ்டிப்பின்தோற்றமுதல் இருந்தவிதமாயிருக்கிறதே என்று சொல்லுவார்கள்" (2 பேது. 3:3-4).

பாஸ்டர் ரஸல், 1876-ம் வருஷம் சகோதரர் பார்பரோடு இணைந்து, 1877-ம் ஆண்டு, "Three Worlds and the Harvest of this World" என்ற புத்தகத்தை வெளியிட்டார்கள். அதற்குப் பின், கிறிஸ்துவின் ஈடுபலியில் சில வித்தியாசமான கருத்துக்கள் ஏற்பட்டு, சகோ. ரஸல் பிரிந்து, "Zion's Watch Tower" என்ற புத்தகத்தை 1879-ம் வருஷம் ஜூலை மாதம் தனியாக வெளியிட துவங்கினார்.

1902 வருஷம், "The Time is at Hand" என்ற தொகுப்பில் 1914-ம் வருஷம் அவர் எதிர்பார்த்திட்ட ஏழு காரியங்களை வரிசைப்படுத்தினார்.

(1) தேவனுடைய இராஜ்யம் பாழாக்கப்பட்ட இந்த பூமியின் மேல் முழுமையாக ஸ்தாபிக்கப்படும்.

(2) கிறிஸ்துவே புதிய இராஜாவாக ஆட்சி செய்வார்.

(3) "இராஜரீகமான ஆசாரியர்களாகிய கிறிஸ்துவின் சரீரம் கிறிஸ்துவோடு கூட மகிமைப்படுத்தப்படும்."

(4) இனி ஒரு காலமும் எருசலேம் புறஜாதிகளால் மிதிக்கப்படாது.

(5) "இஸ்ரயேலின் குருட்டாட்டம் மெதுவாக நீக்கப்படும்."

(6) "மகா உபத்திரவத்தின் காலம் உலகமெங்கும் பரம்பும்."

(7) தேவனுடைய இராஜ்யம் புறஜாதிகளின் சிலையை நொறுக்கி, அந்த இராஜாக்களின் வல்லமையை முழுமையாக தகர்த்துவிடும்.

இக்காரியங்கள் நடக்கும்படியான பல காரியங்கள் அந்நேரத்தில் நடந்து கொண்டிருந்தது. பல விஞ்ஞான கண்டுபிடிப்புகள், தொழிலாளிகளின் பாரத்தைக் குறைத்தது. கண்டங்களுக்குத் தொடர்பு கொள்ளும் வகையில் பிரயாணங்கள் எளிதானது. இரயில்கள், கப்பல்கள், விமானங்கள் போன்ற சாதனங்கள் உபயோகத்தில் வந்தது. சாம்ராஜ்யங்கள் உருவானது. அவைகளுக்கு இடையில் யுத்தங்கள் ஏற்பட்டு, தொடர்ந்து வந்த 40 வருஷங்களில் முதலாம் உலகப்போருக்கு வழி வகுத்தது . அந்நேரம் மீண்டும் யூதர்கள் தங்களுடைய தாய் தேசம் திரும்புவதற்கு வாய்ப்புகள் துவங்கியது.

**தாமதித்தாலும்**

"குறித்தகாலத்துக்குத் தரிசனம் இன்னும் வைக்கப்பட்டிருக்கிறது; முடிவிலே அது விளங்கும், அது பொய் சொல்லாது; அது தாமதித்தாலும் அதற்குக் காத்திரு; அது நிச்சயமாய் வரும், அது தாமதிப்பதில்லை" (ஆபகூ. 2:3).

தேவன், ஆபகூக்கிடம் காட்டின தரிசனம், எதிர்பார்த்த காலத்தைவிட தாமதிப்பதைப் போல தோன்றுகிறது. ஆபகூக் எழுதும்படி கட்டளைப் பெற்றார். இது, ஒவ்வொருவரிடமும் அடுத்தடுத்து சொல்லப்பட்ட காரியமில்லை. தாமதிப்பதைப் போல தோன்றினாலும், தேவன் குறித்த காலத்தில் அது சரியாக நிறைவேறும். அது என்றுமே தாமதிப்பதிலை. துல்லியமான நேரத்தில் நிறைவேறும்.

மனுஷன் நினைத்த காலத்திற்கும், தேவன் குறித்த காலத்திற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை அறிந்த பேதுரு, "கர்த்தருக்கு ஒரு நாள் ஆயிரம்வருஷம்போலவும், ஆயிரம் வருஷம் ஒருநாள்போலவும் இருக்கிறதென்கிற இந்த ஒரு காரியத்தை நீங்கள் அறியாதிருக்கவேண்டாம்" (2 பேது. 3:8) என்று எழுதினார். கிறிஸ்துவின் சீஷர்கள் பரலோக பிதாவின் வாக்குத்தத்தங்கள் நிறைவேறுவதற்கு ஆவரோடு காத்திருப்பார்கள். பேதுரு, ஏற்றக்காலத்தில் அவைகள் நிறைவேறுவதற்குக் காத்திருக்கும்படி அவர்களை ஊக்குவிக்கிறார் "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல்; ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (2 பேது. 3:9).

தேவனுடைய திட்டத்தை நம்புவதற்கு, தேவையான விசுவாசத்தை பயிற்சிவிக்காத ஒரு வகுப்பாரைக்குறித்து ஆபகூக் விவரிக்கிறார். "இதோ, அகங்காரியாயிருக்கிறானே, அவனுடைய ஆத்துமா அவனுக்குள் செம்மையானதல்ல; தன் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான்" (ஆபகூ. 2:4). பெருமை கொண்டு தங்களுடைய பலத்தை சார்ந்திருப்போருக்கு இது ஒரு சரியான எச்சரிப்பாகும். எப்படிப்பட்டவர்களுக்கு தரிசனம் தாமதித்துக் கொண்டிருக்கிறது? இவர்கள் தேவனுடைய அதிகாரத்தையும், காலத்தையும் குறித்து சந்தேகப்படக்கூடியவர்களாக இருப்பார்கள். அப்போஸ்தலனாகிய பவுல், ஆபகூக் வார்த்தைகளில் உள்ள ஆழ்ந்த அர்த்தத்தைக் கூறுகிறார். "நீங்கள் தேவனுடைய சித்தத்தின்படி செய்து, வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதைப் பெறும்படிக்குப் பொறுமை உங்களுக்கு வேண்டியதாயிருக்கிறது. வருகிறவர் இன்னுங் கொஞ்சக்காலத்தில் வருவார், தாமதம்பண்ணார். விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான், பின்வாங்கிப்போவானானால் அவன்மேல் என் ஆத்துமா பிரியமாயிராது என்கிறார்" (எபி. 10:36-38).

தேவனுடைய வார்த்தைகளைப் படித்து, தேவனுடைய திட்டங்களில் விசுவாசமுள்ளதா என்று கிறிஸ்தவர்கள் தங்களுடைய இருதயங்களை ஆராய்ந்துப் பார்க்க வேண்டும். தேவனுடைய சித்தத்தை செய்வதற்கு இது நம்மை சரியாக வழிநடத்தும். எதிர்பார்த்தக் காரியங்கள் நடைபெறாமல் 1914 மற்றும் 1915-ம் வருஷங்கள் கடந்துசென்ற போது, அனைவருடைய விசுவாசம் ஆழமாக சோதிக்கப்பட்டது. தரிசனம் தாமதித்தாகக் காணப்பட்டாலும் பாஸ்டர் ரஸலின் பல எதிர்பார்ப்புகள் நிறைவேறினதாக அவர் கண்டார். ஏனெனில், 1916 வருஷம் காலம் சமீபமாய் இருக்கிறது" என்று எழுதப்பட்ட தொகுப்பில் இவைகளைக் குறித்து சகோ. ரஸல் எழுதினார்:-

"1914" வருஷத்தைப் பொறுத்தவரையில் வேத மாணவர்களின் எதிர்பார்புகளைக் குறித்து எங்குமுள்ள உலக ஜனங்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே, அந்நேரத்தில், ஒரு யுத்தம் துவங்கினப்போதும், நெருப்புப்பொறி பறக்கும் அம்புகள் பறந்து பல நஷ்டங்கள் ஏற்படும்போது, ஆயிரக்கணக்கானோர் புறஜாதிகளின் காலத்தின் முடிவைக் குறித்து கேள்விப்பட்டதை நினைவுகூர்ந்தார்கள்.

"புறஜாதியாரின் முடிவு காலத்தில், தேவனுடைய பரிசுத்தவான்கள் அவரோடுகூட மகிமையில் இருப்பார்கள் என்று எதிர்பார்க்கப்பட்ட காரியம் இந்த புத்தகத்தின் ஆசிரியர் முன்னுரையில் கொடுக்கப்பட்டுள்ளது. இது இயல்பான ஒரு தவறாக இருப்பினும், ஜனங்களின் ஆசீர்வாதத்திற்காக, தேவன் அதை மேற்கொண்டார். சபை 1914-ம் வருஷம் அக்டோபர் மாதம் கூட்டிச்சேர்க்கப்பட்டு மகிமையடைந்துவிடும் என்ற கருத்து ஆயிரக்கணக்கானவரின் மேல் சுத்திகரிப்பையும்

ஏற்படுத்தியது. உண்மையில், பலர் இந்த தவறுக்காகவும் தேவனிடத்தில் நன்றிகளை ஏறெடுத்தார்கள். உண்மையில் பலர் எதிர்பார்த்த நேரத்தில் சபை நிறைவு பெறாததைக் குறித்து நன்றிகளை ஏறெடுத்தார்கள். ஆகவே, தேவனுடைய ஜனங்கள், பரிசுத்தத்தில் பூரணப்படுவதற்கு மேலும் வாய்ப்புகள் கிடைத்தது என்று எண்ணி, ஆண்டவரோடு இணைந்து செய்திகளை அவருடைய ஜனங்களுக்குப் பகிர்ந்து கொடுத்து வருகிறார்கள்."

ஒரு நூற்றாண்டுகள் கடந்து சென்றாலும், சகோதரர்கள் இன்னும் திரைக்கு இந்தப் பக்கம் இருக்கிறார்கள். நம்முடைய நோக்கங்கள் எவ்வாறு இருக்க வேண்டும்? வசனங்கள் நமக்கு பதிலளிக்கிறது.

### ஒருவரையொருவர் நற்கிரியைகளை செய்யும்படி ஏவ வேண்டும்

"அல்லாமலும், நம்முடைய நம்பிக்கையை அறிக்கையிடுகிறதில் அசைவில்லாமல் உறுதியாயிருக்கக்கடவோம்; வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ள வராயிருக்கிறாரே. மேலும், அன்புக்கும் நற்கிரியைகளுக்கும் நாம் ஏவப்படும்படி ஒருவரையொருவர் கவனித்து; சபை கூடிவருதலைச் சிலர் விட்டுவிடுகிறதுபோல நாமும் விட்டுவிடாமல், ஒருவருக்கொருவர் புத்திசொல்லக் கடவோம்; நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும்" (எபி. 10:23-25). விசேஷமாக, இந்த யுகத்தின் முடிவில், கூடிவரக்கூடிய ஒவ்வொரு வாய்ப்பையும் நாம் பயன்படுத்தி, ஒருவரையொருவர் ஊக்குவித்து, உற்சாகப்படுத்த வேண்டும்.

### இன்றும் கிறிஸ்துவின் பள்ளியிலே

நம்முடைய கவனம், திசை திருப்பப்படாதபடிக்கு எச்சரிப்பாக இருக்க வேண்டுமென்று அப்போஸ்தலனாகிய பேதுரு நினைப்பூட்டுகிறார். "ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருக்காலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்" (2 பேது. 1:10-11). அதே காரியத்தை பவுலும் வலியுறுத்துகிறார். "நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோ. 2:15). நாம் ஒவ்வொருவரும் நிறவேற்ற வேண்டிய வேலைகள் இன்னும் இருக்கிறது. நாம் கிறிஸ்துவின் பள்ளியில் தொடர்ந்து வளர்ச்சியடைவதற்கும், பெரிதான அழைப்புக்குரிய வாசல் இன்னும் திறந்திருப்பதற்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

### விழித்திருந்து ஜெபம் பண்ணுங்கள்

லூக்கா 21-ம் அதிகாரம், மத்தேயு 24-ம் அதிகாரத்தில், நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகள் பதிவு செய்யப்பட்ட பல்வேறு அடையாளங்களைக் குறித்து நாம் தொடர்ந்து நாம் விழிப்புள்ளவர்களாக இருக்க வேண்டும். இந்த யுகத்தின் முடிவில் என்ன நடக்கும் என்பதை வசனங்கள் கூறுகிறது. ஆனால், நம்முடைய பரமபிதா அந்த சம்பவங்களின் ஆசிரியர் எவ்வாறு, எப்போது அவைகள் செயலாற்றப் பட வேண்டும் என்பதைத் தெளிவாக அறிந்திருக்கிறார். மொத்தத்தில் இப்போது நாம் காணக்கூடிய தீமையான உலகத்தை முற்றிலுமாக அதம் செய்து, கிறிஸ்துவின் இராஜ்யம் ஸ்தாபிக்கப்படும் என்று நமக்கு உறுதியளிக்கப் பட்டிருக்கிறது. 1914-ம் வருஷம் பலர் ஏமாற்றப் பட்டாலும், இப்போது வாய்ப்புகள் என்ற கண்களின் வழியாக அனைத்தையும் காணலாம். இறுதியான பாத அங்கத்தினர், தன்னுடைய விசுவாசத்தை நிரூபிக்கும் வரையில், இந்த கதவு அடைப்படாது. ஒவ்வொரு நபரும் திரைக்கு அப்பால் செல்கையில், ஒவ்வொரு மகிமையான வேலைகளும் துவங்கும். மரித்துக் கொண்டிருக்கும் இந்த உலகத்தை ஜீவனோடு எழும்பச் செய்யும் நம்முடைய ஆண்டவரின் வேலையோடு இணைந்து செயல்பட வாய்ப்புக் கிடைக்கும். நமக்கு முன் வைக்கப்பட்டிருக்கும் சிறப்புரிமை எப்படிப்பட்டது! இதற்கிடையில், வெளிச்சத்தைக் கண்டு, தேவனை மகிமைப்படுத்தும்படியாக, மற்றவர்கள் ஈடுபலியைக் குறித்தும் சீர்பொருந்தலைப் பற்றியும், தேவனுடைய திட்டங்களைப் பற்றியும் சத்தியங்களையும் பிரஸ்தாபிக்கக்கடவோம்.

தேவனுடைய பரிசுத்த ஆவியின் பலத்திற்காகவும், வழி நடத்துதலுக்காகவும், எப்போதும் நாம் ஜெபத்தில் தரித்திருப்போம். விசேஷமாக, தரிசனம் நெருங்கிவந்து நிறைவேறும் காலம் சமீபித்திருப்பதினால், தேவனுடைய வார்த்தைகளைப் புரிந்துகொள்வதன் முக்கியத்து வத்தை ஒரு காலமும் நாம் குறைத்துக் கொள்ள வேண்டாம்.

# உலகளாவிய ஆபத்து

"சேனைகளின் கர்த்தராகிய ஆண்டவராலே இது தரிசனப் பள்ளத்தாக்கிலே அமளியும், மிதியுண்குதலும், கலக்கமுமுள்ள நாளாயிருக்கிறது; இது அலங்கத்தைத் தகர்த்து, பர்வதத்துக்கு நேரே ஆர்ப்பரிக்கும் நாளாயிருக்கிறது" (ஏசா. 22:5).

உலகளாவிய பொருளாதார மன்றம் (WEF) முதல் முறையாக, 2005-ம் ஆண்டில் வெளியிட்ட இந்த உலகளாவிய ஆபத்து என்னும் அறிக்கையானது உலகிலேயே மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒரு அறிக்கையாகும். இந்த அறிக்கையானது, எதிர்கால சவால்களை சந்திக்கவும் பல பங்கேற்புகளுடன் தொடர்பு கொள்ளவும், பல வியாபாரிகளாலும், அரசாங்கத்தாலும், சமுதாயத்தாலும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகிறது. பலவிதமான விரிவான ஆராய்ச்சிகள் மூலம் தொகுப்பாளர்கள் இன்னும் 10 வருடங்களில் நிகழக்கூடிய பல எதிர்மறையான தாக்குதல்களான 31 ஆபத்துகளை ஐந்து வகையாகப் பிரித்துள்ளனர். பொருளாதாரம், சுற்றுச்சூழல், பூலோக அரசியல், சமுதாயம் மற்றும் தொழில் நுட்பம். உலகிலுள்ள எல்லா நாடுகள் மற்றும் தொழில் கூடங்களிலும் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் மூலம் கூறப்பட்டுள்ள ஆபத்துகளைவிட அதின் உண்மையான தாக்குதல் இன்னும் தீவிரமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. கருத்தில்கொள்ள வேண்டிய மிக முக்கியமான, 2014-ல் நடக்கக்கூடிய பத்து ஆபத்துகளை கீழ் அட்டவணையில் காணலாம்.

### ஒரு புது மிரட்டல்

முதல் பத்து ஆபத்துகளில் கூறப்பட்டுள்ள பல விஷயங்கள் புதியதாக மற்றும் ஆச்சரியமானதுமாக இருக்கலாம். உதாரணமாக, பொருளாதாரம் மற்றும் சமுதாயத்தினால் நிகழப்போகும் தாக்குதலில் ஏழைகள் மற்றும் பணக்காரர் மத்தியில் மாத வருமானத்திற்குரிய இடைவெளியானது மிகப் பெரிய அளவில் வித்தியாசப்பட்டுக் கொண்டிருக்கிறது. அடுத்ததாக, சூறாவளி, சுனாமி மற்றும் உச்சநிலை வானிலை நிகழ்வுகளால் ஏற்படும் சேதாரங்களை நாம் கவனித்துக்கொண்டு வர வேண்டும்.

### 2014-ல் நிகழக்கூடிய பத்து உலகளாவிய நெருக்கடிகள்

(1) முக்கியமான பொருளாதாரத்தில் நிகழக்கூடிய நிதி இடர்பாடுகள்

(2) மிகப்பெரிய அளவில் வேலையில்லா திண்டாட்டம் அல்லது குறைந்த ஊதியத்தில் வேலைப் பார்க்கும் நிலமை

(3) தண்ணீர் தட்டுப்பாடு

(4) மிகக் கடுமையான வருமான ஏற்றத்தாழ்வு

(5) சட்டதிட்ட மாற்றங்களினால் ஏற்படும் தோல்விகள்

(6) உச்சக்கட்டமான சீதோஷ்ணத்தினால் ஏற்படும் பெரிதான நிகழ்வுகள்

(7) உலகளாவிய ஆளுகையில் ஏற்படும் தோல்விகள்

(8 )உணவு பற்றாக்குறை

(9)தொழில்நுட்ப மற்றும் நிறுவனத்தின் நிதியினால் ஏற்படும் தோல்விகள்

(10) அரசியல் மற்றும் சமுதாயத்தில் ஏற்படும் ஒரு நிலையற்ற தன்மை

இந்த ஆராய்ச்சி 2013-ம் வருடம் அக்டோபர் மாதம் மற்றும் நவம்பர் மாதங்களில் நிகழ்த்தப்பட்டது. World Famine Forum மற்றும் Partner companies, members of the Network of Global Agenda Councils and Global Shapers and Young Leaders போன்ற அமைப்பிலிருந்து 700 பிரதிநிதிகள் இந்த ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். 31 நெருக்கடிகள் இருந்த பட்டியலிலிருந்து இந்த பத்து நெருக்கடிகள் தேர்ந்தெடுக்கப்பட்டது.

மேலும், இந்த பத்து நெருக்கடிகளில் இடம் பெறாத இன்னும் ஒரு முக்கியமான நெருக்கடி ஒன்று உண்டு. 2013-ல், கூறப்பட்ட தொழில் ரீதியான நெருக்கடி, பல தொழில் நிறுவனங்களில் இன்று இணையத்தளம் தாக்குதல் (cyber-attacks) வளர்ந்து கொண்டே இருக்கிறது. எடுத்துக்காட்டாக, டார்கெட், அடோபெல், JPமார்கேன் சேஸ் போன்ற நிறுவனங்கள். மேலும் US நேஷனல் செக்யூரிட்டி ஏஜன்சிஸ் (NSA)-யின் பல இரகசியங்களை எட்வர்ட்

ஸ்நோடென் என்பவர் வெளிப்படுத்தினார். மேலும், கூகுள், ஆப்பிள் மற்றும் மைக்ரோ சாப்டின் பல தகவல்கள் தொலைபேசியின் மூலம் ஒட்டுக் கேட்கப்பட்டது. ஊடுவலை (இன்டர்நெட்) மூலம் தொடர்பு கொள்ளும் பல தகவல்கள் வெளியிடப்பட்டு தொழில் ரீதியாக சிக்கல்களை உருவாக்கின. இவை அனைத்து மேற்கூறப்பட்ட பத்து நெருக்கடிகளில் இடம் பெறவில்லை. தகவல்களை (bata) தவறான முறையில் பயன்படுத்துவதாலும் அந்தரங்க தலையீடுகள் பல இருப்பதாலும் வலைதளத்தில் உள்ள நம்பிக்கை கொஞ்சம் கொஞ்சமாய் குறைந்து கொண்டே போகிறது என்கிறார் Zurich Insurance-ல் உயர் பணியாளரான Axel P. Lehmann மேலும் அவர் கூறுகையில், இது தொழில் ரீதியான பிரச்சனை மட்டுமல்ல, ஒவ்வொரு மனிதனையும் தாக்கக்கூடிய பிரச்சனை என்று கூறுகிறார். வளைத்தளம் உபயோகிப்பவர்களில் 70% மக்கள் தாக்கப்படுகின்றனர். சில நிறுவனங்கள் தாங்கள் தாக்கப்படுகிறோம் என்று அறிந்துகொள்ள 230 நாட்கள் ஆகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

**மற்ற குறிப்பிடத்தக்க நெருக்கடிகள்**

இன்றைய உலகம் ஒரு நிச்சயம் இல்லாத ஒரு இடம் என்று அந்த அறிக்கை உறுதிபடுத்துகின்றது. மேம்பட்ட அகதிகள் பல ஆதிக்கம் செய்யும் இந்த சகாப்தத்தில் பல மண்டல ரீதியான முரண்பாடுகள் நடந்துகொண்டு இருக்கிறது. இராணுவத்தினால் நடக்கும் போர்களைவிட இனம் மற்றும் பொருளாதாரரீதியாக நடக்கும் முரண்பாடுகளை இன்றைய உலகில் பலவிதங்களில் கைகலப்பை உண்டாக்குகிறது. உக்ரேன் இப்படிப்பட்ட சக்கரங்களால் தான் ஆட்கொள்ளப்பட்டிருக்கிறது. உலகிலுள்ள மற்ற நாடுகள் அதே பாதையை நோக்கி செல்கின்றன. உக்ரேனில் இருக்கும் வேலையில்லா பிரச்சனை மிகக்குறைவான ஊதியத்தில் வேலை செய்யும் இளைஞர்கள் போன்ற பல பிரச்சனைகளில் உலகில் நிலையற்ற தன்மைக்கு ஒரு அச்சுறுத்தலாக உள்ளது.

இவை அனைத்தும் போதாதென்பதைப் போல, இன்னும் பத்தாண்டுகளுக்குள் இந்த சமுதாயம் பாழாக்கப்படுவதற்கு அதிகபட்சமான கடன்களினால் அரசாங்கத்தில் ஏற்படும் அபாயமானது உலகளாவிய அளவில் அரசாங்கம் அனைத்தும் ஒரேவிதமான பேராபத்தில் நொறுங்கி நசுக்கப்படும் அபாயத்தை நோக்கி செல்வதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முழுமையான 700 வல்லுநர்கள் Marsh McLennan, Swiss Re, Oxford மற்றும் சிங்கப்பூர் பல்கலை கழகம் மற்றும் US Wharton Risk Management பள்ளிகள் போன்ற இடங்களின் பிரதிநிதிகள் ஒரு பட்டியலை வரிசைப்படுத்தினார்கள். இவர்கள் பொருளாதார தோல்வியையே தங்களுடைய மிகுந்த பயம் என்று கூறினார்கள். "இந்த குறிப்பில் கருதப்படும் ஒவ்வொரு அபாயத்திலும் உலகளாவிய கோலின் வீழ்ச்சி வளர்ச்சியடைகிறது. இந்த அபாயங்கள் இயற்கையாகவே ஒன்றோடு ஒன்று இணைக்கப்படுவதினால் தங்களுடைய பின்னேற்றத்திற்கான செயல்கள் மிகத்தெளிவாகக் காணப்படுகிறது" என்று Jennifer Blanke என்ற தலைமை பொருளாதார WEF-ல் கூறினார்.

**உலகளாவிய கடும் துன்பம்**

1914-ம் வருடத்திலிருந்து இந்த உலகம், "உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்; யாதொரு ஜாதியாரும் தோன்றினதுமுதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்; அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்" (தானி. 12:1) என்ற வேதாகம தீர்க்கதரிசனம் மேல் கூறப்பட்டுள்ள கருத்தை ஆதரிக்கிறது. இந்த உலகம் ஒரு உண்மையான உலகளாவிய தொடர்புகளுக்காக உருமாற்றப்படும்போது, தேசங்கள் தங்களுக்குள் உள்ள தொடர்புகளை இழக்கிறார்கள். இக்காலத்து தொழில் நுட்பம், தொடர்ந்து கலந்துரையாடவும், உடனடியாகவும் ஜனங்களையும் சந்தைகளையும் (marketing) அனுமதிக்கிறது. செய்திகளும் நிதிகளும் தடையின்றி வேகமாக உலகத்தில் எல்லா மூலைகளிலும் பாய்ந்து செல்கிறது. இதற்கு ஏற்றபடி எதிரிடையான உலகளாவிய ஆபத்துகளும் மிக வேகமாக வளர்ச்சியடைந்து கொண்டுவருகிறது. இது எதிர்பார்த்திராததும் அல்ல நோக்கமில்லாததுமல்ல. விரைவில் ஒரு தெய்வீக குறுக்கீடுக்காக யேகோவா தேவன் ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார். "நான் கொள்ளையாட எழும்பும் நாள்மட்டும் எனக்குக் காத்திருங்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்; என் சினமாகிய உக்கிர கோபத்தையெல்லாம் அவர்கள்மேல் சொரியும்படி ஜாதிகளைச் சேர்க்கவும், ராஜ்யங்களைக் கூட்டவும் நான் தீர்மானம்பண்ணினேன்; பூமியெல்லாம் என் எரிச்சலின் அக்கினியினால் அழியும்" (செப். 3:8). செப்பனியா தீர்க்கதரிசி நம்முடைய நாட்களைக் குறித்து கூறினார். சாட்சி கொடுத்து பூமிக்குரிய காரியங்களையும் தேவனுடைய ஏற்பாடுகளைக் கொண்டு மாற்றுவதற்கு ஜாதிகளும் இராஜ்யங்களும் திரட்டப்பட்டு ஒன்று சேர்க்கப்படுவார்கள்.

"திரளான ஜனங்களின் சத்தத்துக்கொத்த வெகு கூட்டத்தின் இரைச்சலும், கூட்டப்பட்ட ஜாதிகளுடைய ராஜ்யங்களின் அமளியான இரைச்சலும் மலைகளில் கேட்கப்படுகிறது; சேனைகளின் கர்த்தர் யுத்தராணுவத்தை இலக்கம்பார்க்கிறார். கர்த்தர் வருகிறார்; அவருடைய கோபத்தின் ஆயுதங்களும், தேசத்தையெல்லாம் அழிக்க, வானங்கவிழ்ந்த கடையாந்தர தேசத்திலிருந்து வருகிறது. அலறுங்கள், கர்த்தரின் நாள் சமீபமாயிருக்கிறது; அது சர்வவல்லவரிடத்திலிருந்து மகா சங்காரமாய் வரும்" (ஏசா. 13:4-6). இந்த "கடைசி நாட்கள்" தேசங்கள் மேல் வரும் பேராபத்துகளில் ஒவ்வொரு கட்டமும் சாத்தானுடைய ஆட்சியைப் புறக்கணிக்கும்.

முதலாம் உலகப்போர், மனுஷன் இதுவரையிலும் கண்டிராத எல்லா உபத்திரவங்களுக்கும் ஒரு துவக்கம் என்றும், இரண்டாவது உலகப்போர் சற்று தாமதித்து போர் நடவடிக்கைகளின் மறு துவக்கம் என்றும் சமய வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகிறார்கள். இவையனைத்தும், "அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்; அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களைச் சர்வவல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்குக் கூட்டிச் சேர்க்கும்படிக்குப் புறப்பட்டுப் போகிறது" (வெளி. 16:14) நடைபெற வேண்டும். இதன் விளைவாக முழு நாகரீகமும் வலிமையற்றுப் போனது.

"சமாதானமும் சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது, கர்ப்பவதியானவளுக்கு வேதனை வருகிறதுபோல, அழிவு சடிதியாய் அவர்கள்மேல் வரும்; அவர்கள் தப்பிப்போவதில்லை" (1 தெச. 5:3) என்று பவுல் கூறுகிறார். இந்த வேதனை சடுதியில் வரும். வரக்கூடிய இந்த வேதனை காலை இடைவேளையில் படிப்படியாக அதிகரித்துக் கொண்டே போகும். 1914-ம் வருஷம், "புறஜாதியாரின் காலங்களின்" முடிவிலிருந்து இப்படிப்பட்ட ஒரு முறையில் சம்பவங்கள் நடந்துகொண்டு வருகிறது.

முடிவு காலத்தில் "வானத்தின் சத்துவங்கள் அசைக்கப்படும்; ஆதலால் பூமியின் மேல் வரும் ஆபத்துகளுக்குப் பயந்து எதிர்பார்த்திருக்கிறதினால் மனுஷருடைய இருதயம் சோர்ந்துபோம்" (லூக். 21:26) என்று வசனங்கள் கூறுகிறது. "உலகம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையின் பொருள் "பூமி நிலம் அல்லது தண்ணீரிலிருந்து பிரிக்கப்பட்ட பகுதி" என்று பொருள்படுகிறது. இது ஜனங்கள் குடியிருக்கும் இடமாகும். "ஜனக்கூட்டங்கள் திரளான தண்ணீர்கள் இரைகிறதுபோல இரைந்தாலும், அவர்களை அவர் அதட்டுவார்; அவர்கள் தூரமாய் ஓடிப்போவார்கள்; மலைகளிலே காற்றினால் பறக்கடிக்கிறபதரைப்போலவும், சுழல்காற்றிலே அகப்பட்ட துரும்பைப்போலவும் துரத்தப்படுவார்கள்" (ஏசா. 17:13).

அந்த புயல் பயங்கரமாக இருக்கும். இது மனித சமுதாயத்தை மொத்தத்தில் சமப்படுத்தும் (ஏசா. 40:4). இப்போதைய உலகளாவிய ஆபத்துகள் எந்தளவுக்கு சமநிலையை ஏற்படுத்தும் என்று நாம் பார்க்க வேண்டும். ஆயினும், இந்த புயலில் அமைதி ஏற்படும். அப்பொழுது ஒரு "மெல்லிய சத்தம் உண்டாகும்" (1 இரா. 19:12). இது, "கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன் என்று அவர்களுக்குச் சொன்னார்" (மாற். 4:9) என்று கூறும் தேவனுடைய சத்தமாக இருக்கும்.

"மோசே ஜனங்களை நோக்கி: பயப்படாதிருங்கள்; நீங்கள் நின்றுகொண்டு இன்றைக்குக் கர்த்தர் உங்களுக்குச் செய்யும் இரட்சிப்பைப் பாருங்கள்; இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தியரை இனி என்றைக்கும் காணமாட்டீர்கள்" (யாத். 14:13) என்ற வரவேற்பின் வார்த்தைகள் அப்பொழுது அறிவிக்கப்படும். இக்காலத்து உலகத்தை முடிவுக்குக் கொண்டுவந்து சகலவித ஆபத்துகளையும் தெய்வீக தலைமை வேரோடு அகற்றி துன்பப்படக்கூடிய இந்த உலகத்திற்கு உண்மையான சமாதானத்தைக் கொண்டுவரும்.

விரைவில் அந்த காலம் வரும்படியாக அனைவரும் ஜெபிப்போமாக!